# திருவள்ளுவரும் பரிமேலழகரும்

UNIVERSITY EXTENSION LIBRARY
22 FEB 1961
MADURAI

நாமக்கல் கவிஞர்

கிடைக்குமிடம்
பாரதி புத்தக நிலையம்
மதுரை

இன்ப நிலையம்
மயிலாப்பூர் :: சென்னை-4.

முதற் பதிப்பு : ஜனவரி, 1956.
இரண்டாம் பதிப்பு : மே, 1959.
உரிமை பதிவு செய்யப் பெற்றது.

UNIVERSITY EXTENSION LIBRARY
22 FEB 1961
MADURAI

விலை ரூ. 1—50

14382
031:1B5:9
J91

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.

# பதிப்புரை

'திருவள்ளுவரும் பரிமேலழகரும்' என்ற இந்த நூலில், திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளுக்கு, பரிமேலழகர் பல இடங்களில் பொருந்தாத உரை செய்திருக்கிறார் என்பதைத் தகுந்த ஆதாரங்களோடு நாமக்கல் கவிஞர் அவர்கள் விளக்கியுள்ளார்கள்.

கவிஞர் அவர்கள் எழுதியுள்ள 'திருக்குறள் புது உரை'க்கு மறுப்புக் கூறிவரும் சிலருக்கும் இந் நூலில் பதிலளித்துள்ளார்கள். பயன்மிக்க ஆராய்ச்சி நூலாகிய இதை வெளியிட அனுமதியளித்த கவிஞர் அவர்களுக்கு எங்கள் அன்பு கலந்த நன்றி.

சோம. சுவாமிநாதன்,

இன்ப நிலையம்.

# நாமக்கல் கவிஞர் எழுதிய நூல்கள்

★

திருக்குறள் புது உரை

வள்ளுவரின் உள்ளம்

திருவள்ளுவர் திடுக்கிடுவார்

தமிழ் மொழியும் தமிழரசும்

தேசபக்தர் மூவர்

தமிழ்த் தேன்

கீர்த்தனங்கள்

தமிழன் இதயம்

சங்கொலி

கவிஞன் குரல்

இசைத் தமிழ்

மாமன் மகள்

அவளும் அவனும்

மலைக் கள்ளன்

காந்தி அஞ்சலி

திருக்குறள் கருத்துரை

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# திருவள்ளுவரும்—பரிமேலழகரும்

" எதற்காகத் திருக்குறளுக்குப் புது உரை?" என்றார், கல்வி கேள்விகளிற் சிறந்தவராகிய ஒரு அன்பர்.

" திருக்குறளுக்குச் சரியான உரை இல்லை. அதற்காக" என்றேன்.

" ஏன் பரிமேலழகர் உரைக்கு என்ன ?" என்றார்.

" பரிமேலழகர் உரைதான் பழைய உரைகள் எல்லாவற்றிலும் சிறந்த உரை. ஆனால், அவருடைய உரையும் கூடத் திருவள்ளுவருடைய கருத்துக்களுக்கு ஒத்ததாக இல்லை" என்றேன்.

" அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள் ? பரிமேலழகர் பல சாஸ்திரங்களையும் ஆராய்ந்து சுருதிகளுக்கு ஒத்தபடி உரை செய்திருக்கிறார். அப்படிப்பட்ட உரையை சரியான உரையல்லவென்பது ....................." என்று வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்திக்கொண்டார்.

அப்படி அவர் நிறுத்திக்கொண்டது என்மீது கடுப்பான சொல் எதையும் பிரயோகிக்கக் கூடாது என்ற கருணையினால்தான் என்று கருதிய நான்,

" பரிமேலழகர் நான் வணங்கவேண்டிய பெரியவர்; அவரை நான் அவமதிப்பதாகத் தாங்கள் நினைத்துவிடக் கூடாது. பரிமேலழகர் ஆழ்ந்த சாஸ்திர ஆராய்ச்சி

யுடையவர்தாம். ஆனால், பரிமேலழகர் மேற்கோளாகக் கொண்ட சாஸ்திரத்தைப் பின்பற்றித் திருக்குறள் எழுதப் பட்டதல்லவென்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. அதனால் பரிமேலழகர் உரை திருவள்ளுவருடைய கருத்துக் களுக்குப் பொருத்தமில்லை'' என்றேன். உடனே அவர், "'நான் சொல்லுகிற உரைதான் திருவள்ளுவருடைய கருத்துகளுக்குச் சரியாக இருக்கும்' என்று நீங்கள் உங்கள் முன்னுரையில் சொல்லி யிருக்கிறீர்களே, அதென்ன தைரியம் ?'' என்றார்.

இந்தக் கேள்விக்கு அர்த்தம் 'பரிமேலழகர் உரை சரியான உரையல்ல' என்று சொல்ல உனக்கென்ன அவ்வளவு துணிச்சல் (அல்லது அகந்தை) என்பதுதான். "பரிமேலழகர் உரை திருக்குறள் மூலத்துக்குப் பொருந்த வில்லை என்பதுமட்டுமன்றி பகவத்கீதை முதலான ஞான நூல்களுக்கும் விரோதமாக இருக்கிறதே ?'' என்றேன்.

" பரிமேலழகர் உரையை நான் நன்றாகப் படித்திருக் கிறேன். அது பகவத்கீதைக்கு விரோதமாக இருப்ப தாகத் தெரியவில்லை'' என்றார்.

பரிமேலழகர் உரை எப்படிப் பகவத்கீதைக்கு முரண் படுகிறது என்பதை நான் விளக்கத் தொடங்கினேன். அவரும் அதைக் கேட்க விரும்பினார். அந்தச் சமயத்தில் வேறு முக்கியமான விஷயங்களை அவசரமாகப் பேச வேண்டிய சில அன்பர்கள் அங்கே வந்தார்கள். அதனால் இந்தப் பேச்சு அத்துடன் நின்றுவிட்டது.

இப்படித் 'திருக்குறள் புது உரை' என்ற நூலை, அது பரிமேலழகரைப் பழிப்பதற்கென்று வெறும் அகந்தையால் எழுதப்பட்டதுபோல் எண்ணிக்கொண்டு அருவருப்புக் காட்டுகின்றவர்கள் உண்டு. பழைய உரை களை மாற்றக்கூடாது என்றதைமட்டும் மனதிற் கொண்டு விட்டதால் புது உரைகளைப் பாரபட்சமில்லாமல் ஆராயவும் அமைதி கொள்ள முடியாது. அப்படிக் கடின சித்தம் கொண்டுவிடாமல் இந்தக் கட்டுரையைப் படித்தால் 'எதற் காகத் திருக்குறளுக்குப் புது உரை ?' என்ற கேள்வி களுக்குச் சரியான விடை காணலாம்.

திருக்குறளுக்கு நான் கண்டுள்ள 'புது உரை'யில் பரிமேலழகருடைய உரை பல இடங்களில் திருவள்ளுவருடைய கருத்துக்குத் தீங்கிழைப்பதை உணர்ந்து அந்த இடங்களிலெல்லாம் முற்றிலும் வேருன உரைகளைச் சொல்லியிருக்கிறேன்.

அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக என்னுடைய 'திருக்குறள் புது உரை' என்ற புத்தகத்திலுள்ள என் முன்னுரையில் இந்தத் 'தவம்' என்ற அதிகாரத்தைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன். ஏன் என்ருல் இந்த அதிகாரத்திலுள்ள ஒரு குறளைத் தவிர மற்ற ஒன்பது குறள்களுக்கும் பரிமேலழகர் உரைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட உரைகள் சொல்லப்பட்டுள்ளன. இந்த அதிகாரத்தின் அமைப்பையும் இதன் நோக்கத்தையும் பரிமேலழகர் காணத் தவறிவிட்டார். அதனுல் திருவள்ளுவர் முன்னுக்குப் பின் முரணுன கருத்துக்களைச் சொல்லுவதாகத் தோற்றமளிக்கிறது—பரிமேலழகரின் உரை.

இந்த அதிகாரத்துக்கு நான் செய்துள்ள உரைகள் தாம் திருவள்ளுவருடைய கருத்துக்குப் பொருத்தமானவை என்பதைப் பல அறிஞர்கள் பாராட்டுகிருர்கள் என்ருலும் 'பரிமேலழகர் உரைக்குப் பழுது சொல்ல இவன் யார்' என்ற மனப்பான்மையுடன் என்னைக் கடிந்து பேசுகின்றவர்களும் உண்டு. அவர்களிற் சிலர் அந்தக் கோபத்தைப் பத்திரிகைகளில் வெளியிட்டுள்ளதையும் பார்த்தோம்.

பரிமேலழகர் நாம் வணங்கவேண்டிய மிகவும் பெரியவர். அவர் தோன்றியிராவிட்டால் உலக இலக்கியங்களுக்குள் தலைசிறந்த இலக்கியமாகிய திருக்குறள் இந்த வடிவத்தில் நமக்குக் கிடைத்திருக்காது. மூலக் குறள்களின் வைப்பு முறைகளும் தடுமாறிச் சிதைந்து கிடந்த திருக்குறளைச் செப்பனிட்டுத் தந்த அழியாப் புகழ் அவருக்கே உரியது. ஆனுலும் என்ன ? அவரும் அவருக்கு முன்னுலிருந்தவர்கள் இயற்றியிருந்த உரைகளைப் பின்பற்றி, உரைகளைச் சொந்தமாக ஆராயாமல், தவருன உரைகளைத் தந்துவிட்டார் என்பதை எடுத்துச் சொல்லக்கூடாதா ? 'நெற்றிக் கண் திறந்தாலும் குற்றம் குற்றம்தான்' என்ற பரம்பரையில் வந்த நாம் இதை ஒத்துக்கொண்டால்

என்ன ? பரிமேலழகர் மிகப் பெரிய உரையாசிரியர்தான். ஆனால், திருக்குறள் அவரைவிட மிகப் பெரிய விஷயம் அல்லவா ? பரிமேலழகர்மீது நமக்குள்ள பாசத்தால் திருக் குறளுக்குத் தீங்குவரச் செய்யலாமா ?

திருக்குறளுக்கு உரை சொல்லும்போது, திரு வள்ளுவர் எதைக் கருதியிருக்கிறார் என்பதை ஆய்ந் தறிந்து சொல்ல வேண்டும். திருவள்ளுவர் கருத்தை அறிந்துகொள்ள முடியாமல் சொந்த யுக்தியைக்கொண்டு உரைசெய்துவிட்டாலும், திருவள்ளுவர் எதைச் சொல்ல மாட்டாரோ அதைச் சொல்லிவிடாமலாவது உரை காண வேண்டும். பரிமேலழகர் உரையில் அநேக இடங்களில் திருவள்ளுவருடைய கருத்தை ஆராயாமல் அவர் எண்ணாத உரைகள் எழுதப்பட்டிருக்கின்றன என்பது மட்டுமன்றிச் சில இடங்களில் திருவள்ளுவர் எதைச் சொல்லவே மாட்டாரோ அதை உரையாகச் சொல்லப் பட்டிருக்கிறது. திருவள்ளுவர் எதைச் சொல்லமாட்டார் என்பது உண்மையை நாடுகின்ற எல்லாருக்கும் எளிதிற் புலனாகும். திருக்குறள் முழுவதிலும் மிகவும் உச்சமான அறவொழுக்கம்தான் சொல்லப்படுகிறது. அற ஒழுக்கத் துக்கு மாறான எதையும் திருவள்ளுவர் சொல்லமாட்டார் என்ற ஒன்றே திருவள்ளுவர் எதைச் சொல்லியிருக்க மாட்டார் என்ற உணர்ச்சியை உண்டாக்கும்.

திருவள்ளுவர் எதைச் சொல்லியிருக்கவே மாட்டார் என்று நாம் நிச்சயமாகக் கூற முடியுமோ அதையே பரிமேலழகர் திருக்குறளுக்கு உரையாகச் சொல்லியிருப் பதை நிரூபிக்க ஒரு உதாரணத்தை மட்டும் உடனே காட்டிவிட்டுப் பின் எடுத்துக்கொண்ட 'தவம்' என்ற அதிகாரத்தை ஆராய்வோம்.

உலகத்தில் மனிதனுக்கு மனிதன் என்ற முறையி லாவது அரசனுக்கு அரசன் என்ற முறையிலாவது ஏதேனும் விவகாரம் ஏற்பட்டால் முதலில் அந்த விவகாரத் தைச் சமாதான முறையிலேயே தீர்த்துக்கொள்ள முயல வேண்டும். அது முடியாமற்போனால் சிறிது விட்டுக் கொடுத்து 'தானம்' என்ற முறையிலாவது தீர்த்துக்

கொள்ள முயல வேண்டும். அதுவும் முடியாவிட்டால் 'பேதம்' என்ற முறையில் 'எதிரிக்குச் சொல்லக்கூடிய வர்களைக்கொண்டு அவன் மனதைபேதித்து இளம்கும்படி செய்ய முயலவேண்டும். அது முடியாது என்று தீர்மானமாகத் தெரிந்துவிட்ட பிறகுதான் 'தண்டம்' என்ற போர் முறையில் இறங்கவேண்டும். இதைத்தான் சாம, தான, பேத, தண்டம் என்று சொல்லுவது. இன்றளவும் உலகத்தில் தோன்றிய எல்லா இலக்கியங்களும் அறிஞர்களும் போதித்து வந்திருக்கிற செயல்முறைக்கான நல்லறிவு இதுதான். இதற்கு முற்றிலும் விரோதமாக முடியுமானல் முதலில் உடனே போர் தொடுத்து தண்டோபாயத்தால் காரியத்தை முடித்துக்கொள்ளவேண்டும். அப்படிப் போர் செய்ய முடியாவிட்டால் மட்டும் பேதம், தானம், சாமம் என்ற மற்ற மூன்று உபாயங்களில் ஒன்ருல் காரியத்தை முடித்துக்கொள்ளவேண்டும் என்று திருவள்ளுவர் சொல்லியிருப்பாரா ? சொல்லியிருக்கவே மாட்டார் என்றுதான் திருக்குறளைச் சிறிதேனும் அறிந்த யாரும் சொல்லுவார்கள். ஆனல், திருவள்ளுவர் இப்படியே சொல்லியிருப்பதாகப் பரிமேலழகர் சொல்லுகின்ருர். அதுவும், மிக்க அசம்பாவிதமாகச் சொல்லத் தகாத இடத்தில் சொல்லுகின்ருர்.

அது எங்கே சொல்லப்படுகிறது, எப்படிச் சொல்லப் படுகிறது என்பதைப் பாருங்கள்: காரியம் செய்ய வேண்டிய முறையைப் பற்றியனவாக 'வினைத்தூய்மை', 'வினைத்திட்பம்', 'வினைசெயல்வகை' என்று மூன்று அதிகாரங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. 'வினைத் தூய்மை' என்ற அதிகாரம் ஒவ்வொரு மனிதனும் அவன் செய்யப் போகிற காரியம் குற்றமற்றதா என்பதை முதலில் ஆராய்ந்து அறிந்துகொண்ட பின்பே அதைச் செய்ய முயலவேண்டும் என்ற அறிவைப் புகட்டுவது. எவ்வளவு இலாபமுண்டாக்கக் கூடியதானலும் பழி பாவங்களான எதையும் செய்யக்கூடாது என்பது இவ்வதிகாரத்தின் போதனை. அப்படி ஆராய்ந்து பார்த்துத் தூய வினைதான் என்று கண்டபின் அதைச் செய்து முடிக்கவேண்டிய காரிய வைராக்கியத்தை மேற்கொள்ள வேண்டும்

என்பதைப் புகட்டுவது 'வினைத்திட்பம்' என்ற அடுத்த அதிகாரம். அதன் பிறகு செய்யப் புகுந்த காரியத்தை எப்பொழுது செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டும், யாரைக் கொண்டு செய்யவேண்டும், எங்கே செய்ய வேண்டும் என்பனபோன்ற விவரங்களைப் புகட்டுவது 'வினைசெயல் வகை' என்ற அதிகாரம். இந்த 'வினை செயல் வகை' என்ற அதிகாரத்திலுள்ள மூன்ருவது குறளுக்கு உரை சொல்லும்போதுதான் பரிமேலழகர், எதைத் திருவள்ளுவர் சொல்லவே மாட்டாரோ அதைச் சொன்னதாகச் சொல்லுகிருர். இந்த அதிகாரத்தின் முதற் குறள் :

> சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
> தாழ்ச்சியுள் தங்குதல் தீது

என்பது. இதன் பொருள் : ஆலோசனை செய்வதன் முடிவு ஒரு காரியத்தை, அது செய்ய வேண்டியதுதான என்று தீர்மானிப்பதுதான். செய்ய வேண்டியது என்று தீர்மானித்துவிட்டால் அதன் பிறகு அதைத் தாமதிக்காமல் செய்துவிட வேண்டும். தாமதிப்பது கெடுதி—என்பது.

ஆனல், செய்ய வேண்டுமென்று தீர்மானித்த காரியத்தைத் தாமதிக்காமல் செய்யவேண்டும் என்றதற்காக எல்லாக் காரியத்திலும் ஒரே மாதிரியான அவசரம் காட்டி விடக் கூடாது. ஏனென்ருல் செய்யவேண்டியது என்று தீர்மானிக்கிற காரியங்களுள் பொறுத்து நிதானமாகச் செய்யவேண்டிய காரியங்களும் உண்டு. அதனல் :

> தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
> தூங்காது செய்யும் வினை

என்று அடுத்த குறளில் சொல்லுகின்ருர். இதன் பொருள் : பொறுத்து நிதானமாகச் செய்யவேண்டிய காரியங்களில் அவசரம் கூடாது, உடனே செய்யவேண்டிய காரியங்களில் தாமதம் கூடாது—என்பது.

என்ருலும், பொறுத்து நிதானமாகச் செய்யவேண்டும் என்று எண்ணிய காரியத்துக்கும் வாய்ப்பு நேர்ந்து

விட்டால் அதையும் உடனே செய்துவிடுவது நல்லது. வாய்ப்பு நேர்ந்தால்தான். வாய்ப்பு நேராவிட்டால் அதற்குரிய தருணம் வருகிறவரையிலும் பொறுத்திருந்தே செய்யவேண்டுமென்று அடுத்த குறளில் சொல்லுகின்றார்:

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்

இதன் பொருள்: வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் காரியத்தைச் செய்துவிடுவது நல்லதுதான். வாய்ப்பு கிடைக்காவிட்டால் காத்திருந்து வாய்ப்பான தருணத்தில் செய்யவேண்டும்—என்பதே.

மேற்சொன்ன மூன்று குறள்களுக்கும் திருவள்ளுவர் கருதிய பொருள்கள் மேலே சொல்லப்பட்டவைகளாகத் தான் இருக்க முடியும். விதண்டாவாதமாகக் குதர்க்கம் செய்தாலன்றி இந்தக் குறள்களுக்கு வேறு பொருள் சொல்ல மனம் வராது. இந்த மூன்று குறள்களுள் முதலிரண்டு குறள்களுக்கும் சரியாக உரை சொன்ன பரிமேலழகர் மூன்றாவது குறளில் 'வினை' என்ற சொல்லுக்குப் 'போர்' என்று பொருள் செய்து முன் சொன்னபடி மிகவும் அசம்பாவிதமாகத் திருவள்ளுவர் எதைச் சொல்லியிருக்கவே மாட்டாரோ அதைச் சொல்லியிருப்பதாகக் கூறுகின்றார்.

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தந்துள்ள உரையைப் பாருங்கள் :

பத உரை : ஒல்லும் வாய் எல்லாம் வினை நன்று= வினை செய்யுங்கால் இயலுமிடத்தெல்லாம் போராற் செய்தல் நன்று; ஒல்லாக்கால் செல்லும் வாய் நோக்கிச் செயல் — அஃதியையாவிடத்து ஏனை மூன்று உபாயத்துள்ளும் அது முடிவதோர் உபாயம் நோக்கிச் செய்க— என்பது.

இதற்கு மேலும் அவர் தரும் விசேட விளக்க உரையாவது : 'இயலுமிடம்-பகையிற்றான் வலியனுய காலம். அக்காலத்துத் தண்டமே. நன்றென்றார், அஞ்சுவது அதற்கேயாகலின், இயலாவிடம்-ஒத்த காலமும் மெலிய

காலமும். அவ்விரண்டு காலத்தும் சாம, பேத, தானங்களுள் அது முடியும் உபாயத்தாற் செய்க வென்ருர், அவை ஒன்றற்கொன்று வேறுபாடுடையவேனும் உடம்படுத்தல் பயத்தால் தம்முள் ஒக்குமாகலின். இதனுல் வலியான், ஒப்பான், மெலியானென நிலை மூவகைத்தென்பதூஉம், அவற்றுள் வலியது சிறப்பும் கூறப்பட்டன'—என்பது.

இந்தப் பதவுரையும் விளக்க உரையும் சேர்ந்து என்ன சொல்லுகின்றனவென்ருல்: 'உன்னுல் இயலும்போதெல்லாம் முதலில் தண்டோபாயத்தைக் கொண்டே உன் காரியங்களைச் சாதித்துக்கொள்வது நல்லது ஏனென்ருல் அதற்குத்தான் யாரும் அஞ்சுவார்கள். அப்படிப் போர் புரிந்து உன் பகைவர்களை வெல்ல முடியாதபடி நீ பலவீனனுக இருக்கிற சமயங்களில் மட்டும் மற்ற மூன்று உபாயங்களான சாம, பேத, தானங்களில் ஏதாவது ஒன்றன் மூலம் உன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளுக' என்ற உபதேசத்தைத்தான்.

இதைத் திருவள்ளுவர் சொல்லியிருப்பதாகப் பரிமேலழகர் சொல்லுகின்ருர். திருவள்ளுவர் சொல்லியிருப்பாரா? வடமொழியோ தென் மொழியோ அல்லது பிற மொழிகளோ, எந்த மொழியிலுள்ள எந்த நிலைமைக்காவது எந்த நியாயத்துக்காவது இது பொருந்துமா? எவ்வளவு பலமிருந்தாலும் மானமுடைய ஒருவன் எண்ணத் தகுந்த செயல் முறையா இது? பலம் அதிகரிக்க அதிகரிக்கப் பணிவும் அதிகரிக்கவேண்டும் என்பதல்லவா திருக்குறளின் போதனை? 'ஒழிபியல்' பகுதியில் 'மானம்' என்ற அதிகாரத்தில்,

> பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
> சுருக்கத்து வேண்டும் உயர்வு

என்ற குறளில் 'வல்லமை மிகுந்தவனுக இருக்கும்போது தான் வணக்கமுள்ளவனுக அடங்கி நடத்தல் வேண்டும்; வல்லமை குறைந்திருக்கும்போதுதான் அதைச் சமாளிக்க நிமிர்ந்து நிற்கவேண்டும்' என்னும் நல்லறிவைப் புகட்டுகின்ற திருவள்ளுவர், 'நீ வல்லமை மிகுந்தவனுக இருக்கும்

போதெல்லாம் படையெடுத்துத் தண்டோபாயத்தால் காரியத்தை முடித்துக்கொள்; நீ பலம் குறைந்தவனுக இருக்கிற சமயங்களில் மட்டும் மற்ற தந்திரங்களை மேற் கொள்ளுக' என்று சொல்லுவாரா ?

'வினை செயல் வகை' என்ற அதிகாரம் எந்தக் காரி யத்தை எப்படிச் செய்யவேண்டும் என்பதைப்பற்றி மட்டுந் தான் சொல்லுவது. அதுமட்டுமல்ல, 'வினைத் தூய்மை', 'வினைத்திட்பம்', 'வினைசெயல் வகை' என்ற மூன்று அதிகாரங்களிலும் 'வினை' என்ற பதத்தைச் 'செய்ய வேண்டிய காரியம்' என்ற ஒரே பொருளில், மனிதன் மேற் கொள்ளக்கூடிய எல்லாக் காரியங்களுக்கும் பொதுவாகத் தான் சொல்லியிருக்கிருர். இந்த மூன்று அதிகாரங் களிலும் உள்ள முப்பது குறள்களிலும் போரைப் புகுத்திப் பொருள் செய்வதற்கு இடமேயில்லை. போரைப் புகுத்திப் பரிமேலழகர் பொருள் செய்திருக்கிற 'வினைசெயல் வகை' யில் மூன்ருவது செய்யுளாகிய,

> ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
> செல்லும்வாய் நோக்கிச் செயல்

என்ற குறளில் உள்ள எந்தப் பதமும் போரை இழுத்துக் கொண்டு உரை செய்ய இடங் கொடுக்காது. இதற்கு முன்னுள்ள குறள்களிலாவது போரைக்கொண்டு கூட்டிப் பொருள் செய்ய இடங்கொடுக்கக்கூடிய பதமோ கருத்தோ இருக்கின்றதா என்று பாருங்கள். இந்தக் குறளுக்கு முன்னுலுள்ள இரண்டு குறள்களும் முறையே,

1. சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
   தாழ்ச்சியுள் தங்குதல் தீது
2. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
   தூங்காது செய்யும் வினை

என்பன. இவற்றிலும் போரை இழுத்துக்கொண்டு உரை செய்ய இடமில்லை.

இந்த அதிகாரத்தில் போர் புரியத் தூண்டிவிடக் கூடிய இடமே இல்லை என்பதுமட்டுமல்லாமல் போரை விலக்கவேண்டும் என்றே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்

கிறது. ஆனால், போரைப் புகுத்திப் பொருள் செய்ய இடமே இல்லாத குறளுக்குப் போரையே பொருளாகச் சொல்லிவிட்ட பரிமேலழகர் போரையே விலக்கவேண்டும் என்று திருவள்ளுவர் சொல்லுகின்ற குறளுக்குப் போரை நீக்கி எப்படிப் பொருள் கூற முடியும்? அதனால் போரை விலக்கவேண்டும் என்று சொல்லுகிற குறளுக்குத் திருவள்ளுவர் கருதிய உரைக்கு முற்றிலும் விரோதமான உரை சொல்ல வேண்டியதாகிவிட்டது. அந்தக் குறள் எது என்பதை ஆராய்வதற்கு முன்னால் அந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தரும் தவறான உரைக்கு உதவியாக இருக்கும்பொருட்டு அந்தக்குறளுக்கு முன்னாலிருக்கும் ஒரு குறளுக்கு உரை சொல்லும்போதே இந்த அதிகாரத்தில் போரைப் புகுத்த ஒரு சந்து தேடிக்கொள்ளவேண்டியதாகிவிட்டது. அது எப்படி என்றால் :

> வினைபகை யென்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
> தீயெச்சம் போலத் தெறும்

என்ற குறள் இந்த அதிகாரத்தின் நான்காவது குறள். அதாவது போரைப் புகுத்திப் பொருள் செய்துவிட்ட 'ஒல்லும் வாயெல்லாம் வினை நன்றே' என்ற குறளுக்கு அடுத்தது. இதிலுள்ள பதங்களின்படி இதன் பொருள் : 'செய்யப் புகுந்த காரியம், பகைமை ஆகிய இந்த இரண்டிலும் மிச்சம் விட்டுவைத்தால் ஆலோசிக்குமிடத்து நெருப்புத் துணுக்கை மிச்சம் விட்டுவிட்டதுபோல் பின்னால் பெருகித் துன்பமுண்டாக்கும்'—என்பது.

இதன் விரிவுரை என்னவென்றால் : ஆரம்பித்த காரியத்தை மிச்சம் விட்டுவைக்காமல் தொடர்ந்து முடித்து இனி அந்தக் காரியம் இல்லையென்று ஆக்கிவிடவேண்டும். அதைப்போலவே யாரோடாவது நமக்குப் பகைமை இருந்தால் அதில் துளிகூட மிச்சமிருக்க இடமில்லாதபடி அதை இல்லையென்று செய்துவிட வேண்டும். இல்லாவிட்டால் இந்த இரண்டிலும் எதில் மிச்சம் விட்டுவைத்தாலும் அந்த மிச்சம் எவ்வளவு சிறியதானாலும் அது, நெருப்பை அவிக்கும்போது ஒரு துணுக்குக்கூட மிச்சமின்றி அவித்துவிடாமல் ஒரு பொறி நெருப்பை மிச்சம்

விட்டாலும் அது பின்னல் பெருகி எப்படி அழிவுண்டாக்குமோ அப்படித் துன்பமுண்டாக்கும் என்பது.

இதுதான் இந்தக் குறளின் நேரான பொருள். இதில் 'பகை' என்ற சொல் இருக்கிறது. 'பகை' என்ற சொல்லுக்குப் 'பகைவர்கள்' என்றும் 'பகைமை' என்றும் பொருள் கொள்ளலாம். இங்கே 'பகைமை' என்பதுதான் நல்ல பொருள். திருக்குறளின் போக்கிற்கு அதுதான் பொருந்தும். மேலும் 'பகைமை' என்பதைத்தான் மிச்சமில்லாமல் செய்துகொள்வது ஒருவன் நிச்சமாய்ச் செய்யக்கூடியது. 'பகைவர்களை' மிச்சமில்லாமல் செய்து கொள்வது ஒருவன் விரும்பியபடி நிச்சயமாக முடியக்கூடியது அல்ல. பகைமையை ஒழித்துவிட்டால் பகைவர்களே மிச்சமில்லாமல் போய்விடுவார்கள். ஆனல், பகைவர்களை ஒழித்துவிட்டால் வேறு பகைவர்களே இல்லாமல் போய் விடும் என்று சொல்ல முடியாது. பகைமை இருக்கிற வரைக்கும் பகைவர்கள் இருந்துகொண்டே இருப்பார்கள். ஆகையினல் திருவள்ளுவர் இங்கே 'பகை'யை மிச்சம் விட்டுவைக்கக் கூடாது என்பது ஒரு குறிப்பிட்ட பகைவனைக் குறிப்பதல்ல. எங்கெங்கே எவ்வளவு பகைவர்கள் இருந்தாலும் அவர்களோடு உள்ள பகைமையை மிச்சம் விடாமல் நீக்கிவிட வேண்டும் என்பதுதான். அப்படிப் பகைவன் ஒருவன்கூட மிச்சமில்லாதபடி செய்து கொள்வது சமாதான முறைகளாலன்றிப் போர் முறையினல் சாத்தியமல்ல. போர் பகைவர்களை உண்டாக்குமேயல்லாமல் இல்லாமற் செய்யாது. போர் செய்து பகைவர்களில் ஒருவன்கூட மிச்சமில்லாதபடி கொன்று தீர்த்து விடவேண்டும் என்பது கருத்தானல் இந்தக் குறள் பகைவர்களாகப் போர் புரியும் இரண்டு கட்சிகளில் பலம் மிகுந்ததான ஒரு கட்சிக்குத்தான் ஆகுமேயல்லாமல் எல்லாருக்கும் பொதுவான அறிவு ஆகாது.

இந்த குறளுக்குப் பரிமேலழகர் தருகின்ற உரையைப் பார்ப்போம்: 'செய்யத் தொடங்கிய வினையும், களையத் தொடங்கிய பகையும் என்று சொல்லப்பட்ட இரண்டனது ஒழிவும் ஆராயுங்கால் தீயினது ஒழிவுபோலப் பின் வளர்ந்து கெடுக்கும்' என்பது பதவுரை.

விசேடவுரை : 'இனி இக்குறை என் செய்வ'தென்று இகழ்ந் தொழியற்க, முடியச் செய்க என்பதாம். பின் வளர்தல் ஒப்புமை பற்றிப் பகையெச்சமும் உடன்கூறினர். இதனன் வலியான் செய்யுந் திறங் கூறப்பட்டது' என்பது விளக்கம்.

இந்தப் பதவுரையிலுள்ள, "செய்யத் தொடங்கிய வினையும் களையத் தொடங்கிய பகையும்" என்பது கவனிக்கத் தக்கது. 'களையத் தொடங்கிய பகை' என்பதில் போரைப் புகுத்திக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து விசேடவுரையில் 'இதனன் வலியான் செய்யும் திறம் கூறப்பட்டது' என்ற சொற்றொடர், இதற்கு முந்தின குறளுக்குச் சொன்ன உரையைக் கூட்டி 'நீ பலமுள்ள வனக இருக்கிறபோது உடனே போர் தொடுத்து, பலம் குறைந்துள்ள பகைவர்களை மிச்சம் விடாமல் கொன்று தீர்த்துவிடு ; அப்படிக்கின்றி ஒருவனை மிச்சம் விட்டாலும் அவன் பின்னல் பெரும்படை திரட்டிக் கேடுண் டாக்குவான்' என்ற பொருளைக் கூட்டுகின்றது.

இந்தக் குறளில் 'பகை'யை மிச்சம் விட்டுவைத்தால் பின்னல் தீங்குண்டாகும் என்பது இருப்பதனல் பகையைத் தீர்த்துவிடுவதற்குப் போர் செய்யவேண்டும் என்ற கருத்தைக் கூட்டிக்கொள்ள இடம் கிடைத்தது. ஆனல், போரை விலக்கவேண்டும் என்றே சொல்லுகின்ற ஒரு குறளுக்கும் போர் புரியவேண்டும் என்ற கருத்தைப் புகுத்தியிருப்பதைப் பாருங்கள். இதே 'வினை செயல் வகை' என்ற அதிகாரத்தின் ஒன்பதாவது குறள்.

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்

என்பது. இதிலுள்ள பதங்களுக்கு நேரான பொருள் என்னவென்றுல் : நண்பர்களுக்கு நல்லவற்றைச் செய் வதைக் காட்டிலும் விரைவாகத் தக்கது பகைவர்களை ஒட்டிக்கொள்வது என்பது. இங்குள்ள பதங்களுக்கு இதைத் தவிர வேறு எந்த அர்த்தமும் செய்ய முடியாது.

இதை விரித்துச் சொன்னல் : பகைவரை வெல்லு வதற்காகப் பலபேரை நண்பர்களாகக் கட்சி சேர்த்துக்

கொண்டு, அவர்கள் முகங் கோணுதபடி அவர்களுக்கு உதவிகளைச் செய்து உபசரித்துக்கொண்டிருப்பதைவிடப் பகைவரையே நண்பராககிக்கொள்வது விரைவாகப் பயனளிக்கக்கூடியது என்பதாம்.

இதன் கருத்து : ஒரு பகைவனை வெல்லுவதற்காகப் பலபேரைத் துணை சேர்த்துக்கொண்டு அவர்களைத் தொங்கிக்கொண்டிருப்பதைவிட அந்த ஒரு பகைவனையே நண்பனுக்கிக்கொள்வது நல்லது என்பது.

இதுதான் இந்தக் குறளுக்குத் திருவள்ளுவர் கருதிய பொருள். வெகு நல்ல அறிவைப் புகட்டும் இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தந்துள்ள உரையைப் பாருங்கள் :

'வினை செய்வானல் தன் நாட்டார்க்கு இனியவற்றைச் செய்தலினும் விரைந்து செய்யப்படும் ; தன் பகைவரோடு ஒட்டாரைத் தனக்கு நட்பாக்கிக் கோடல்' என்பது பரிமேலழகர் உரை.

இதில் 'நட்டார்க்கு' என்பதற்குத் 'தன் நட்டார்க்கு' என்று பொருளாகும்போது 'ஒட்டாரை' என்பதற்கு மட்டும் 'தன் பகைவரோடு ஒட்டாரை' என்று எப்படிப் பொருளாகும்? 'தன் பகைவரோடு' என்பதைச் சேர்த்துக் கொள்ள இந்தக் குறளில் எந்தப் பதம் இடங்கொடுக்கிறது ? எந்தப் பதமும் இடங்கொடுக்காத ஒரு சொல்லைச் சேர்த்துக்கொண்டும் சொல்லப்பட்டுள்ள உரை முரண்பட்டுப் போகிறது.

எப்படியென்ருல், ஒருவனுக்குத் தன் பகைவரோடு ஒட்டாராக இருப்பவர்கள்தானே தனக்கு நட்டாராக இருக்க முடியும்? ஆகையினல் 'நட்டார்க்கு' என்ற பதத்திலுள்ள 'நட்டார்' ஏற்கெனவே தன் பகைவரோடு 'ஒட்டார்' ஆகிவிட்டவர்கள். அப்படியானல் இந்தக் குறளுக்குப் (பரிமேலழகர் சேர்த்துக்கொண்ட 'தன் பகைவரோடு' என்ற சொற்ருெடரோடு) பொருள் எப்படி விரிகிறதென்ருல், 'தன் பகைவரோடு ஒட்டார்க்கு இனியவற்றைச் செய்தலினும் தன் பகைவரோடு ஒட்டாரைத் தனக்கு நட்பாக்கிக் கொள்வது விரைந்ததே' என்றுதான் ஆகிவிடுகிறது.

இப்படிப் பொருளற்ற உரை செய்யநேரிட்ட காரணம் பரிமேலழகர் இந்த அதிகாரத்தின் மூன்ருவது குறளாகிய,

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்

என்ற குறளில் 'வினை' என்ற பதத்திற்குப் 'போர்' என்ற பொருளைப் புகுத்திவிட்டதேயாகும். அத்துடன் 'ஒல்லும் வாயெல்லாம்' என்பதற்கும் மிகவும் தவருக 'வலியாஞய் இருக்கும்போதெல்லாம்' என்று பொருள் கொண்டுவிட்டார். அதனல் 'செல்லும் வாய்' என்பதற்கு 'சாம, தான, பேதம்' என்ற மூன்றில் 'செல்லத் தகுந்த ஒன்று' என்று கற்பித்துப் பொருள் கொண்டார். அதனல் நீதி நூல்களுக்கும் ராஜதர்மங்களுக்கும் முற்றிலும் விரோதமாக, முதலில் தண்டோபாயத்தை மேற்கொள்ள வேண்டுமென்றும் அது முடியாவிட்டால் மற்ற சாம, தான, பேதமாகிய மூன்றினுள் ஒன்றை மேற்கொள்ள வேண்டுமென்றும் சொல்லிவிட்டார்.

இப்படித் தவருன உத்திகளை மனதிற் கொண்டுவிட்டதால் இந்த 'வினை செயல் வகை' என்னும் அதிகாரம் போரைப்பற்றியும் அதை நடத்தவேண்டிய முறையைப் பற்றியுமே சொல்லுவதாக எண்ணிக்கொண்டே பொருள் செய்யப் புகுந்திருக்கிருர். அப்படியும் போரை விலக்கிச் சமாதானம் செய்துகொள்வது நல்லது என்ற அறிவைச் சொல்லுகிற அந்தப் பொருளைச் சொல்ல முடியாமற் போய்விட்டது.

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்

என்பதற்குப் 'பகைவனை வெல்லவென்று பலபேரைத் துணை சேர்த்துக்கொண்டு அவர்களுடைய தயவுக்காகப் பரிந்துகொண்டிருப்பதைவிடப் பகைவனையே சமாதானப் படுத்தி நண்பனுக மாற்றிவிடுவது மிகவும் நல்லது' என்பதுதான் திருவள்ளுவர் கருதிய பொருள் என்பதை இந்தக் குறளுக்கு அடுத்த,

உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து

என்ற கடைசிக் குறள் நிச்சயப்படுத்துகிறது. இதன் பொருள் : இடம் பொருள் ஏவல் முதலிய வசதிகள் குறைவாக உள்ளவர்கள் தம்மைச் சேர்ந்தவர்கள் நடுங்குவதற்காகப் பயந்து தம்மினும் பலமுள்ளவர்களை எதிர்க்காமல் பணிந்து சமாதானம் செய்துகொள்வார்கள். அதற்காகப் பிறர் குற்றம் சொன்னாலும் பொறுத்துக் கொள்வார்கள்—என்பது.

முந்திய குறளில் ' நட்டார்க்கு நல்ல செய்துகொண்டு சண்டைக்குக் கட்சி கட்டுவதைக் காட்டிலும் பகைவனுடன் சமாதானம் செய்துகொண்டு அவனை நண்பனுக்கிக் கொள்வது நல்லது' என்று சொன்னதைத் தொடர்ந்து இந்தக் குறளில் 'பலம் மிகுந்த பகைவனை எதிர்த்துத் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு அழிவுண்டாக்குவதைவிடப் பணிந்து போவதே நல்லது' என்று சொல்லுகிருர்.

ஆதலால் இந்த அதிகாரம் சண்டை செய்யத் தூண்டுவதற்காகச் சொல்லப்பட்டதல்ல. சண்டை வரக்கூடியதாக இருந்தாலும் அதை விலக்கத்தகுந்த முறையில் ' வினை செயல்வகை'யை அறியச் செய்வதற்காகவே சொல்லப்பட்டுள்ளது. இந்தச் சண்டையும் ஒரு அரசன் இன்னொரு அரசன்மேல் படையெடுத்துச் சதுரங்க சேனைகளைக் கொண்டு நடத்துகிற சண்டையை மட்டும் குறிப்பதல்ல. சாதாரண மனிதருக்குள் வரக்கூடிய சண்டைகளையும் குறித்தது. ஏனென்ருல் 'வினைத் தூய்மை,' 'வினைத் திட்பம்,' ' வினை செயல்வகை ' என்ற மூன்று அதிகாரங்களும் பரிமேலழகர் கருதியபடி அமைச்சருக்கோ அரசருக்கோ மட்டும் போர் நடத்தச் சொன்னதல்ல. எல்லா இல்லறத்தானுக்கும் பொதுவாகச் சொல்லப்பட்டவை. ' வினை ' என்ற சொல்லில் போர் புரிவதும் அடங்கும் ; என்ருலும் ' போர் ' என்பதே 'வினை' ஆகிவிட முடியாது. மேலும் ' வினை பகை என்றிரண்டின் எச்சம் ' என்ற குறளில் ' வினை ' வேறு ' பகை ' வேறு என்றிருப்பதால, ' ஒல்லும் வாயெல்லாம் வினை நன்றே ' என்றதில் உள்ள ' வினை ' என்ற சொல்லுக்குப் ' போர் ' என்ற பொருள் மிகவும் தவருனது என்பதும் தெளிவாகிறது.

இதுவரையிலும் சொன்னதெல்லாம், பரிமேலழகர் உரையில், திருவள்ளுவர் எதைச் சொல்லவே மாட்டாரோ அதை அவர் சொல்லியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டத்தான் திருவள்ளுவர் சொல்லவே மாட்டார் என்பதையும் சொன்னதாகக் கூறுகின்ற பரிமேலழகர் உரையில் திருவள்ளுவரின் கருத்துக்களுக்கு ஒவ்வாத உரைகளும் இருப்பதில் வியப்பில்லை திருக்குறளுக்குச் சரியான உரை எது என்பதைத் திருக்குறளைக் கொண்டேதான் தீர்மானிக்கவேண்டும். பிற நூல்களிலுள்ளனவற்றைக்கொண்டே திருக்குறளின் உரைகளைத் தீர்மானித்துவிடக் கூடாது. திருக்குறளில் பிற நூல்களிலுள்ள கருத்துக்கள் பல இருக்கின்றன. திருக்குறளுக்கு முன்னுலிருந்த எல்லா ஞான நூல்களையும் திருவள்ளுவர் ஐயந்திரிபற ஆராய்ந்தவரே. வேதங்கள், சாஸ்திரங்கள், தத்துவங்கள், புராணங்கள் இதிகாசங்கள் என்பனவற்றிலுள்ள சத்தான அறிவுகளைத் திருக்குறளில் அங்கங்கே அமைத்திருக்கிறார். ஆனால், ஒவ்வொரு நூலிலும் அதில் சிறப்பாக உள்ள நித்தியமான சத்தியங்களை மட்டும் கிரஹித்துக்கொண்டு அவற்றை அவருக்கே சொந்தமான தனிமுறையில் தமிழ் வழக்குகளோடு கூட்டித் தருகிறார். அதனால் திருக்குறள், எந்த ஒரு வேறு நூலையும் பின்பற்றிய வழிநூலும் அல்ல; சார்பு நூலும் அல்ல. பிற இலக்கியங்களிலுள்ள எல்லாச் சத்திய ஞானத்தையும் திருவள்ளுவர் அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஆனால், அவற்றிலுள்ள எல்லாச் சம்பிரதாயங்களையும் அப்படியே ஏற்றுக்கொண்டவரல்ல என்பதைக் குறள்களே கூறுகின்றன. அதனால் வேறு எந்த நூலையும் மேற்கோளாகக் காட்டிக் குறளுக்கு உரை சொல்லக் கூடாது. திருக்குறளின் ஒரு அதிகாரத்திலுள்ள பத்துக் குறள்களில் ஒரு குறள் வேறு ஒரு நூலிலுள்ள ஒரு பகுதிக்கு நேரான கருத்துள்ளதாக இருக்கலாம். அதனாலேயே மீதி ஒன்பது குறள்களும் அந்த வேறொரு நூலின் மற்றக் கருத்துக்களை ஒட்டினவைகளே என்று தீர்மானித்துக்கொண்டு விட்டதனால்தான் பரிமேலழகர் திருவள்ளுவர் எதைச் சொல்லவே மாட்டாரோ அதைச் சொல்லியிருப்பதாக உரை காண நேர்ந்துவிட்டது.

திருவள்ளுவர் பிற நூல்களிலுள்ள கருத்துக்களில் விவாதத்துக்கு இடந்தரக் கூடியவைகளை விலக்கிவிட்டு விவாதத்துக்கு இடமில்லாத சத்தியங்களை யெல்லாம் சேர்த்துக் கொண்டிருக்கிறார். சட்டதிட்டங்களும் சம்பிர தாயங்களும் காலத்துக்குத் தக்கபடியும் இடத்துக்குத் தக்கபடியும் மாறிவிடக்கூடியவை. ஆனால், சத்தியங்கள் அப்படி மாறக்கூடியவனல்ல. அப்படிப்பட்ட சத்தியங்களை யெல்லாம் திருவள்ளுவர் முன்னுள்ள சுருதிகளுக்கு முரணில்லாமல் சொல்லியிருக்கிறார்.

## தவம்

அப்படி, விவாதத்துக்கு இடமில்லாததும் முன்னுள்ள சுருதிகளிலுள்ள சத்தியங்களையே சொல்லுவதுமான அதிகாரம் 'தவம்' என்பது. அந்த அதிகாரத்திலுள்ள குறள்களுக்குத் திருவள்ளுவருடைய கருத்தை அறியாமல் உரை செய்யப்பட்டிருக்கிறது. அந்த உரை முன்னுள்ள சுருதிகளுக்கும் முரண்படுகின்றது. அதனால் இந்த அதிகா ரத்துக்குப் பரிமேலழகர் தந்துள்ள உரைகள் சத்தியத் துக்கு ஒத்தவையல்லவென்று முற்றிலும் வேறுபட்ட புது உரைகளை நான் சொல்லியிருக்கிறேன். வடமொழியி லுள்ள மெய்ஞ்ஞானச் சுருதிகளில் மிக்கப் பயிற்சியுடைய பரிமேலழகர் அந்தச் சுருதிகளில் "தபஸ்" என்று தவத்தைப்பற்றியுள்ள சத்தியங்களைக் கவனிக்காமல் உரை செய்துவிட்டாரே என்பதை விளக்கினால் திருக்குறளுக்குப் புது உரை ஒன்று அவசியந்தான் என்பதை ஒப்புக்கொள் வார்கள் என்றே என் முன்னுரையில் 'தவம்' அதிகாரத் தைச் சுட்டிக் காட்டியது.

இனித் திருக்குறளில் 'தவம்' என்ற அதிகாரத்தை ஆராய்வோம். திருக்குறளில் 'தவம்' என்ற சொல் எதைக் குறிக்கிறது என்பதையும் எதைக் குறிக்காது என்பதையும் நிச்சயித்துக்கொள்ள வேண்டும். அத்துடன் இந்தத் 'தவம்' என்பதன் நோக்கம் என்ன; எந்தப் பயனைக் கருதி இங்குள்ள 'தவம்' செய்யப்படுகிறது என்பதையும் தீர்மானித்துக்கொண்ட பின்பே மேலே செல்லவேண்டும்.

'தவம்' என்ற சொல்லுக்குத் தத்துவ முறையில் ஒரு அர்த்தமும் உலக வழக்காக வேறொரு அர்த்தமும் உண்டு. தத்துவ முறையில் 'தவம்' என்பதற்குத் துறவிகளுடைய 'தவநிலை' என்பது அர்த்தம். அதுதான் வடமொழியில் 'தபஸ்' என்று சொல்லப்படுவது. உலக வழக்காக 'தவம்' என்பதற்குப் 'புண்ணியம்' என்பது பொருள். தத்துவமுறையில் துறவு பூண்டவனுடைய தவ ஒழுக்கம் ஒன்றுக்குத்தான் 'தவம்' என்ற சொல் பிறயோகப்படுத்தப்படும். ஆனால் உலக வழக்கில் மக்கள் செய்கின்ற எல்லா நல்ல காரியங்களுக்கும் 'தவம்' என்ற சொல் பிரயோகிக்கப்படுகிறது. உதாரணமாக 'விசுவாமித்திரர் தவம் செய்தவர். அதனால் திரிசங்கு என்றவனை உடலோடு சொர்க்கத்துக்கு அனுப்பினர்' என்றால், 'விசுவாமித்திரர் உலக சுகபோகங்களைத் துறந்து இந்திரியங்களை அடக்கி, யோக முயற்சிகளைச் செய்து தபோபலம் பெற்றவர். அதனால் திரிசங்கு என்றவனைச் சொர்க்கத்துக்கு உடலோடு அனுப்பினர்' என்று அர்த்தமாகும். இது 'தவம்' என்பதற்குத் தத்துவ ரீதியான அர்த்தம். ஆனால் 'கபா காந்தியும் புத்லிபாயும் தவம் செய்தவர்கள். அதனால் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி அவர்களுக்குப் புத்திரனாக அவதரித்தார்' என்றால் 'கபா காந்தியும் புத்லிபாயும் உலக சுகங்களைத் துறந்து இந்திரியங்களை அடக்கி யோக முயற்சிகளைச் செய்தவர்கள்' என்று அர்த்தமாகாது. இதற்குக் 'கபா காந்தியும் புத்லிபாயும் புண்ணியம் செய்தவர்கள். அந்த நல்வினையின் பயனாக மோகனதாஸ் கரம்சந்த் காந்தி அவர்களுக்குப் புத்திரனாக அவதரித்தார்' என்றுதான் அர்த்தமாகும். இது 'தவம்' என்பதற்கு உலக வழக்காகக் கொள்ளப்படுகிற அர்த்தம். இதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

திருவள்ளுவர் சொல்லுகின்ற 'தவம்' தத்துவ முறையில் அமைக்கப்பட்டது. ஆனால், அதற்குப் பரிமேலழகர் சொல்லுகின்ற உரை உலக வழக்கிலுள்ள முறையில் அமைந்திருக்கிறது. திருக்குறளில் 'தவம்' என்ற அதிகாரம் 'துறவறம்' என்ற பகுதியில் துறவியானவன் மேற்கொள்ளவேண்டிய பல விரதங்களுள் ஒரு

விரதமாகச் சொல்லப்பட்டுள்ளது. 'விரதம்' என்ருல் 'கட்டாயமான விதி' என்பது பொருள். அதனுல் இது தத்துவ ரீதியில் சொல்லப்படுகிற 'தவம்.' உலக வழக்கத்தில் சொல்லப்படுகிற அர்த்தமுள்ளதல்ல.

துறவறப் பகுதியில் சொல்லப்படுகிற 'விரதம்,' 'ஞானம்' என்ற இரண்டு பிரிவுகளிலும் உள்ள எல்லா அறிவும் பொதுவாக எல்லா மனிதர்களுக்கும் பயன்படக் கூடிய நல்லறிவாகவே திருவள்ளுவர் அமைத்திருக்கிருர். என்ருலும் 'விரதம்' என்ற பிரிவைத் துறவறத்தானுக்குக் கட்டாய விதிகளாகவும் மற்றவர்களுக்கு நல்லறிவாகவும் தான் கருதியிருக்கிருர். உதாரணமாகத் துறவறத்தின் முதல் அதிகாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது—'அருளுடைமை' அருளுடைமை என்பது எல்லா ஜீவராசிகளின் உயிரையும் தன்னுயிர் போல் எண்ணிப் பாதுகாப்பது. இந்தக் குணம் துறவறத்தானுக்கு மட்டுந்தாஞ இருக்க வேண்டும்? எல்லாருக்கும் இருந்தால் நல்லதுதானே என்ருல், எல்லாருக்கும் அந்தக் குணம் இருந்தால் நல்லது தான். ஆனுல், இந்தக் குணம் இல்லறத்தானிடத்தில் இல்லாது போனுல் அது குற்றமாகிவிடாது. அவன் இல்லறம் கெட்டுவிடாது. ஆனுல், துறவறத்தானுக்கு இந்தக் குணம் இருந்தே தீரவேண்டும். இல்லாவிட்டால் அவனுடைய துறவறம் பயன்படாது. எப்படியெனில் இல்லறத்தான் தன்னைக் கொல்ல வருகின்ற இன்னெரு மனிதனையும் தற்காப்புக்காகக் கொன்றுவிட்டால் அது குற்றமாகாது. அதனுல் அவனுடைய இல்லறம் கெட்டுப் போனதாகாது. ஆனுல் ஒரு துறவறத்தான்,

> தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
> இன்னுயிர் நீக்கும் வினை

என்ற துறவறத்தின் விரதத்திற்கிணங்கத் 'தன்னுடைய உயிர் போவதாக இருந்தாலும் இன்னெரு உயிரைப் போக்கும் காரியத்தைச் செய்யக்கூடாது. இதில் 'இன்னெரு மனிதனுடைய உயிரைப் போக்கக்கூடாது' என்று சொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதுதான் அருளுடைமையின் பூரணம்.

இல்லறத்தானுக்கு ‘அன்புடைமை’ இருந்தாற் போதும் என்று இல்லறத்திற்கு அதை முதல் விதியாக வைத்துத் துறவறத்தானுக்கு ‘அருளுடைமை’ முதல் விதியாக்கினர். இல்லறத்தானுக்கு விதியாகச் சொன்ன ‘அன்புடைமை’ என்னவென்ருல், தன்னுடைய குடும்பத்தைச்சேர்ந்தவர்களாகவும்,உறவினர்களாகவும், நண்பர்களாகவும், விருந்தினர்களாகவும் மற்ற விதங்களிலும் தன்னேடு தொடர்புடைய எல்லா மனிதர்களிடத்திலும் அன்புடன் நடந்துகொள்வது. பொதுவாக மனிதனுக்கு மனிதன் இதமாக நடந்து கொள்வது ‘அன்புடைமை.’ மனிதருக்கு மட்டுமல்ல மற்றெல்லா உயிர்ப் பிராணிகளேயும் சம உயிராகப் பாவிப்பது ‘அருளுடைமை.’

‘விரதம்’ என்பதைப்போலவே ‘ஞானம்’ என்பதும் துறவறத்தானுக்கென்றே குறிப்பாகச் சொல்லப்பட்டது. ஆனுலும் ‘ஞானம்’ என்ற பிரிவிலுள்ள ‘நிலேயாமை’ ‘துறவு,’ ‘மெய்யுணர்தல்,’ ‘அவாவறுத்தல்’ என்னும் நான்கு அதிகாரங்களிலும் உள்ள நல்லறிவின் நுணுக்கங்களேயும் இல்லறத்தானும் அறிந்திருப்பது நல்லதுதான். ஆனல், அது கட்டாயமல்ல. ஏனெனில் இல்லறத்தானுக்கு ‘ஞானம்’ முக்கியமல்ல. அவனுக்குக் ‘கர்மம்’ தான் முக்கியம். ஞானத்தைப்பற்றிய நுணுக்கங்களின் ஆராய்ச்சி இல்லாமலேயே வெறும் கர்ம ஒழுக்கங்களினுல் மட்டுமே இல்லறத்தான் வீடுபெற முடியும் என்பது திருவள்ளுவருடைய தீர்ப்பு. அதைச் சிறிதும் சந்தேகத்துக்கிடமில்லாதபடி மிகவும் தெளிவாகச் சொல்லுகிருர். துறவறத்தைவிட இல்லறந்தான் ஏற்றமுடையது என்பது வள்ளுவரின் வாய் மொழி. இல்வாழ்க்கையினுல் பிறந்த மனிதனுக்கு இல்லறந்தான் இயல்பானது என்றும் துறவறத்துக்கே ஆதாரமாக இருப்பது இல்லறந்தான் என்றும் சொல்லுகின்ருர். துறவறத்தைவிடப் பொறுப்புகளும் சகிப்புத் தன்மையும் உள்ளது இல்லறம் என்கிருர். ஆகையினுல் திருவள்ளுவர் சொல்லுகின்ற இல்லறத்தையும் துறவறத்தையும் மற்ற நூல்களிற் சொல்லப்படுகிற முறைகளே அனுசரித்து அர்த்தம் செய்யக்கூடாது. துறவறத்துக்கு உரிய பெருமையைத் திருவள்ளுவர்

குறைத்துவிடவில்லை. ஆனால், துறவறத்தை மனித வாழ்க்கைக்கு இரண்டாம் பட்சமான அறமாகத்தான் சொல்லுகின்றார்.

இல்லறத்தையும் துறவறத்தையும் வள்ளுவர் எப்படிக் காண்கிறார் என்றால் இல்லறத்தைக் கர்மயோகமாகவும் துறவறத்தை ஞானயோகமாகவும்தான் காண்கிறார். ஞான யோகத்தில் கர்மம் இருக்கமுடியாது ; ஆனால், கர்மயோகத்தில் ஞானம் இருக்க முடியும். ஞானயோகியானவன் கர்மங்களைப் பொருட்படுத்துகிறவனல்ல. ஆனால், கர்ம யோகியானவன் வெறுங் கர்மங்களினாலேயே ஞான யோகத்தின் முடிவாகிய 'அவாவறுத்தல்' என்பதை நிஷ்காமியத்தால் அடைந்தவனாகிறான். ஞானயோகி சமுதாயத்துக்குப் பயனற்றவன். ஆனால், கர்மயோகி சமுதாயத்தைப் பாதுகாக்கிறவன். அதனால் திருவள்ளுவர் துறவறத்தைவிட இல்லறமே சிறப்புடையது என்கிறார். இல்லறத்தைச் சரியாக நடத்துகிறவன் துறவறத்தை எண்ணவேண்டியதில்லை என்பது வள்ளுவரின் போதனை. ஆனால், பரிமேலழகர் இல்லறத்தைச் சரியாக நடத்தி அறிவு பெற்றவன்தான் துறவத்துக்குப் போகிறவன் என்கிறார். துறவறம் என்ற பகுதிக்குப் பரிமேலழர் சொல்லுகின்ற முன்னுரையாவது :

> இனி முறையானே துறவறங் கூறிய தொடங்கினார். துறவறமாவது மேற்கூறிய இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடையாராய்ப் பிறப்பினையஞ்சி வீடு பேற்றின் பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம். அதுதான் வினை மாசுதீர்ந்து அந்தக் காரணங்கள் தூயவாதற் பொருட்டு அவராற் காக்கப்படும் விரதங்களும், அவற்றான் அவை தூயவாயவழி உதிப்பதாய ஞானமு மென இருவகைப்படும்

என்பது. இதில் 'இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடையவராய்ப் பிறப்பினையஞ்சி.....' என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் பரிமேலழகர், இல்லறத்தைச் சரியாக

நடத்தி அறிவு பெற்ற பிறகுதான் துறவறத்துக்குப் போக வேண்டும் என்று சொல்லுகிறார். இது திருவள்ளுவருடைய கருத்துக்கு முற்றிலும் விரோதமாக இருப்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. வள்ளுவர் இல்லறத்தைச் சரியாக நடத்தினால் துறவறத்துக்குப் போகவே வேண்டியதில்லையென்று மிகவும் தெளிவாகச் சொல்லுகிறார். பரிமேலழகர் வர்ணாச்ரம சம்பிரதாயத்தைப் பின்பற்றி உரை செய்கிறார். ஆனால், வள்ளுவர் வர்ணாச்ரம முறையைப் பின்பற்றவில்லை. இங்கே வர்ணாச்ரம முறை சரியா தப்பா, நல்லதா கெடுதலா என்ற சர்ச்சையில் இறங்கிவிடக்கூடாது. வர்ணாச்ரம முறை அது வகுக்கப் பட்ட காலத்துக்கும் சமுதாய சூழ்நிலைகளுக்கும் மிகவும் நல்லதாகவே கொள்ளலாம். அப்படிப்பட்ட சமுதாய சூழ்நிலை இப்போதும் அமைய முடியுமானால் அந்த முறையைப் பின்பற்றுவது நல்லதென்றும் சொல்லலாம். ஆனால், இங்கே நாம் ஒப்புக்கொள்ள வேண்டியது என்னவென்றால் திருவள்ளுவர் வர்ணாச்ரம முறையைப் பின்பற்றவில்லை என்பதுதான். திருக்குறளில் உள்ள துறவறம் இல்லறத்தின் பிற்பகுதியானதல்ல. திருக்குறளில் சொல்லப்படுகிற இல்லறமும் துறவறமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவல்ல. திருக்குறளில் காணப்படுகிற துறவறத்தான் இல்லறத்தை முடித்துக்கொண்டு துறவு பூண்டவனாகவும் இருக்கலாம், இல்லறத்தை இடையிலே விட்டுவிட்டுத் துறவுபூண்டவனாகவும் இருக்கலாம். அல்லது இல்லறத்தில் ஒரு சிறிதும் ஈடுபடாதவனாகவே இருக்கலாம். மனைவிமக்களோடு இல்வாழ்க்கை நடத்தி அறிவுடையவரான பிறகுதான் துறவறத்துக்குப் போகவேண்டுமென்றால் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர், ஸ்ரீ விவேகானந்தர், ஸ்ரீ ரமண மகரிஷி முதலியவர்களைப் போன்ற எண்ணிறந்த பெரியவர்களின் துறவு முறை கெட்டதாகி விடும். அது யுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருந்தாது. அதனால் திருக்குறளிலுள்ள துறவறத்துக்கு வர்ணாச்ரம முறையைச் சுருதியாகக் கொள்ளக்கூடாது.

திருக்குறளில் இல்லறமும் துறவறமும் எந்த முறையிற் சொல்லப்படுகின்றன என்பதைப் பார்ப்போம்;

'இல்வாழ்க்கை' என்னும் அதிகாரத்தில் ஆருவது குறள் :

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன்

என்பது. இதன் பொருள் பரிமேலழகர் தருகின்றபடியே என்னவென்ருல் : ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின் வழியே செலுத்துவானுயின் அவன் அதற்குப் புறமாகிய நெறியிற் போய்ப் பெறும் பயன் யாது ?—என்பது பதவுரை.

மேலும் இதற்கு விளக்கமாக அவர் தரும் விசேடவுரையில்,

'புறத்தாறு—இல்லை விட்டு வனத்துச் செல்லு நிலை. அந்நிலையின் இது பயனுடைத் தென்பார், 'போஒய்ப் பெறுவதெவன்' என்ருர்' என்பது. இது சரியான உரைதான்.

இதன்படி—இல்வாழ்க்கையை இல்லற முறையில் சரியாக நடத்துகிறவன் துறவறத்துக்குப் போய் அடையக் கூடிய பயன் ஒன்றுமில்லை—என்பதுதான் சொல்லப் பட்டது.

இதற்கு அடுத்த குறள் :

இயல்பினுன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாரு ளெல்லாம் தலை

என்பது. இதற்கும் பரிமேலழகர் தருகின்றபடியே : இல்வாழ்க்கைக்கண் நின்று அதற்குரிய இயல்போடு கூடி வாழ்பவன் என்று சொல்லப்படுவான் புலன்களைவிட முயல்வார் எல்லாருள்ளும் மிக்கவன்—என்பது. இதுவும் சரியான உரையே.

இதன் கருத்து—இல்லறத்தைச் சரியாக நடத்துகிறவன் புலன்களை அடக்க முயல்கின்ற எல்லாரினும் தலை சிறந்தவன் என்பது. அதாவது முறைப்படி இல்லறம் நடத்துகின்றவன் இல்லறத்தை விட்டுப் புலன்களை அடக்குவதாக வேறு பலவித முயற்சிகளில் ஈடுபடுகின்ற துறவிகளுக்கெல்லாம் மேலானவன் என்பது.

இதற்கு அடுத்த குறள் :

ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து

என்பது. இதன் பொருள் பரிமேலழகர் உரையின்படியே: தவம் செய்வாரையும் தத்தம் நெறியின்கண் ஒழுகப் பண்ணித் தானும் தன் அறத்தில் தவருத இல்வாழ்க்கை, அத்தவஞ் செய்வார் நிலேயினும் பொறை யுடைத்து— என்பது.

இதன் கருத்து—சரியான முறையில் இல்லறம் நடத்துகிறவன் துறவறத்தானைவிட பொறுப்புகளும் சகிப்புகளும் உள்ளவன். துறவறத்தான் தனக்குற்ற துன்பங்களை மட்டும் பொறுத்துக்கொள்பவன். ஆனல், இல்லறத்தான் பிறருக்குற்ற துன்பங்களையும் தனக்கு வந்ததுபோல் எண்ணி அதைப் போக்கும் பொறுப்புடையவனுகிருன்— என்பது.

இதற்கடுத்த குறள் :

அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று

என்பது. இதன் பொருள் பரிமேலழகர் உரையின்படி: இருவகை அறத்தினும் நூல்களால் அறன் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே ; ஏனைத் துறவறமோவெனின், அதுவும் பிறனுற் பழிக்கப்படுவதில்லையாயின், அவ்வில்வாழ்க்கையோடு ஒரு தன்மைத்தாக நன்று—என்பது.

இதன் கருத்து—மனிதனுக்கு அறம் என்று நூல்களால் தீர்மானிக்கப்பட்டதே இல்லறம்தான். ஆனுலும் துறவறத்தையும், பழிப்புக்கிடமில்லாமல் நடத்திஞல் அதையும் இல்லறத்துக்குச் சமமான சிறப்புடையதாகக் கொள்ளலாம்—என்பது.

இதில் துறவறத்தை இல்லறத்துக்கு மட்டமானதாகவே சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் இல்வாழ்க்கையைப்பற்றிச் சொல்லப்பட்ட குறள்களின் சுருக்கம் என்னவென்ருல் :

இல்லறத்தைச் சரியாக நடத்தினுல் துறவறத்துக்குப் போய் அடையக்கூடிய நன்மை ஒன்றுமில்லே. முறைப்படி இல்லறம் நடத்துகிறவன் புலன்களே அடக்க முயலும் துறவிகள் எல்லாரினும் சிறந்தவன். சரியான முறையில் இல்லறம் நடத்துகிறவன் துறவறத்தானேவிடப் பொறுப் புள்ளவன். ஆகையினுல் மனிதன் மேற்கொள்ளவேண்டிய அறமே இல்லறம்தான்—என்பதுதான். இதில் எள்ள ளவும் சந்தேகத்துக்கு இடமில்லே.

இதிலிருந்து தீர்மானமாகத் தெரியக் கிடப்பது என்ன வென்ருல் திருவள்ளுவர் சொல்லுகின்ற துறவறம், பரிமேலழகர் சொல்லுகின்றபடி 'இல்லறத்தில் வழுவா தொழுகி அறிவுடையராய்ப் பிறப்பினே யஞ்சி விடுபேற்றின் பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம்' அல்ல என்பதே. அதனுல் திருக்குறளிலுள்ள துறவறம் வர்ணுச்ரம முறையைப் பின்பற்றியதல்ல. பரிமேலழகரோ திருவள்ளுவர் வர்ணுச்ரம முறையைப் பின்பற்றியே துற வறம் சொல்லியிருப்பதாகக் கொண்டு உரை காணப் புகுந் தார். ஆனுல், மேற்சொன்ன நான்கு குறள்களும் அவற் றிற்குப் பரிமேலழகரே சொன்ன சரியான உரைகளின்படி அதற்கு இடங் கொடுக்கவில்லே.

அதனுல் இந்த அதிகாரத்தின் கடைசிக் குறளுக்கு, மேற்சொன்ன நான்கு குறள்களேயும் தொடர்ந்து திரு வள்ளுவர் சொல்லியிருக்கிற தீர்மானத்தைச் சொல்லாமல் வேறு பொருளேச் சொல்லி, மேலுள்ள நான்கு குறள் களிலும் தாமே உரை சொன்ன கருத்துக்கள் மறைந்து விடும்படி மழுப்பிவிட வேண்டியதாகிவிட்டது. அதாவது, சரியான முறையில் இல்லறம் நடத்துகிறவன் துற வறத்துக்குப் போய் அடையக்கூடிய பலன் ஒன்றுமில்லே என்று சொன்னதை அழிக்கும்படி வீடுபெற வேண்டு மானுல் ஒருவன் துறவறத்துக்குப் போய்த்தான் ஆக வேண்டும் என்ற கருத்தை உண்டாக்குகிருர்.

இந்த அதிகாரத்தின் கடைசிக் குறள்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்பது. இதற்கு, முன்னுலுள்ள நான்கு குறள்களுக்கும் பரிமேலழகரே சொன்ன பொருள்களை ஒட்டி உரை சொன்னல்: உலகத்தில் வாழவேண்டிய முறையில் இல்வாழ்க்கை நடத்துகின்றவன் ஆகாயத்திலுள்ள தெய்வத்தோடு சேர்க்கப்படுவான்—என்பதுதான் பொருளாகும். இதை விரித்துரைத்தால் இல்லறத்தைச் சரியான முறையில் நடத்துகிறவன், அவன் அதற்கென்று வேறு முயற்சி ஒன்றும் செய்யாமலும் தெய்வத்தோடு கலந்துவிடுவான் என்பதுதான் ஆகும். இதன் கருத்து இல்லறத்தைச் சரியாக நடத்திஞல் துறவறத்துக்குப் போகாமலேயே வீடுபெற முடியும்—என்பது. இந்தக் குறளில் திருவள்ளுவர் இதைத்தான் கருதியிருக்க முடியும்.

ஆனுல், பரிமேலழகர் இந்தக் குறளுக்குச் சொல்லுகின்ற உரை என்னவென்ருல்: இல்லறத்தோடு கூடி வாழும் இயல்பினுல் வையத்தின்கண் வாழ்பவன் வையத்தானே எனினும் வானின்கண் உறையும் தேவருள் ஒருவனுக வைத்து நன்கு மதிக்கப்படும்—என்பது. இது பதவுரை. இதற்கு விளக்கமாக—'பின் தேவனுய் அவ்வறப்பயன் நுகர்தல் ஒருதலையாகலின் தெய்வத்துள் வைக்கப்படும்' என்ருர். இதனுன் இன்னிலையது மறுமைப்பயன் கூறப்பட்டது. இம்மைப் பயன் புகழ்; அதை இறுதிக்கட் கூறுப—என்பது விசேட உரை.

இந்தப் பதவுரையும் விசேட உரையும் சொல்லுவது என்னவென்ருல்: இல்லறத்தை நடத்த வேண்டிய முறையில் சரியாக நடத்துகின்றவன் உலகத்திலுள்ள ஒரு மனிதனேயானுலும் அவனை மற்ற மனிதர்கள் ஒரு தேவனுக நன்கு மதித்துப் புகழ்வார்கள். அதன் பிறகு அவன் இல்லறத்தைச் சரியாக நடத்திய அறத்தின் பயனுக ஒரு தேவனுகப் பிறந்து வானத்திலுள்ள இந்திர லோகத்தில் தேவர்கள் அனுபவிக்கின்ற சுகபோகங்களை அனுபவிப்பான்—என்பதுதான்.

இதை இன்னும் கொஞ்சம் விளக்கிச் சொன்னுல்: இல்லறத்தை எவ்வளவு நன்ருக முறை தவருமல் நடத்திஞலும் ஒருவன் அதனுல் அடையக்கூடிய பயன் என்னவென்ருல், அவனை மற்ற மனிதர்கள் ஒரு தேவனுக

மதித்துப் புகழ்வார்கள். அந்தப் புகழே அடுத்த பிறப்பில் அவனை ஒரு தேவனாகப் பிறக்கச் செய்யும்—என்பதே.

இந்தக் குறளுக்குத் திருவள்ளுவர் கருதிய பொருள் இதுவாக இருக்க முடியுமா ? திருக்குறளுக்கு இன்னொரு புதுவுரை எதற்காக என்று ஐயப்படுகிற அறிஞர்கள் சிந்திக்கவேண்டும். இந்தக் குறளுக்கு இது உரையானால் இதற்கு முன்னாலுள்ள நான்கு குறள்களும் அவற்றிற்குப் பரிமேலழகரே தந்துள்ள உரைகளும் பொய்யாகிவிடுகின்றன.

இந்தக் குறளுக்கு இப்படிப் பொருள் கொள்ள இடமேயில்லை. மற்றப் பிழைகள் ஒருபுறமிருக்க 'தெய்வம்' என்ற பதத்தை வள்ளுவர் 'கடவுள்' என்ற ஒரே பொருளில் தான் பிரயோகப்படுத்துகிறார். 'தேவர்' என்ற பதத்தைக் 'கயமை' என்ற அதிகாரத்தில் கயவரைத் தேவரோடு ஒப்பிடுகின்றார். தேவர்களும் உலகத்தின் கட்டுத் திட்டங்களுக்கு உட்பட்டு நடக்கமாட்டார்கள். அதைப் போல கயவனும் உலகத்தின் கட்டுத்திட்டங்களுக்கு அடங்கி நடக்கமாட்டான் என்று சொல்லியிருக்கிறார். இல்லறத்தை வழுவாது நடத்துகின்றவனுக்கு, தேவனாகப்பிறப்பதுதானா நோக்கம் ? அதுதானா நல்வினைப் பயன் ? அந்தப் பிறப்பும் பலபேர் கூடி ஒருவனை தேவருள் ஒருவனாக நன்கு மதித்துப் புகழ்ந்துவிட்ட மாத்திரத்தில் அவனுக்குக் கிடைத்துவிடுமா ? இந்தக் குழப்பத்துக்கெல்லாம் காரணம் திருவள்ளுவர் வர்ணாச்ரம முறையைப் பின்பற்றித்தான் இல்லறத்தையும் துறவறத்தையும் எழுதியிருப்பதாகக் காட்ட முயல்வதுதான். பரிமேலழகருடைய கருத்து. இல்லறத்தின் பயன் இப்பிறப்பில் புகழ் பெறுவதும் மறு பிறப்பில் தேவனாகப் பிறந்துவிடுவதும்தான் என்பதே.

அப்படியானால் ஒரு இல்லறத்தான் எவ்வளவு நிஷ்காமியாக இருந்தாலும் அவன் வீடுபெற முடியாது என்று ஆகிவிடுகிறது. எனின் கர்மயோகத்தினாலும் முக்தியடையலாம் என்று போதிக்கும் பகவத்கீதை பொய்யாகிவிடுகின்றது. வடமொழியிலும் தென்மொழியிலும் இல்லறத்திலிருந்தே முக்தி யடைந்தவர்களைப் பற்றிய கதைகள் பல இருக்கின்றன. அவையெல்லாம் பயனற்ற

வெறும் பொய்கள் தாமா ? துறவிகளும் தேவர்களும்கூட அறியாத ஒரு தெய்வ ரகசியத்தை இல்லறம் நடத்திய திருவள்ளுவர் அறிந்திருந்ததாக,

இழைநக்கி நூல்நிரடும் ஏழை அறிவேனே
குழைநக்கும் பிஞ்ஞகன்தன் கூத்து

என்றதில் அடங்கியிருக்கும் போதனை பொருளற்றதா ? இல்லறம் நடத்தியே இறைவனையடைந்ததாகச் சொல்லப் படுகிற நாயன்மார்களுடைய கதைகளிலும் ஆழ்வார்கள் கதைகளிலும் அடங்கியுள்ள போதனை அர்த்தமற்றதா ?

காடே திரிந்தென்ன ? காற்றே புசித்தென்ன ? கந்தைசுற்றி
ஓடே எடுத்தென்ன ? உள்ளன்பி லாதவர் ஓங்குசெல்வ
நாடே யிடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்
வீடே யிருப்பினும் மெய்ஞ்ஞான வீட்டின்பம் மேவுவரே

என்று இல்லறத்தானும் வீடுபெற முடியும் என்று பாடியது பயனற்றதா ? இல்லறத்தைச் சரியாக நடத்தினல் அது தானகவே ஒருவனைப் பேரின்ப வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும் என்று உறுதி கூறுகின்ற,

ஈதல் அறம் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காதல்இருவர் கருத் தொருமித்து—ஆதரவு
பட்டதே இன்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு

என்று ஔவையார் பாடியது அறியாமலா ?

இப்படிப்பட்ட நன்மொழிகள் எண்ணிறந்தன தமிழிலக் கியங்களில் எடுத்துக் காட்டலாம். அவையெல்லாம் இல் லறத்தானும் பேரின்ப வீட்டைப் பெறலாம் என்று சொல்லுகின்றன. திருவள்ளுவரோ இல்லறத்தைச் சரி யாக நடத்தினல் துறவறத்துக்குப் போகவே வேண்டிய தில்லையென்றும், சரியாக இல்லறம் நடத்துகிறவன் புல னடக்க முயல்கின்ற துறவிகள் எல்லாரினும் சிறந்தவன் என்றும், ஒழுங்கான இல்வாழ்க்கை துறந்தாரைவிட பொறுப்பும் சகிப்பும் உடையது என்றும், மனிதனுக்கு அறன் என்று சொல்லப்பட்டதே இல்வாழ்க்கைதான்

என்றும் சொல்லுவதைப் பரிமேலழகரே ஒத்துக்கொண் டிருக்கிறார்.

அப்படியிருக்க 'வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்' என்பதற்கு, அந்தக் குறளிலுள்ள பதங்களுக்கும் முந்தின குறள்களிற் சொல்லப்பட்ட கருத்துக்களால் உண்டாக்கிய சூழ்நிலைக்கும் ஒரு சிறிதும் பொருந்தாத உரை செய்துவிட்டார். அதனல் இல்வாழ்க்கையை அற வழியில் பிசகாது சரியாகவே நடத்தினலும் அதன் பயன் புகழடைவதும் அந்தப் புகழால் தேவனுகப் பிறந்து சிறந்த சுகபோகங்களை அனுபவிப்பதும் மட்டுந்தான் என்று சொல்லுகிறார். இப்படிப் பொருந்தாத உரையை இங்கே செய்துகொண்டு தவருகத் தாம் செய்துவிட்ட அந்த உரையையே மேற்கோளாகக் காட்டி 'இல்வாழ்க்கை' என்னும் அதிகாரத்தின் கடைசி அதிகாரமாகிய 'புகழ்' என்பதிலுள்ள கடைசிக் குறளுக்கு விசேட உரையாக "மறுமைப் பயன் 'வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்று மேலே கூறப்பட்டது; படவே இல்லறத்திற்கு இவ்வுலகிற் புகழும் தேவருலகிற் போகமும் பயனென்பது பெற்றும்" என்று சொல்லுகின்றார்.

மனிதன் அடைய முயலவேண்டும் என்று சொல்லப் படுகிற உறுதிப் பொருள்களில் தலைசிறந்தது வீடுபெறல். அதாவது முக்தி, மோட்சம் என்று சொல்லப்படுகிற பேரின்பநிலை. இல்லறத்தை வழுவாது நடத்தினல் ஒருவன் அடையக்கூடிய தெல்லாம் அவன் தேவனுகப் பிறப்பதுதான் என்றல் அப்படி தேவனுகப் பிறந்தவன் பேரின்ப நிலையாகிய வீடுபெற முயல்வது எப்போது? தேவனுகப் பிறந்துவிட்டால் வீடுபெற முயலவேண்டிய தில்லை என்பது அர்த்தமா? அல்லது தேவனுகப் பிறந்த அவன் தேவலோகத்தில் காட்டுக்குப் போய் தவம் செய்ய வேண்டும் என்பது அர்த்தமா? அல்லது அவன் அங்கே பாபங்களைச் செய்து மீண்டும் தேவப் பிறப்புக்குக் குறைந்த பிறவியாகிய மனிதப் பிறப்பை அடைந்து மறுபடியும் இல்லறத்தை வழுவாது நடத்தி அறிவுடையனுகிப் பிறப்பினை யஞ்சி வீடுபெறுவதற்கென்று உரித்தாய அற

மாகிய துறவறத்தை மேற்கொண்டு வனத்துக்குச் சென்று தவம் புரியவேண்டும் என்பது அர்த்தமா ?

மேலும் இல்லறம் துறவறம் என்ற இரண்டு அறங்களுள் இல்லறம்தான் சிறந்தது என்று சொன்னதோடு விடாமல், 'அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று இல்லறத்தைச் சரியாக நடத்தினுல் துறவறத்தை நினைக்கவே வேண்டியதில்லை என்று சொன்னுர். அத்துடன் சரியாக இல்வாழ்க்கை நடத்துகிறவன் துறவறத்துக்குப் போய் அடையக்கூடியது ஒன்றுமில்லையென்றும் சொன்னுர். துறவறத்துக்குப் போவதெல்லாம் பேரின்ப நிலையை அடையத்தானே ? நல்ல இல்லறத்தான் துறவறத்துக்குப் போய் அடையக்கூடியது ஒன்றுமில்லை என்ருல், அவன் அங்கே போய் அடையக்கூடிய பேரின்பத்தையோ அல்லது அதைவிடச் சிறந்த ஒன்றையோ இல்லறத்திலேயே அடைய முடியும் என்பதுதானே தீர்ப்பு? அப்படியிருக்க அவ்வளவு சிறப்புடைய இல்லறத்தினுல் அடையக்கூடியது ஒரு தேவனுகப் பிறப்பது மட்டுந்தான் என்றும் அதைவிட மட்டமான துறவறத்தினுல்தான் பேரின்பம் அடைய முடியும் என்பதும் எப்படிப் பொருந்தும் ?

இல்லறத்தின் பயன் தேவனுகப் பிறப்பதுமட்டுந்தான் என்றும் வீடு பெறுவதற்குத் துறவறந்தான் மேற்கொள்ள வேண்டும் என்றும் வேறு நூல்களிற் சொல்லியிருக்கலாம். அதைப்பற்றிய ஆராய்ச்சியோ ஆட்சேபமோ நாம் செய்யப் புகவில்லை. ஆனுல், திருவள்ளுவர் அப்படிச் செய்யவில்லை என்பதைத்தான் நிரூபிக்கிருேம். திருவள்ளுவர் மனிதன் நடத்த வேண்டிய அறம் இல்லறம்தான் என்றும் இல்லறத்தைச் சரியாக நடத்தினுல் அதனுலேயே வீடு பெற முடியும் என்றும் அதனுல் துறவறத்துக்குப் போகவேண்டியது அவசியமல்லவென்றும்தான் சொல்லுகிருர். அதனுல் வள்ளுவர் பிற இலக்கியங்களைப் பின்பற்றித்தான் அறங்களை வகுத்திருக்கிருர் என்று எண்ணிக்கொண்டு அவர் சொல்லாததைச் சொல்லியிருப்பதாகக் காட்டுவது சரியல்ல. திருவள்ளுவர் எந்த ஒரு நூலையும் அப்படியே பின்பற்றித் திருக்குறளை ஒரு வழி நூலாகவோ சார்பு

நூலாகவோ எழுதவில்லையென்றும் திருக்குறளுக்கு மேற்கோளாக எந்த நூலையும் கொள்ளக்கூடாதென்றும் முன்னே சொன்னதை மீண்டும் வலியுறுத்துவோம். திருக்குறளுக்கு முன்னால் உதித்த எல்லா நூல்களிலுள்ள சாரம் எல்லாம் திருக்குறளில் இருக்கிறது. ஆனால், அந்த எல்லா நூல்களுக்கும் புறம்பான தனி நூல் திருக்குறள். எந்த அறிவையும் திருக்குறள் சொல்லுகின்ற முறையில் வேறு எந்த நூலும் சொன்னதில்லை. அதனால் பிற நூல்களைப் பின்பற்றி உரை காணக்கூடாது.

இல்லறத்தின் பயன் தேவனாகப் பிறந்து சுகபோகங்களை அனுபவிப்பதுதான் என்று திருவள்ளுவர் கருதியிருக்க முடியாது என்பதற்கு மேலும் ஒரு ஆதாரம் பார்ப்போம்.

அறத்துப்பால் பகுதியை ஆரம்பிக்குமுன் பாயிரத்தின் கடைசி அதிகாரமாக ‘அறன் வலியுறுத்தல்’ என்பதைச் சொல்லுகிறார். இந்த அதிகாரம் பொதுவாக அறத்தால் அடையக்கூடிய நன்மைகளைப்பற்றிச்சொல்வது. இல்லறம் துறவறம் என்ற இரண்டையும் சேர்த்துத்தான் ‘அறன்’ என்கிறார். இதில் சொல்லப்பட்டுள்ள எல்லாக் குறள்களும் இல்லறத்தைக் குறிப்பனவாகவே இருக்கின்றன. அப்படியிருப்பது பின்னால் ‘அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை’ என்பதை வலியுறுத்தவே அமைந்ததாகத் தெரிகிறது. இதில் துறவறப் பயனைப் பற்றியது என்று பிரித்துச் சொல்லத் தகுந்தது ஒன்றுமில்லை. அதைப் பின்னால் ஆராய்வோம். உடனடியாக இல்லறத்தின் பயன் ‘தேவனாகப் பிறந்து போகமனுபவிப்பது’ என்பதைத் திருவள்ளுவர் கருதியிருக்க மாட்டார் என்பதற்குச் சொல்லப் புகுந்த ஆதாரத்தைப் பார்ப்போம் :

‘அறன் வலியுறுத்தல்’ என்ற அதிகாரத்தின் ஏழாவது குறள் :

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை

என்பது. இதன் கருத்து : பல்லக்கில் உட்கார்ந்து சவாரி போகிறவனையும் அந்தப் பல்லக்கைச் சுமந்து செல்கிற

வனேயும் பார்த்தால் அறத்தால் அடையக்கூடிய பயன் என்னவென்பதைச் சொல்லாமலே அறிந்துகொள்ளலாம் —என்பது. இதுதான் பரிமேலழகரும் இதற்குச் சொல்லும் உரை.

இது என்ன சொல்கிறதென்ருல்: உலகத்தில் சுகபோகம் அனுபவிக்கிற ஒருவனேயும் கஷ்டப்படுகிற ஒருவனேயும் பார்த்து, அவன் ஏன் சுகப்படுகிருன், இவன் ஏன் கஷ்டப்படுகிருன் என்பதைச் சிந்தித்தால் அறம் செய்ததனுல் அடைந்த பயனேயும் அறம் செய்யாததால் அடைந்த பயனேயும் பிறர் சொல்லாமல் நாமே அறிந்து கொள்ளலாம்—என்பது. அதாவது பல்லக்கில் உட்கார்ந்து போகிறவன் முற்பிறப்பில் அறம் செய்தவன். அவனேயும் பல்லக்கையும் சுமந்துகொண்டு போகிறவன் முற்பிறப்பில் அறம் செய்யாதவன். அறம் செய்தவன் சுகப்படுகிருன். அறம் செய்யாதவன் கஷ்டப்படுகிருன். இங்கே பல்லக்கில் சவாரி செய்து சுகப்படுவதான அறப்பயனே அடைந்திருப் பவன் போன பிறப்பில் இல்லறம் செய்தவனுகத்தான் இருக்க முடியும். ஏனெனில் அவன் துறவறம் செய்து அறப்பயனே அடைந்தவனுக இருந்தால் இப்போது பிறந்தே யிருக்கமாட்டான். துறவறத்தின் பயன் மீண்டும் பிறவாமை. அதனுல் முற்பிறப்பில் இல்வாழ்க்கை நடத்தியதன் அறப்பயனுக இவன் மறுபடியும் முன்னிலும் சிறப்புடைய மனிதனுகப் பிறந்து தான் சுகப்படுகிருன் என்று சொல்லப்பட்டிருக்கிறதேயல்லாமல் அவன் இந்திர லோகத்தில் தேவனுகப் பிறப்பான் என்று சொல்லப்பட வில்லே. அதனுல் இல்லறத்தின் பயன் தேவனுய்ப் பிறப்பது என்பது திருவள்ளுவர் சொன்னதல்ல.

இனி இந்த 'அறன் வலியுறுத்தல்' என்ற அதிகாரத்தைச் சிறிது ஆராய்வோம்: இந்த அதிகாரத்திலுள்ள பத்துக் குறள்களேயும் சேர்த்து ஒரு முறை பார்த்து விடுவோம். அப்படிப் பார்த்தால்தான் இந்த அதிகாரத்தின் நோக்கம் என்னவென்பது தெரியும்:

1 சிறப்பினும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனே உயிர்க்கு.

2. அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு.

3. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்.

4. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

5. அழுக்காறு அவாவெகுளி இன்னச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

6. அன்றுஅறிவாம் என்னது அறம்செய்க மற்றஅது
பொன்றுகாற் பொன்றாத் துணை.

7. அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.

8. வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழிஅடைக்கும் கல்.

9. அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல.

10. செயற்பால் தோறும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி.

இந்தப் பத்துக் குறள்களுள் எது இல்லறத்தைக் குறிப்பது. எது துறவறத்தைக் குறிப்பது என்று பிரித்துக் கூற முடியாது. இல்லறத்துக்கும் துறவறத்துக்கும் பொது வாகவே கூறப்பட்டிருக்கின்றன வென்றாலும் இவற்றி லுள்ள பதங்கள் இல்லறத்துக்கே பொருந்துவனவாக இருக்கின்றன. ‘பிறப்பறுத்தல்’ என்ற பயன் துறவறத் துக்கு மட்டுந்தான் என்ற கண்கொண்டு பார்த்தாலும் துறவறத்தோடு சம்பந்தப்படுத்தக்கூடியது ஒரே ஒரு குறள்தான்: அது,

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்

என்பது. இதன் கருத்து: சாகிற வரைக்கும் ஒருவன் நல்ல அறங்களையே செய்தால் அது அவனுக்கு மறு பிறப் பில்லாமல் தடுத்துவிடும்—என்பது.

இதற்குப் பரிமேலழகர் சொல்லும் உரையும் இந்தக் கருத்துடையதுதான். இந்தக் குறளிலுள்ள எந்தப்

பதமும் இது துறவறத்துக்கு மட்டுந்தான் சொல்லப் பட்டது என்று பொருள் கொள்ள இடந்தராது. பரிமே லழகரும் இந்தக் குறளுக்குச் சொல்லுகின்ற விசேட உரையில் ‘ இதனுன் அறம், வீடு பயக்கும் என்பது கூறப் பட்டது ’ என்றுதான் சொல்லுகிருர்.

இந்தக் குறள், இல்லறமோ துறவறமோ பொதுவாக அறம் செய்வதன் பயனைமட்டும் சொல்லுகிற ‘ அறன் வலியுறுத்தல் ’ என்ற அதிகாரத்தில் உள்ளது. அதுவும் இல்லறம் துறவறம் என்ற இருவகை அறங்களுள் மிக்கச் சிறப்புடையது என்று திருவள்ளுவர் உறுதியாகச் சொல்லு கின்ற ‘ இல்லறம் ’ என்ற பகுதியை ஆரம்பிப்பதற்கு முன்னுல் இது சொல்லப்படுகிறது. அதனுல் ‘ வீடு பெறுதல் ’ என்பது இல்லறம் துறவறம் என்ற இரண் டுக்கும் பொதுவானது என்றுதான் திருவள்ளுவர் சொல்லுகிருர் என்பது தெளிவாகிறது. ‘வீடு பெறுவது’ துறவறத்துக்குத்தான் உரியது என்று திருவள்ளுவர் எண்ணியிருந்தால் இந்தக் குறளை இங்கே சொல்லியிருக்க மாட்டார். ஏன்எனின் துறவறத்துக்கென்று ஒரு தனிப் பகுதியை எழுதியவர் இதை அந்தப் பகுதியில்தான் வைத்திருப்பார். அத்துடன்,

## வீடு பெறுதல்

என்பதற்குத் திருவள்ளுவர் சொல்லுகின்ற இலக் கணம் என்னவென்பதையும் இங்கே தீர்மானித்துக் கொள்வது நல்லது. இந்த வீடு என்பது முக்தி, மோட்சம், பேரின்பம், பிறப்பின்மை, நிர்வாணம், சாயுச்சம், இறைவ ளுேடு இரண்டறக் கலத்தல் என்ற பல பெயர்களால் குறிப்பிடப்படுகிறது. இதை வெவ்வேறு புராணங்கள் வெவ்வேறு விதமாகக் கற்பனைகளுடன் கலந்து காட்டு கின்றன. அவற்றையெல்லாம் விலக்கிச் சுருக்கமாக வீடு என்பதற்குத் திருவள்ளுவர் என்ன விளக்கம் சொல்லு கிருர் என்பதை மட்டும் கவனிப்போம்: ‘ வீடு ’ என்ற பதத்திற்கு அர்த்தம் ‘ விடுதலை ’ என்பது. வீடு பெறுதல் என்பதற்கு ‘ விடுதலை பெறுவது ’ என்பது அர்த்தம். யார் விடுதலை பெறுவது ? எதிலிருந்து விடுதலை

பெறுவது? இதற்கு விடை, மனிதனுடைய உடம்பில் அகப்பட்டுக் கொண்டு ஆசாபாச, இன்பதுன்பங்களில் உழன்றுகொண்டிருக்கிற ஆன்மாவானது அந்த உடம்பிலிருந்து விடுதலை பெறுவது. அவ்வளவுதான் 'வீடு பெறுவது' என்பதற்கு அர்த்தம். உடம்பிலிருந்து விடுதலையடைந்த ஆன்மா அதன் பிறகு எங்கே போகும், எப்படி இருக்கும், என்ன செய்யும் என்பதைப்பற்றியெல்லாம் இங்கே ஆராயப் புகவேண்டாம்.

அப்படி ஆன்மாவானது உடம்பிலிருந்து விடுதலை அடைவதற்கு அது என்ன செய்யவேண்டும் என்றால் ஆன்மாவானது உடம்போடு சேர்ந்துகொண்டு ஆசைப் பட்டுக்கொண்டிருப்பதை விட்டுவிட்டால் உடம்பிலிருந்து விடுதலை பெற்றுவிடும். ஆசைகள் எல்லாம் பஞ்சபூதங்களினால் ஆக்கப்பட்ட உடம்புக்கே இயல்பானவையன்றி ஆன்மாவுக்கு இயல்பானவையல்ல. ஆன்மா பஞ்சபூதங்களுக்கு அப்பாற்பட்டது. ஆனால், ஆன்மா தன்னுடைய தன்மையை மறந்து உடம்போடு சேர்ந்துகொண்டு ஆசைகளில் ஈடுபடுவதால்தான் பிறப்புகள் வந்துகொண்டே இருக்கின்றன என்பது ஞான நூல்களின் துணிபு அந்த ஞான நூல்களின் நுணுக்கங்களையெல்லாம் விரிக்காமல் திருவள்ளுவர் சுருக்கமாக ஞானத்தின் பயன் 'அவா வறுத்தல்' என்று சொல்லி, அதை ஞானப் பகுதியின் கடைசி அதிகாரமாக வைத்து அந்த அதிகாரத்தின் கடைசிக் குறளில்,

> ஆரா வியற்கை அவாநீப்பின் அந்நிலையே
> பேரா வியற்கை தரும்

என்று, ஆசைகளை விட்டுவிட்டால் அதுவே 'வீடுபெறல்' என்கிறார். இப்படி ஆசையென்பதே இல்லாத நிலைமை தான் நிஷ்காமிய நிலை என்பது. இந்த நிஷ்காமிய நிலை துறவறத்துக்குத்தான் சொந்தம் என்பது ஞான நூல்களுக்கு விரோதம். குறிப்பாக இது பகவத் கீதையின் போதனையைப் பழிப்பதாகிவிடும். ஆதலால் 'வீடு பெறுதல்' துறவறத்தினால்தான் அடையக்கூடியதென்பதும் தேவனாகப் பிறப்பதுமட்டுந்தான் இல்லறத்தின் பயனென்பதும் திருவள்ளுவரின் கருத்துகளல்ல. திரு

வள்ளுவர் வர்ணாச்ரம முறையைப் பின்பற்றி அறங்களைக் கூறவில்லை என்பதைக் குறள்களிலுள்ள பதங்கள் மிகவும் தெளிவாகக் காட்டுகின்றன. ஆனால், பரிமேலழகர் வர்ணாச்ரம முறையைப் பின்பற்றித்தான் வள்ளுவர் அறங்களை வகுத்திருக்கிறார் என்றே உரை செய்யப் புகுந்து விட்டதால் குறளிலுள்ள பதங்களுக்கு உரிமையில்லாத அர்த்தங்களை மிகவும் வலிந்து புகுத்த வேண்டியதாகி விட்டது. அதற்கு இன்னொரு மிக நல்ல உதாரணம் பாருங்கள். 'அறன் வலியுறுத்தல்' என்ற அதிகாரம் பொதுவாக அறத்தால் அடையக்கூடிய நன்மைகளைப் பற்றிச் சொல்லுவது என்றும் அதில் குறிப்பாகத் துறவறத்தின் பயன் என்று பிரித்துக் கூற ஒன்றும் இல்லையென்றும் முன்னால் சொல்லப்பட்டது. அதைக் காட்டுவதற்காகவே அவ்வதிகாரத்திலுள்ள பத்துக் குறள்களையும் ஒருங்கே காட்டியது. ஆனால்; பரிமேலழகர் துறவறத்தின் பயன், வீடு பெறுவது என்றும், இல்லறத்தின் பயன் தேவலோகத்தில் ஒரு தேவனாகிப் போகங்களை அனுபவிப்பது மட்டுந்தான் என்றும் பின்னால் உரை சொல்லுவதற்கு அனுகூலமாக இங்கேயே 'வீடு பெறுதல்' என்பதையும் 'தேவலோகத்தில் பிறப்பதையும்' மிகவும் வலிந்து புகுத்திக்கொள்ளுகிறார். இந்த அதிகாரத்தின் முதற் குறள் :

> சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
> ஆக்கம் எவனோ உயிர்க்கு

என்பது. இதிலுள்ள பதங்களுக்கு அவற்றிற்குச் சொந்தமுள்ள அர்த்தங்களைக்கொண்டு பொருள் சொன்னால் இந்தக் குறளுக்கு உரை : சிறப்புண்டாக்கும் செல்வமும் உண்டாக்கும் (அதனால்) அறம் செய்வதைக் காட்டிலும் மனிதனுக்கு வல்லமையை அதிகப்படுத்தக் கூடியது என்ன இருக்கிறது—என்பதுதான். அதாவது, அறம் செய்வது நிச்சயமாகச் சிறப்புண்டாக்கும் ; செல்வமும் உண்டாக்கலாம். செல்வம் உண்டாவது நிச்சயமல்லா விட்டாலும் சிறப்புண்டாவது நிச்சயம் என்பதற்காகவே 'செல்வமும்' என்று 'உம்' கூட்டியது. இது அறம் செய்கின்றவன் இப்பிறப்பிலேயே கண்ணுக்கு முன்னால்

அடையக்கூடிய அறப்பயனைச் சொல்லுவதாகத்தான் அமைந்திருக்கிறது.

இதற்குப் பரிமேலழகர் கூறும் உரையைப் பாருங்கள்: பதவுரை—சிறப்பு ஈனும் - வீடு பேற்றையும் தரும்; செல்வமும் ஈனும் - துறக்கம் முதலிய செல்வத்தையும் தரும்; உயிர்க்கு அறத்தின் ஊங்கு ஆக்கம் எவன் - ஆதலால் உயிர்கட்கு அறத்தின் மிக்க ஆக்கம்? யாது—என்பது.

இதில் 'சிறப்பு' என்ற சொல்லுக்கு 'வீடு பெறுதல்' என்றும், 'செல்வம்' என்ற சொல்லுக்கு 'துறக்கம்' என்றும் பொருள் செய்யப்பட்டிருக்கிறது. இது மிகவும் வலிந்து பொருள் கொள்வதாகும்; 'சிறப்பு' என்ற தனிச் சொல்லுக்கு 'வீடு பெறுதல்' என்ற அர்த்தமோ 'செல்வம்' என்ற சொல்லுக்குத் 'துறக்கம்' என்ற அர்த்தமோ அந்தச் சொற்களுக்கு உரிய பொருள்கள் அல்ல. ஆனால், 'மெய்யுணர்தல்' என்ற அதிகாரத்தில் 'பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு' என்ற குறளில் 'சிறப்பு' என்ற சொல் மெய்ப்பொருளாகிய இறைவனைக் குறிப்பதால் இங்கே 'சிறப்பு' என்பது வீடு பெறுதல் என்பதைக் குறிப்பதாகக் கொள்ளலாம். ஆனால், 'செல்வம்' என்ற சொல் 'துறக்கம்' என்பதைக் குறிப்பதாகக் கொள்ளுவதற்கு இடமேயில்லை. மேலும் 'சிறப்பு' என்ற சொல்லையும் இந்தக் குறளில் 'வீடு பெறுதல்' என்ற அர்த்தத்தில் திருவள்ளுவர் பிரயோகிக்கவில்லை. ஏனெனில் 'சிறப்பு' என்ற பதத்துக்குப் பரிமேலழகர் சொல்லுகிறபடி 'எல்லாப் பேற்றினும் சிறந்ததாகிய வீடு' என்பது பொருளானால் அதை 'துறக்கம்' என்று பொருள் சொல்லப்பட்டுள்ள 'செல்வம்' என்பதினும் குறைந்த விஷயம்போல் 'சிறப்பீனும் செல்வமும் ஈனும்' என்று 'துறக்க'த்துக்கு 'வீடு' மட்டமானதுபோல் தொனிக்கும்படிச் சொல்லியிருக்க மாட்டார். 'செல்வம் ஈனும் சிறப்பும் ஈனும்' என்ற தொனியில் சொல்லியிருப்பார். மேலும் 'வீடு' பெற்ற பின் 'துறக்கம்' எதற்கு? 'தேவனாகவும் பிறக்கலாம், வீடு பேற்றையும் அடையலாம்' என்பதுதான் முறை. மோட்சமும் அடையலாம் தேவனாகவும் பிறக்கலாம் என்ற முறை பொருளற்றது. ஆகையால் இங்கே 'சிறப்பு'

என்பதற்கு ‘வீடு பெறுதல்’ என்பது திருவள்ளுவர் கருதிய பொருளாக இருக்க முடியாது. இல்லறத்தின் பயன் துறக்கத்தில் (தேவலோகத்தில்) ஒரு தேவனுகப் பிறப்பது தான் என்றும், வீடு பெறுவது துறவறத்தின் பயன் என்றும் பின்னல் பொருள் சொல்லுவதற்காக இங்கே இந்தப் பதங்களுக்கு இப்படி வலிந்து பொருள் கொள்ளப் பட்டிருக்கிறது.

## தவம்

இனி, இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் சொல்லப் பட்ட ‘தவம்’ என்ற அதிகாரத்தை ஆராய்வோம். ‘தவம்’ என்பது துறவறத்தான் மேற்கொள்ளவேண்டிய விரதங் களுள் ஒன்று. இது துறவறத்தானுக்குக் கட்டாயமான விதி. ‘தவம்’ என்பதைத் திருவள்ளுவர் ஆன்மதத்துவ ரீதியில்தான் சொல்லுகின்ருர் என்றும் உலக வழக்காகத் ‘தவம்’ என்ற சொல்லுக்குக் கொள்ளப்படுகிற ‘புண் ணியம்’ என்ற அர்த்தத்தில் சொல்லவில்லையென்றும் சொன்னேம். பரிமேலழகர் இதை வெறும் புண்ணியம் என்ற பொருளில் உரை செய்துவிட்டதால், இந்த அதி காரத்திற்கு முற்றிலும் வேறு உரைகள் சொல்லவேண்டிய அவசியம் இருக்கிறதென்றும் சொல்லப்பட்டது.

இந்த அதிகாரத்தில் ‘தவம்’ என்பதன் தத்துவம் மட்டுந்தான் சொல்லப்படுகிறது. தவம் என்பதன் தத்துவம் துன்பங்களைச் சகித்துக்கொள்வது என்பது மட்டுந்தான். என்ன துன்பங்கள் எங்கிருந்து எப்படி வந்தாலும் துறவியானவன் அவற்றைச் சகித்துக் கொண்டு தனக்குத் துன்பம் செய்தவர்களுக்கும் திருப்பித் துன்பம் செய்யாமல் ஆன்ம சிந்தனையிலேயே இருக்க வேண்டும். அதனுல் ஆன்ம சக்தியும் தபோபலமும் உண்டாகும். சகிப்புத்தன்மை இடையருமல் இருந்தால் தான் ஞானம் முதிர்ந்து அவாவின்மை கைகூடிப் பிறப் பறுத்தல் சித்திக்கும் என்பது இவ்வதிகாரத்தின் போதனை. இந்த அதிகாரத்தின் முதற் குறள் :

> உற்றநோய் நோற்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
> அற்றே தவத்திற்கு உரு

என்பது. இதன் பொருள் : வந்த துன்பங்களைப் பொறுத்துக்கொள்வது, பிற உயிர்க்குத் துன்பம் செய்யாமல் இருப்பது ஆகிய அவ்வளவேதான் தவத்துக்கு லக்ஷணம் —என்பது.

இதில் உற்ற நோய் நோன்றலோடு பிற உயிர்க்கு நோய் செய்யக்கூடாது என்பது சேர்ந்திருப்பதால் இதன் விரிவுரை— தனக்குப் பிற உயிர்களால் வரும் துன்பங்களைப் பொறுத்துக்கொள்வது, தான் பிற உயிர்க்குத் துன்பம் செய்யாமலிருப்பது என்ற அவ்வளவேதான் தவத்திற்கு இலக்கணம்—என்பதே. இங்கே உயிர் என்றது எல்லா சீவராசிகளையும் குறிப்பது. ஏனெனில் துறவி, முதலில் அருளுடையவனாக இருக்கவேண்டும் என்பது விதி. ஆனாலும் இந்தக் குறளின் கருத்து: தனக்குப் பிறர் செய்கிற துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதும் திருப்பி அவர்களுக்குத் துன்பம் செய்யாமல் இருப்பதும் ஆகிய அவ்வளவேதான் தவத்திற்கு இலக்கணம்—என்பது.

இந்தக் குறளுக்கு இதுதான் சிறப்பான கருத்துரையாகும். ஏனென்றால் பின்னாலுள்ள ' ஒன்னார்த் தெறலும் ' என்ற குறளில் பகைவனுக்கும் தவசி துன்பம் செய்யக் கூடாது என்றிருப்பதால் மனிதனுக்கு மனிதன் என்ற முறையில் தவசி பொறுத்துக் கொள்வதையும் திருப்பித் துன்பம் செய்யாதிருப்பதையும்தான் முக்கியமாகச் சொல்ல வேண்டும்.

பரிமேலழகர் ' உற்ற நோய் நோன்றல் ' என்பதற்கு 'விரதங்களான் உண்டி சுருக்கலும், கோடைக்கண் வெயில் நிலை நிற்றலும், மாரியினும் பனியினும் நீர் நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு. அவற்றால் தம் முயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்தல்' என்று இவ் வதிகாரத்தின் முன்னுரையில் சொல்லுகின்றார். இதில் சொல்லப்பட்ட யோக முயற்சிகளால் உண்டாகும் துன்பங்கள் ' உற்ற நோய் ' என்கின்ற ' வரும் துன்பங்கள் ' அல்ல. இந்தத் துன்பங்கள் துறவி தனக்குத்தானே மனமறிந்து உண்டாக்கிக்கொள்ளும் துன்பங்கள். இவற்றைப் பொறுத்துக் கொள்வதில் சிறப்பொன்றுமில்லை. இருந்தாலும் இவற்றையும் சேர்த்துக்கொள்வதில் குற்றமில்லை.

ஆனால், இவற்றை மட்டும் 'உற்ற நோய்'களாகச் சொல்லிப் பிறர் தனக்குச் செய்யும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்பதைப் பற்றிச் சொல்லாமல் விட்டது பெருங்குறை. அது பின்னுலுள்ள குறள்களின் நோக்கத்தைப் பாதிக்கின்றது.

அடுத்தக் குறள் :

தவமும் தவம்உடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் அது

என்பது. இதற்கும் பரிமேலழகர் தரும் உரை என்ன வென்ருல்: பயனேயன்றித் தவந்தானும் உண்டாவது முற்றவம் உடையார்க்கே; ஆகலான் அத்தவத்தை அம் முற்றவம் இல்லாதார் முயல்வது பயனின் முயற்சியாம்—என்பது. இந்த உரை என்ன சொல்லுகிறதென்ருல்,

தவத்தின் பயனாகிய வீடு பெறுவதற்கு மட்டுமல்ல, தவசி ஆவதற்கே ஒருவன் முற்பிறப்பில் தவம் செய்து, விட்ட குறையுள்ளவனாக இருக்கவேண்டும். அப்படி முற் பிறப்பில் தவம் செய்யாதவன் தவம் செய்ய முயல்வது பயனில்லாத முயற்சியாகும்—என்பது. இதைத் தொடர்ந்து ஒருவன் அறிந்துகொள்ள வேண்டிய எச்ச ரிக்கை என்னவென்ருல், அவன் முற்பிறப்பில் தவஞ் செய்து விட்டகுறை இல்லாதவனாக இருந்தால் அவன் தவத்தில் இறங்கக்கூடாது—என்பது. இது மிகவும் விப ரீதமான போதனை! ஒருவன், தான் போன ஜன்மத்தில் தவம் செய்து விட்டகுறை உள்ளவன் என்பதை எப்படி அறிய முடியும்? தவசி ஆவதற்கே முற்பிறப்பில் தவம் செய்திருக்க வேண்டும் என்ருல் துறவறம் பூண்டு தவம் செய்ய வந்தவன் முற்றவம் இருந்துதானே வந்திருக்கிருன்? இங்கே சொல்லுகின்ற தவம் என்ற அதிகாரம் யாருக்குச் சொல்லப்படுகிறது என்ருல் ஏற்கெனவே துறவு பூண்டு 'அருளுடைமை' அறிந்துகொண்டு 'புலால் மறுத்தல்' மேற்கொண்டு பரிமேலழகரே சொல்லுகின்றபடி 'உயிர் கண்மேல் அருள் முதிர்ந்துழிச் செய்யப்படுகிற தவம்' அல்லவா இது? மனிதன் மேற்கொள்ளக்கூடிய ''அறஞ் செய்தற்குரிய இருவகை நிலையுள் முதலாகலின் இஃது

'அறன் வலியுறுத்தலின்' பின் வைக்கப்பட்டது " என்று 'இல்வாழ்க்கை'க்கு முன்னுரையாகச் சொன்னார். இதனால் எல்லா மனிதருக்கும் இந்த இருவகை அறங்களும் உரியன என்பது சொல்லப்பட்டது. அதன் பிறகு 'துறவறம்' என்ற பகுதிக்கு முன்னுரையாக "துறவறமாவது மேற் கூறிய இல்லத்தின்கண் வழுவாதொழுகி அறிவுடைய ராய்ப் பிறப்பினையஞ்சி வீடு பேற்றின் பொருட்டுத் துறந் தார்க்கு உரித்தாய அறம். அதுதான் வினை மாசு தீர்ந்து அந்தக் கரணங்கள் தூயவாதற் பொருட்டு அவராற் காக்கப்படும் விரதங்களும், அவற்றான் அவை தூயவாய வழி உதிப்பதாய ஞானமும் என இருவகைப்படும்" என்றார்.

இதன்படி, இல்லறத்தில் வழுவாது ஒழுகி அறிவுடைய ரானவர்கள் எல்லாரும் துறவத்துக்கு உரியவர்கள். அப்படி உரியவர்களாகத் துறவு பூண்டவர்கள் தம்முடைய வினை மாசு தீர்ந்து அந்தக் கரணங்கள் தூயன ஆவதற்கு அவர்கள் காக்க வேண்டிய ஒன்பது விரதங் களுள் மூன்றாவதாகச் சொல்லப்படுகிற விரதம் 'தவம்' என்பது. துறவறத்துக்கு உரிமை உடையவர்களாகத் துறவு பூண்டபின் இரண்டு விரதங்களை அறிந்துகொண்டு மூன்றாவது விரதத்துக்கு வரும்போது மட்டும் அவர்கள் அதற்கு உரியவர்களாக, முற்றவம் இருக்கவேண்டும் என்பது எதற்காக? தவம் என்பது ஒரு விரதம்தானே? விரதம் மேற்கொள்ள முற்றவம் எதற்கு? துறவு பூண்டவன் வீடு பெறுவதற்காகச் செய்யவேண்டியது என்ன, செய்யத்தகாதது என்ன என்பதைப்பற்றிய போதனை மட்டும் செய்கிறது திருக்குறள். அதில் முற்றவம் இல்லாதவன் தவசியாக முடியாது, தவசியாக முயல்வதும் பயனில்லாத முயற்சியாகும் என்று சொல்லுவது ஒரு போதனையா? முற்றவம் இல்லாதவன் 'தவம்' என்னும் விரதத்தை மட்டும் முயலக்கூடாது என்றால் இவ்வளவு பாடுபட்டுத் திருவள்ளுவர் துறவறம் நடத்த வேண்டிய நெறி முறையை உபதேசிப்பானேன்? 'முற்றவம் உள்ளவன் முயற்சியில்லாமல் தானாகவே தவசியாகிவிடு கிறான். முற்றவம் இல்லாதவன் என்ன முயன்றாலும்

தவசியாக முடியாது' என்ற இதைச் சொல்ல ஒரு திருவள்ளுவர் எதற்கு ? துறவறம் மேற்கொண்டு விட்டவனுக்கு இது அவனுடைய ஊக்கத்தைக் குலேத்துவிடக் கூடிய பேரிடியாகும். இது மிகவும் தவருன உரை. திருவள்ளுவர் 'தவம்' என்ற அதிகாரத்தில் என்ன சொல்லுகிருர் என்பதையே அறியாமல் சொல்லப்பட்டிருக்கிறது. அதனுல் இந்த உரைக்கு முற்றிலும் வேறுபட்டதாகத் திருவள்ளுவர் கருத்துக்குப் பொருந்தக்கூடிய உரை 'திருக்குறள் புது உரை' என்ற நூலில் சொல்லப்பட்டது.

அப்படி நான் பரிமேலழகர் உரைக்குப் பழுது சொல்லி விட்டதற்கு என்மீது கோபங் கொண்டுவிட்ட பண்டிதர் ஒருவர் என்னைக் கண்டித்து 'ஈழகேசரி' என்ற இலங்கைப் பத்திரிகையில் எழுதியிருப்பதைப் பாருங்கள் :

> "'தவமும் தவமுடையார்க் காகும்' என்ற குறளுக்குப் பரிமேலழகர் உரையைக் கண்டிருக்கிருர் நம் கவிஞர். பரிமேலழகர் உரை தவம் முயல எண்ணுவோருக்கத்தை அழிக்கக்கூடியது என்கிருர் கவிஞர். மெய்ஞ்ஞானமும் தவமும் பிறப்புக்கள்தோறும் தொடர்ந்து வருவதாய்த் தவத்தைப் பின்னே செய்வோம் எனத் தாழ்க்காது உடனே தொடங்கினுல் மேல் வரும் பிறப்புக்களிலாவது நன்மையேற்படும். அதற்காக இப்பொழுது முயலவேண்டும் என்னும் அவசியத்தைப் பரிமேலழகர் வள்ளுவர் கருத்தாக வற்புறுத்துகிருர். அதனுல் தவம் முயல எண்ணுவாருள்ளம் தடைப்பட இடமில்லை"—என்பது. (1955 ஆகஸ்ட் 'ஈழகேசரி'யில் 'திருக்குறள் புது உரை' மதிப்புரை)

இப்படி என்னைக் கண்டிக்கிற இந்த அன்பர் பரிமேலழகர் சொல்லாததைச் சொன்னதாகக் காட்டுகிருர். அப்படித் திரித்துக் காட்டுவதிலும் என்மீது கொண்டு விட்ட கோபத்தாலும் பரிமேலழகர்மீதுள்ள பாசத்தாலும் தாம் எழுதியது தம்மையே மறுப்பதாக அமைந்திருப்

பதைக் காண முடியவில்லை. முதலில் பரிமேலழகர் இந்தப் புலவர் சொல்லுகிறபடியா சொல்லியிருக்கிறார்? பரிமேலழகர் என்ன சொல்லுகிறார், இந்தப் பண்டிதர் என்ன சொல்லுகின்றார் என்று பாருங்கள். பரிமேலழகர் சொல்லுவது :

> 'பயனே யன்றித் தவந்தானும் உண்டாவது முற்றவ முடையார்க்கே; ஆதலான் அத் தவத்தை அம்முற்றவ மில்லாதார் முயல்வது பயனின் முயற்சியாம்.'

இது பரிமேலழகர் சொல்லுவது. இதுவும் பரிமேலழகர் சொன்னதாக இந்தப் பண்டிதர் மேலே சொல்லுவதும் ஒன்றுதானா? சீர்தூக்கிப் பாருங்கள். பரிமேலழகர், 'தவந்தானும் உண்டாவது முற்றவ முடையார்க்கே' என்கிறார். இந்தப் பதங்களுக்கு அர்த்தம் 'தவம் என்பதே முற்பிறப்பில் தவம் செய்திருந்தவனுக்குத்தான் உள்ளதாகும்' என்பதுதானே? அப்படியானால் இந்தப் பண்டிதர் சொல்லுகிறபடி 'காலந் தாழ்க்காது உடனே தொடங்கினால் மேல்வரும் பிறப்புக்களிலாவது நன்மை யேற்படும்' என்பது எப்படி? இதில் இந்தப் பண்டிதர், 'இந்தப் பிறப்பில் தவத்தைத் தொடங்கினால் அது இனி வரும் பிறப்புக்களுக்காவது நன்மையுண்டாக்கும்' என்று தானே சொல்லுகிறார்? அப்படியானால் முற்றவம் இல்லா தவர்கள் எப்படி இப்பிறப்பில் தவம் தொடங்க முடியும்? 'இந்தப் பிறப்பில் ஆரம்பித்தால்தான் அது இனி வரும் பிறப்புக்களுக்காவது பயன்படும்' என்பதுதானே இவர் சொல்லுவது? இவர் சொல்லுவதில் உள்ள 'உடனே தொடங்கினால்' என்ற சொற்றொடர் 'இந்தப் பிறப்பிலேயே ஆரம்பித்தால்' என்றுதானே பொருளாகிறது? இப்போது தான் ஆரம்பிக்கிற இவனுக்கு முற்றவம் ஏது?

'அம்முற்றவம் இல்லாதார் முயல்வது பயனின் முயற்சி' என்கிறார் பரிமேலழகர். ஆனால், இந்தப் பண்டிதரோ 'உடனே தொடங்கினால் மேல்வரும் பிறப்புக்களிலாவது நன்மையேற்படும். அதற்காக இப்பொழுது முயல வேண்டும்' என்கிறார். பரிமேலழகர், 'முயல்வது பயனற்றது' என்கிறார். இந்தப் பண்டிதர், 'முயல்வது

பயனுள்ளது ' என்கிருர். இரண்டும் ஒன்றுதானு? பண்டிதரவர்களே பதில் சொல்லட்டும்.

மேலும் பண்டிதர், ' மெய்ஞ்ஞானமும் தவமும் பிறப்புக்கள்தோறும் தொடர்ந்து வருவதாய்த் தவத்தைப் பின்னே செய்வோம் எனத் தாழ்க்காது உடனே தொடங்கினுல் மேல்வரும் பிறப்புக்களிலாவது நன்மையேற்படும் ' என்று சொல்கிருர். இதில் இருக்கிற அமைப்பின்படி இவர் மெய்ஞ்ஞானமும் தவமும் பிறப்புக்கள்தோறும் தொடர்ந்து வரும் என்கிருரா அல்லது ' தொடர்ந்து வருவதாய் ' எண்ணிக்கொண்டு விடக்கூடாது என்கிருரா என்பது தெளிவாகத் தெரியவில்லை. எனினும், தொடர்ந்து வரும் என்று சொல்வதாகத்தான் கொள்ளவேண்டும். ஏனெனில் ' மேல்வரும் பிறப்புக்களிலாவது ' என்றதில் ' பிறப்புக்கள் ' என்ற பன்மை இருப்பதால் ' தொடர்ந்து வரும் ' என்று சொல்வதாகத்தான் தெரிகிறது. மெய்ஞ்ஞானமும் தவமும் பிறப்புக்கள்தோறும் தொடர்ந்து வருவது உண்மையானுல், இந்தப் பிறப்பிலும் தொடர்ந்து வந்திருக்கத்தானே வேண்டும் ? அப்படியானுல் 'மேல் வரும் பிறப்புக்களிலாவது நன்மையடைய உடனே தொடங்க வேண்டும் ' என்பது என்ன ? ஒவ்வொரு பிறப்பிலும் தொடர்ந்து வரவேண்டிய தவமும் ஞானமும் இந்தப் பிறப்பில் மட்டும் இல்லாது போவதெப்படி ? அதனுல் ஒவ்வொரு பிறப்பிலும் முற்றவம் இருக்கத்தானே செய்கிறது. அப்படியானுல் பரிமேலழகர் ' தவந்தானும் உண்டாவது முற்றவம் உடையார்க்கே. ஆகலான் அத்தவத்தை அம்முற்றவமில்லாதார் முயல்வது பயனில்லாத முயற்சியாகும் ' என்பதன் அர்த்தமென்ன ? தவம் ஒவ்வொரு பிறப்பிலும் தொடர்ந்து வருவது என்ருல் அநாதி காலத்திலிருந்து ஒவ்வொரு பிறவியிலும் தொடர்ந்து வருகிறது என்று அர்த்தமா ? அப்படியானுல் முற்றவம் இல்லாத பிறப்பே இருக்க முடியாதே ! அப்படியன்றி, தவம் செய்யத் தொடங்கியபின் வீடு பெறுகிற வரைக்கும் ஒவ்வொரு பிறவியிலும் தொடர்ந்து வருவது என்ருல் ஏதாவது ஒரு பிறப்பில்தானே தவம் ஆரம்பிக்கப் பட்டிருக்க வேண்டும் ? அதுவானுல் அங்கே முற்றவம் ஏது ?

பரிமேலழகரின் உரைகள் காட்டுகின்றபடி 'முற்றவ முடையார்' எவரென்ருல் போன பிறப்பில் (அல்லது பிறப்புக்களில்) 'இல்லறத்தின்கண் வழுவாது ஒழுகி அறிவுடையராய்ப் பிறப்பினை அஞ்சி வீடுபேற்றின் பொருட்டுத்' துறவறம் புரிந்து, அந்தத் துறவறம் பலிக்காமல் மறுபடியும் பிறந்துவிட்டவர்கள். 'முற்றவ முடையார்' என்பதற்கு இதைத் தவிர வேறு பொருள் கொள்ள முடியாது. இப்படிப் பல பிறப்புக்கள் அடைந்து ஒவ்வொரு பிறப்பிலும் 'இல்லறத்தின்கண் வழுவாது ஒழிகிப்' பிறகு துறவறத்துக்குப் போய்க்கொண்டிருந்தால் ஏதாவது ஒரு பிறப்பில் துறவறம் பலித்து வீடுபேறு அடையலாம் என்பதுதான் இந்த 'முற்றவம் உடையார்' என்பதற்கு விரிவுரை. பரிமேலழகர் 'தவமும் தவமுடையார்க்காகும்' என்ற குறளுக்குத் தருகின்ற விசேடவுரையில் "பரிசயத்தால் அறிவும் ஆற்றலும் உடையராய் முடிவு போக்கலின் 'தவமுடையார்க் காகும்' என்ருர்" என்று சொல்லுகிருர். இங்கே 'பரிசயத்தால், என்பது 'முற்பிறப்பின் பரிசயம்.' அதாவது முற்பிறப்பில் துறவறம் நடத்தியிருந்த பழக்கத்தால் இப்பிறப்பில் வீடுபெறுதல் என்ற 'முடிவு போக்க' முடியும் என்பது. அப்படியானுல் முற்பிறப்பில் துறவு நடத்தி, அதில் முடிவு போக்காதவன் அந்தத் துறவறப் பரிசயத்தோடு கூடிய மனிதனுகவே இப்பிறப்புக்கு வந்தவனுகிருன். அது நிச்சய ஞானமாகுமா? முற்பிறப்பில் துறவு நடத்தியவன் அதைச் சரியாக நடத்தி முடிக்காததால்தானே மறு பிறவி வந்தது? முற்பிறப்பில் துறவறம் நடத்தியவ்ன் அத்துறவறத்திலிருந்தும் செய்யத்தகாத பாவத்தைச் செய்துவிட்டாலும் அவனுக்கு மறுபிறப்பும் மனிதப் பிறவியாகவே கிடைக்குமா? பாவங்கள் செய்து 'இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ' என்பது தானே அறிவறிந்த பெரியோர்களின் ஏக்கம்?

துறவு பூண்டவன் அதைச் சரியாக நடத்திவிட்டால் அவன் வீடு பெற்றுவிடுகிருன்; அவனுக்கு மறுபிறப்பில்லை. துறவு பூண்டவன் அதை அரைகுறையாகச் செய்தால் பூரண பயன் கிடைக்காமல் அவன் மீண்டும் மனிதனுகவே பிறக்க முடியும். ஆனுல், துறவு பூண்டவன்

இடையில் மிக்கப் பாவமான காரியத்தைச் செய்துவிடவும் நேரலாமல்லவா? அப்படிப்பட்டவன் மற்றப் பாவிகளைப் போலவே மனிதப் பிறப்பைவிடத் தாழ்ந்த பிறப்பை அடையவேண்டியவன் தானே? இல்லை, அவன் துறவு பூண்டு பாவத்தைச் செய்ததற்காகச் சலுகை காட்டலாம் என்ற சாஸ்திரம் உண்டா? இருக்க முடியாது. யாராலும் வினைப் பயனைக் கடக்க முடியாதென்பதுதான் விதி. அப்படியானல் ' முற்றவமுடையார்' எனப்பட்டு, முற்பிறப்பில் துறவறம் நடத்திய ஒருவன் அந்தப் 'பரிசயம்' உள்ள மனித ஜன்மமே இப்பிறப்பிலும் அடைவான் என்பது அசாத்தியம்.

'தவம்' என்பதற்குப் பரிமேலழகர் சொன்ன பொருள் 'மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கலும், கோடைக்கண் வெயிலினை நிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்றான் தம்முயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்து, பிற வுயிர்களை ஓம்புதல்' என்பது.

இதன்படி 'முற்றவம்' என்பதற்கு 'முற்பிறப்பில் மேலே சொன்ன காரியங்களைச் செய்தவர்கள்' என்பது தான் பொருளாக முடியும். 'தவமும் தவமுடையார்க் காகும்' என்பதற்குப் பரிமேலழகர் தரும் உரை, 'பயனே யன்றித் தவந்தானும் உண்டாவது முற்பிறப்பில் உண்டி சுருக்கி, வெயிலில் நின்று, மழையில் நனைந்து, பனியில் நடுங்கி, நீரில் நின்று செய்த பலவிதமான காரியங்களால் பொறுத்துக்கொண்ட துன்பங்களின் பயன் என்ன வென்றால், இந்தப் பிறப்பிலும் அதே காரியங்களைச் செய்து அதே துன்பங்களைப் பொறுத்துக்கொள்ள உரிமை பெற்று விட்ட ஒன்றுதான். இந்த ஜன்மத்திலும் இவற்றை யெல்லாம் செய்தாலும் இதற்கடுத்த ஜன்மத்தில் அடையக் கூடிய முதற் பயனும் மறுபடியும் இதையே செய்ய உரிமை யுள்ளவனாவதுதான். பயனேயன்றி என்று பயனை ஒதுக்கிவிட்டதால் தவத்தால் அடையக்கூடிய பயன் என்னவென்பதைப்பற்றிய பேச்சு இங்கில்லை. உண்டி சுருக்கவும், வெயிலில் நிற்கவும், மழையில் நனையவும்கூட

ஒருவன் முற்பிறப்பில் அவற்றைச் செய்த பரிசயம் உடையவனுக இருக்க வேண்டுமா ?

ஆதலால் பரிமேலழகர் இந்தக் குறளுக்குத் தந்துள்ள உரை திருக்குறளின் நோக்கத்திற்குப் பொருந்தாது என்பதுமட்டுமல்லாமல் பொருளற்றதாகவும் இருக்கிறது. மேலும் நிச்சயமான விடை சொல்ல முடியாத பல கேள்வி களைக் கிளப்பி ஐயந்திரிபுகளுக்கு இடமுண்டாக்கும் குழப்ப முடையதாகவும் இருக்கிறது.

திருவள்ளுவர் விவாதங்களை உண்டாக்கக்கூடிய வேதாந்த சித்தாந்த சமய வாதங்களில் இறங்கவில்லை. வேதாந்திக்காஞலும், சித்தாந்திக்காஞலும், வெயிலில் நின்றும், மழையில் நனைந்தும், உண்டி சுருக்கியும், பனியில் விரைத்தும் இன்னும் இவைபோன்ற மிக்க கடுமையான அப்பியாசங்களைச் சாதித்தும் அவற்றின் பயனுக எந்த ஒரு மனப்பக்குவத்தைத் துறவியானவன் அடையவேண்டுமோ அதைமட்டுந்தான் இந்தத் ' தவம் ' என்ற அதிகாரத்தில் சொல்லுகின்ருர். அதை மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்லுகின்ருர். அந்த மனப்பக்குவம் இருந்தால்தான் அவன் ஞானம் அடைந்து அவாவின்மை சித்தியாகி, வீடுபெற முடியும் என்கிருர். அந்த மனப்பக்குவம் இல்லாதவன் வீடுபெற முயல்வது வீண் முயற்சி ஆகும். அந்த மனப்பக்குவம் ஒன்றேதான் ' தவம் ' என்பது. ' தவம் ' என்பது இதுதான் ; இதற்கு மேல் ஒன்றுமில்லை என்பதை,

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு

என்று மிகத் தெளிவாகவும் தீர்மானமாகவும் சொல்லு கிருர். இதன் பொருள் : தனக்கு வந்த துன்பங்களைப் பொறுத்துக்கொள்வது ; தான் பிற உயிர்க்குத் துன்பம் செய்யாதிருப்பது ஆகிய அவ்வளவேதான் தவத்தின் இலக்கணம்—என்பது. என்ன துன்பம், எங்கிருந்து எப்படி வந்தாலும் சகித்துக்கொள்ளவேண்டும். திருப்பி எந்த உயிர்க்கும் துன்பம செய்யக்கூடாது என்ற மனப் பக்குவம் ஒன்றேதான் தவம்.

இந்தத் தவக்குணம் உடையவன்தான் வீடு பெறத் தகுதியுடையவன். அந்தக் குணம் இல்லாதவன் வீடு பெற முயல்வது பயனற்ற முயற்சியாகும் என்பதைத்தான்,

தவமும் தவமுடையார்க் காகும் அவம் அதனை
அஃதிலார் மேற்கொள் வது

என்ற அடுத்த குறளில் சொல்லுகின்றார். இதன் பொருள் மிகவும் தெளிவாக இருக்கிறது : தவம் யாருக்குப் பயனளிக்குமென்றால் மேற்சொன்ன 'உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை' ஆகிய தவக் குணம் உள்ளவர்களுக்கே ; அந்தக் குணம் இல்லாத வர்கள் வீடுபெற முயல்வது பயனற்றதாகும்—என்பது.

'தவம்' என்பது இதுதான் என்று வள்ளுவரே எல்லை கட்டிப் பொருள் சொன்ன பிறகு நாம் அதை மறைக்கக் கூடிய வேறு பொருள் கூற என்ன உரிமை இருக்கிறது ? இந்த அதிகாரத்தில் உள்ள பத்துக் குறள் களில் ஆறு குறள்களில் சகிப்புத்தன்மைதான் தவம் என்று சொல்லிவிட்டு, மீதி நான்கு குறள்களிலும் அதனால் அடையக்கூடிய பயனைச் சொல்லுகின்றார்.

துன்பங்களைச் சகித்துக்கொள்வதுதான் தவம் என்று முதலிற் சொல்லி, அந்தக் குணம் இல்லாதவன் தபோபலம் அடைய முடியாது என்பதை இரண்டாவதாகச் சொல்லிப் பிறகு அந்தச் சகிப்புத்கன்மையினால் சில சங்கடங்கள் நேர்ந்தாலும் நிலை குலைந்து விடக்கூடாது என்பதை மூன்றாங்குறளில் சொல்லுகிறார். யார் என்ன சொன்னா லும் சகித்துக்கொண்டிருப்பது ஆரம்பத்தில் கஷ்டமாகத் தான் இருக்கும். எவனாவது ஒரு துஷ்டன் துறவியை ஏளனமாகப் பேசிவிடலாம், அல்லது ஒரு சிறு துன்பம் செய்துவிடலாம். அதனால் துறவிக்கு ஆத்திரம் உண்டாகி சகிப்புத்தன்மை கெடக்கூடியதான ஒரு காரியத்தைத் தற்காப்புக்காகச் செய்துவிடவேண்டிய நிலைமை ஏற்பட லாம். அப்போதும் அந்தத் துறவி சகிப்புத்தன்மையை இழந்துவிடாமலிருக்கவேண்டும். அவனுக்குத் தீங்கு செய்த துஷ்டனைச் சமுதாயம் கண்டித்துத் துறவிக்குப் பாதுகாப் பளிக்கும். துறந்தாரின் நலங்களைத் 'துறந்தார்க்கும்

துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை' என்று சொன்னபடி இல்லறத்தார் கவனித்துக் கொள்வார்கள் என்பதை,

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்

என்ற அடுத்த குறளில் சொல்லுகிறார். இதன் பொருள்: துறவிகளின் சௌகரியங்களைக் கவனித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் துறவிகளல்லாத மற்றவர்கள் தவம் செய்யாமல் இல்லறவாசிகளாக இருக்கின்றார்கள்போலும்--என்பது. இதன் கருத்து, துறவியைப் பாதுகாத்து அவனுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கத்தான் ஏராளமான இல்லறத்தார்கள் இருக்கின்றார்களே! அவன் ஏன் தனக்கு யாராவது தவறு செய்து விட்டால் அதற்காகத் தன் பொறுமையை இழந்து தவக் குணத்தில் தவறிவிட வேண்டும்?—என்பதே. இந்தக் குறள் இங்கே வைக்கப்பட்டிருப்பதன் நோக்கமே துறவு பூண்டவனுக்கு இந்த எச்சரிக்கை செய்யவே. துன்பம் செய்தவனைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் இல்லற தர்மம் இடம் கொடுக்கும் என்பது மட்டுமல்ல; அது இல்லறத்தின் கடமையும் ஆகும். ஆனால், துறவி பொறுத்துக்கொண்டிருப்பதைத் தவிர்த்துக் கண்டிக்கவோ தண்டிக்கவோ செய்யக்கூடாது.

இந்தக் குறள் இங்கிருப்பதன் நோக்கத்தை அறியாமல் பரிமேலழகர் இதற்குச் செய்கின்ற உரை இல்லறத்தைக் குறைத்துக் கூறுவதாகிவிட்டது. பரிமேலழகர் உரை: 'இல்லறத்தையே பற்றி நிற்பார், துறந்தார்க்கு உண்டியும் மருந்தும் உறையுளும் உதவலை விரும்பித் தாம் தவம் செய்தலை மறந்தார்போலும்'—என்பது பதவுரை. இதற்கு விளக்கமாக அவர் சொல்வது :—வேண்டிய வேண்டியாங்கெய்தற் பயத்ததாகலின் யாவராலுஞ் செய்யப்படுவதாகிய தவத்தை, தாம் செய்யும் தானத்தின்மேல் விருப்பம் மிகுதியால் 'மறந்தார் போலும்' எனவே, தானத்தின் தவம் மிக்கதென்பது பெற்றாம்—என்பது.

இந்த உரையை ஊன்றிப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த உரை என்ன சொல்லுகிறதென்றால்:

'இல்லறத்தை விட்டுத் தொலேக்காமல் அதையே பற்றிக்கொண்டு நிற்கும் இல்லறத்தார், துறவிகளுக்கு உணவும் மருந்தும் இருப்பிடமும் கொடுத்து உதவுவதை விரும்பித் தாங்களும் துறவறத்துக்குப் போகாமலிருக் கிருர்கள். விரும்பியதையெல்லாம் விரும்பியபடியே கொடுக்கக்கூடியது தவம். அது எல்லா மனிதராலும் செய்யப்படவேண்டியது. அப்படியிருந்தும் இந்த இல்லறத் தார், துறவிகளுக்கு உண்டி முதலியவற்றைக் கொடுக்கிற தானத்தின்மேல் வைத்துள்ள விருப்ப மிகுதியால் தாமும் தவம் செய்ய வேண்டும் என்பதையே மறந்துவிட்டார்கள் போலும். அதனுல் இல்லறத்தாஞக இருந்துகொண்டு தானம் செய்வதைக் காட்டிலும் துறவறத்தாஞகத் தவம் செய்வது சிறந்தது என்பது விளங்குகின்றது'—என்று தான் பரிமேலழகர் உரை சொல்லுகிறது.

இந்த உரை திருவள்ளுவருடைய கருத்துக்களே முற்றிலும் மறுப்பதாகிறது. அல்லது மறைப்பதாகிறது. துறவறத்தைக் காட்டிலும் இல்லறமே சிறந்தது என்பதை மிகவும் அழுத்தமாகச் சொல்லியிருக்கிற வள்ளுவர் இதைச் சொல்லுவாரா? 'அறமெனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று சொன்ன வள்ளுவர் எல்லா மக்களும் செய்ய வேண்டியது துறவறம்தான் என்று சொல்லுவாரா? 'இயல்பினுல் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் முயல் வாருளெல்லாம் தலே' என்று சொன்ன வள்ளுவர், இல்லறத்தாஞக இருந்துகொண்டு துறவிகளுக்குத் தானம் செய்வதைக் காட்டிலும் துறவியாகித் தவம் செய்வது மிக்கது என்று சொல்லுவாரா? 'துறந்தார்க்கும் துவ் வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணே' என்று சொன்ன வள்ளுவர் எல்லாரும் துறவு பூண்டு தவம் செய்ய வேண்டும் என்று சொல்லுவாரா? 'உழவினுர் கைம்மடங்கின் இல்லே-விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கும் நிலே' என்று உழவாளி இல்லாவிட்டால் துறவிக்கும் நிலேயில்லே என்று சொன்ன வள்ளுவர் எல்லா மக்களும் துறவு பூண்டு தவம் செய்யவேண்டும் என்று சொல்லுவாரா? அத்துடன் தவம் 'வேண்டிய வேண்டி யாங்கு எய்தற் பயத்ததாகலின்' என்று பின்னுலுள்ள

ஒரு குறளிலுள்ள சொற்ருெடரை இழுத்துக்கொண்டு அதற்கும் ஒரு தவருன உரையைப் பரிமேலழகர் இங்கேயே புகுத்திக்கொள்ளுகிருர். அதைப்பற்றி அந்தக் குறளில் ஆராய்வோம்.

ஆதலால் 'துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி' என்ற இந்தக் குறள், முன்னே சொன்னபடி சமுதாயத்தி லுள்ளவன் யாரேனும் துறவிக்குத் தவறு செய்தாலும் அதைக் கண்டித்துத் துறவிக்குப் பாதுகாப்பளிக்க இல்லறத்தார்கள் இருக்கிருர்கள். துறவி, தன் தவக் குணமாகிய சகிப்புத் தன்மையை விட்டுவிடக் கூடாது என்ற எச்சரிக்கை செய்யவே இங்கு சொல்லப்பட்டது.

இதில் இன்ஞெரு மிக முக்கியமான விஷயத்தைக் கவனிக்கவேண்டும். இங்கே சொல்லப்படுகிற தவசி இல்லறத்தாருக்கு மத்தியில் இருப்பவன். இவன் வனத் துக்குப் போய்விட்ட துறவியல்ல. இதனுல் திருவள்ளுவர் சொல்லுகின்ற துறவறம் வர்ணுச்ரம முறையைப் பின் பற்றிச் சொல்லப்பட்டதல்ல என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

இப்படி 'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை' என்ற தவக்குணத்தை விட்டுவிடாமல் என்ன துன்பம் வந்தாலும் சகித்துக்கொண்டு ஆன்ம சிந்தனை யிலேயே தவசி ஈடுபட்டிருந்தால் தவ வலிமை உண் டாகும். அதனுல் அவன் சொன்னது பலிக்கும். அவன் விரும்பினுல் சாபமும் கொடுக்க முடியும்; வரமும் கொடுக்க முடியும் என்பதை,

> ஒன்ஞர்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
> எண்ணின் தவத்தான் வரும்

என்ற குறளில் சொல்லுகிருர். இதன் பொருள்: விரோதி களுக்குக் கேடுண்டாகச் செய்யவும் நண்பர்களுக்கு நன்மை யுண்டாகச் செய்யவும் எண்ணினுல் தவவலிமையினுல் செய்ய முடியும்—என்பது. இதன் கருத்து: தவசியானவன், செய்யவேண்டுமென்று எண்ணினுல், தனக்குத் துன்பச் செய்தவர்களுக்குச் சாபமிட்டுக் கேடுண்டாக்குவதையும் தனக்கு நன்மை செய்து இன்பமுண்டாக்கியவர்களுக்கு

வரம் கொடுத்துச் சிறப்படையச் செய்வதையும் அவனுடைய தவவலிமையினுல் செய்ய முடியும்—என்பது.

இந்தக் குறளிலுள்ள 'எண்ணின்' என்ற சொல் மிகவும் முக்கியமான எச்சரிக்கை. இந்தச் சொல்லின தொடர்ச்சிதான் அடுத்த குறள். இந்த 'எண்ணின்' என்ற சொல்லைத் தொடர்ந்தால் அடுத்துச் சொல்ல வேண்டியது 'ஆனுல் எண்ணக்கூடாது' என்பதுதான். அதைத்தான் அடுத்த குறளில் காரணத்தோடு சொல்லுகிருர். என்ன சொல்லுகிருர் என்ருல்:—வேண்டாதவர்களுக்குச் சாபமிட்டு அவர்களைக் கெடுப்பதும் வேண்டியவர்களுக்கு வரம் கொடுத்து அவர்களை வாழ்விப்பதும் தவசியானவன் 'எண்ணினுல்' அவன் செய்ய முடியும். ஆனுல், அதை அவன் செய்யக்கூடாது. ஏனென்ருல் துறவறம் பூண்டவனுக்கு வேண்டியவன் என்றும் வேண்டாதவன் என்றும் யாரும் இருக்கக்கூடாது. அதை மறந்து அவன் தன் தவவலிமையினுல் சாபமோ வரமோ கொடுத்தால் அதோடு அவன் அதுவரையிலும் செய்த தவத்தால் அடைந்துள்ள தவவலிமை தீர்ந்து போய்விடும். வீடு பெறுவதற்கென்று சேகரித்த தவவலிமை சாபமிட்டதனுல் செலவாகிவிட்டதால் வீடு பெறுவதற்கு மறுபடியும் தவத்தை ஆரம்பிக்கவேண்டும், அதைத்தான் அடுத்த குறளில் :

> வேண்டிய வேண்டியாங்கு எய்தலான் செய்தவம்
> மீண்டும் முயலப் படும்

என்று சொல்லுகின்ருர். இதன் பொருள் : விரும்பியதை விரும்பியபடி எய்து விடுவதால் செய்த தவத்தை மறுபடியும் தொடங்கவேண்டும்—என்பது. இதற்கு விரிவுரை: சாபமோ வரமோ எதை விரும்புகிருனே அதை விரும்பியபடியே பிரயோகித்துவிடுவதால் அதுவரையிலும் செய்த தவம் அத்துடன் அழிந்து போவதால் புதிதாகத் தவத்தை மீண்டும் முயலவேண்டும்—என்பது. இதுதான் இந்தக் குறளுக்கு வள்ளுவர் கருதும் பொருள். இந்த குறளிலுள்ள 'எய்தலான்' என்ற சொல்லுக்குப் 'பிரயோகிப்பதால்' என்ற பொருள் கொள்ளவேண்டும். 'அம்பெய்தல்' என்ற சொல்லிலுள்ள 'எய்தல்' என்ற பதத்துக்கு

என்ன பொருளோ அதே பொருள்தான் இங்குள்ள 'எய்தலான்' என்பதற்கும். 'எய்தலான்' என்பதற்கு 'அடைவதால்' என்ற பொருள் கொள்ளக்கூடாது. தவம், என்பதன் தத்துவத்தை மிக அழுத்தமாகக் காட்டுகின்ற அருமையான குறள் இது. 'தபஸ்' என்பதைப்பற்றி வடமொழியிலுள்ள தத்துவ நூல்களும் புராணக் கதைகளும் சொல்லுகின்ற உண்மையை உள்ளடக்கியது இந்தக் குறள்.

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தருகின்ற உரையைப் பாருங்கள் :

பதவுரை : வேண்டிய வேண்டியாங்கு எய்தலான் = முயன்ருல் மறுமைக்கட்டாம் வேண்டிய பயன்கள் வேண்டியவாறே பெறலாம் ஆதலால் ; செய்தவம் ஈண்டு முயலப்படும் = செய்யப்படுவதாய தவம் இம்மைக்கண் அறிவுடையோரான் முயலப்படும்—என்பது.

விசேட உரை : 'ஈண்டு' என்பதனுன் மறுமைக்கண் என்பது பெற்ரும். மேற்கதி, வீடுபேறுகள் தவத்தானன்றி எய்தப்படா என்பதாம்—என்பது.

இந்த உரைகள் என்ன சொல்லுகின்றனவென்ருல் : இந்தப் பிறப்பில் தவம் செய்தால் அடுத்த பிறப்பில் நாம் எதை விரும்புகிருேமோ அதை அப்படியே அடைய முடியும். ஆகையினுல் நாம் அறிவுள்ளவர்களாக இருந்தால் இந்தப் பிறப்பிலேயே தவம் செய்யவேண்டும். இல்லறம் செய்து தேவனுகப் பிறப்பதற்காலுலும் சரி துறவறம் செய்து வீடு பெறுவதற்காலுலும் சரி தவம் செய்யாமல் முடியாது—என்றுதான் சொல்லுகின்றன.

இது எவ்வளவு குழப்பமுள்ளதாக இருக்கிறது பாருங்கள் இல்லறம் துறவறம் என்ற இரண்டும் ஒன்ருேடொன்று மோதிக் குழம்புகின்றன. இரண்டு அறங்களுக்கும் பொருந்தாத அசத்தியமும், அடைய முடியாத அசாத்தியமும் அடங்கியதாக இருக்கிறது. முதலில் துறவறம் பூண்டு தவம் புரிவது அடுத்த பிறப்பில் ஒரு நன்மை பெற வேண்டியா ? துறவறம் தொடங்கியதே 'இல்லறத்தின்கண் வழுவாது ஒழுகி அறிவுடையராய்ப் பிறப்

பிணையஞ்சி வீடுபேற்றின் பொருட்டு' அல்லவா ? இது சத்தியமானல், தவம் செய்வது அடுத்த பிறப்பில் ஒரு நன்மையைக் கருதி என்பது அசத்தியமல்லவா ? அது போகட்டும். தவம் செய்தால் அடுத்த பிறவியில் நாம் எதை விரும்புகின்றோமோ அதை விரும்பியபடியே அடைந்துவிட முடியுமா ? அடுத்த பிறப்பில் தான் ஒரு அரசனைகப் பிறக்க வேண்டும் என்று தவம் செய்கிறவன் 'வேண்டினுல் வேண்டியவாறே' பெற்றுவிட முடியுமா ? இதை எந்த சாஸ்திரம் ஒத்துக்கொள்ளும் ? யுக்திக்காவது பொருந்துகிறதா ? ஒருவன் உயிர் பிரியும்போது எதை நினைத்துக்கொண்டு உயிர் விடுகிருனே அதை அடைய லாம் என்று சொல்லுகின்ற நூல்கள் உண்டு. ஆனல், அது தவசிகளுக்கு மட்டுமல்ல. யாராக இருந்தாலும் அவன் உயிர் பிரிகின்ற கடைசிக் கணத்தில் எதை நினைத் தானே அதுதான் கிடைக்கும். காலமெல்லாம் தான் ஒரு அரசனைகப் பிறக்கவேண்டும் என்று ஜபித்துக் கொண் டிருந்துவிட்டு உயிர் பிரிகின்ற அந்தக் கணத்தில் ஒரு கழுதையின் நினைப்பு இருந்துவிட்டால் அவன் ஒரு கழுதையாகத்தான் பிறப்பான் என்று சொல்லுகிற நூல்கள் உண்டு. ஆனல், ஒருவன் அடுத்த பிறப்பில் எதை அடைய வேண்டுமென்று விரும்பித் தவத்தில் இறங்குகிருனே அதை விரும்பியபடியே அடைவான் என்பது அசாத்தியம்.

அது நிற்க, பரிமேலழகர் உரையில் 'செய்யப்படுவ தாய தவம் இம்மைக்கண் அறிவுடையோரான் முயலப் படும்' என்பதில் அறிவுடையவர்கள் எல்லாரும் இப்பிறப் பில் தவம் செய்யவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அதனல் இது இல்லறத்தான் துறவறத்தான் இருவருக்கும் பொதுவாகிறது. ஆகையால் இங்கே 'தவம்' என்பதற்கு தத்துவ ரீதியாகத் துறவறத்தான் செய்யும் 'தபஸ்' என் பதன் பொருளில் இல்லாமல் 'வெறும் புண்ணிய காரியம்' என்ற பொருளில்தான் சொல்லப்படுகிறது. இல்லறத் தானையும் இங்கே சேர்த்துக்கொண்டுவிட்டதால், இல் லறத்தின் பயன் என்று முன்னே பரிமேலழகரே சொன்ன பயனும் துறவறம் பூண்டு தவம் செய்தால்தான் கிடைக்கும் என்று சொல்லி முரண் உண்டாக்கவேண்டிய

தாகிவிட்டது. இதன் 'மேற்கதி வீடுபேறுகள் தவத்தா னன்றி எய்தப்படா' என்கிறார். 'மேற்கதி' என்பது இந்திர லோகத்தில் ஒரு தேவனாகப் பிறப்பது. 'வீடுபேறு' என்பது 'பிறப்பில்லாதவனாவது.'

முன்னே இல்லறத்தின் பயன் 'இல்லறத்திற்கு இவ் வுலகிற் புகழும் தேவருலகிற் போகமும் பயனென்பது பெற்றாம்' என்று சொன்னார். இங்கே 'தேவருலகிற் போகம் அடைவதற்கும் துறவு பூண்டு தவம் செய்ய வேண்டும்' என்கிறார். இதில் எது சரி, எது தப்பு? இரண்டும் தப்பு என்றுதான் திருக்குறள் காட்டுகின்றது.

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் சொல்லும் உரை இப்படித் தடம் புரண்டுவிட்டதற்குக் காரணம் இதற்கு முன்னுள்ள குறளில் 'எண்ணின் தவத்தான் வரும்' என்பதிலுள்ள 'எண்ணின்' என்ற பதத்திலுள்ள எச்சரிக்கையைப் பரிமேலழகர் உணர்ந்தும் அதைத் தொடராமல் இந்தக் குறக்குப் பொருள் செய்துவிட்டதே. ஆம், 'எண்ணின்' என்ற பதம் பரிமேலழகரையும் எச்சரித்திருக்கிறது. அதை அவர் அந்தக் குறளுக்குச் சொல்லுகிற விசேட உரையில் காணலாம். அவ்விசேட உரையாவது :—முற்றத் துறந்தார்க்கு ஒன்னாரும் உவந் தாரும் உண்மை கூடாமையின், தவத்திற்கேற்றி யுரைக்கப்பட்டது. 'எண்ணின்' என்றதனான், அவர்க்கு அவை எண்ணாமை இயல்பென்பது பெற்றாம்'—என்பது. இதில் முற்றத் துறந்தவனாகிய தவசிக்குப் பகைவ ரென்றோ நண்பரென்றோ யாரும் இருக்கக்கூடாது என் பதைத் தெளிவாகச் சொல்லுகிறார். முற்றத் துறந்த தவசி யாரையும் பகைவனென்று சாபம் கொடுப்பதோ நண்பனென்று வரம் கொடுப்பதோ செய்ய ஒண்ணாது என்ற வரையிலும் சொன்ன பரிமேலழகர், அதைத் தொடர்ந்து, 'அப்படிச் சாபமோ வரமோ கொடுத்தால் என்னவாகும்?' என்பதைக் கருதியிருந்தால் இந்தக் குறளின் உரை இப்படித் திசை தப்பியிருக்காது. மேலே செல்வோம்.

துறவியானவன் எண்ணினால் தன்னுடைய தவ வலிமையினால் சாபமிட்டு ஒருவனைக் கெடுக்கவும் வரங்

...RSITY EXTENSION L...

கொடுத்து வாழவைக்கவும் முடியும். ஆனல், அவன் அப்படிச் செய்ய எண்ணிவிடக்கூடாது. ஏனென்ருல் சாப மிட்டாலும் வரங் கொடுத்தாலும் அவன் வீடு பெறுதற் கென்று அதுவரையிலும் செய்த தவத்தின் வலிமை அதோடு செலவழிந்து போகும். மறுபடியும் தவத்தை ஆரம்பிக்கவேண்டி வரும். அதனல் வீடு பெறுவதற் கென்று தவம் செய்யும் துறவி சாபமிடுவதிலும் வரங் கொடுப்பதிலும் (அல்லது வேறு சித்துகளிலும்) இறங்கி விடாமல் வீடு பெறுவதிலேயே கண்ணுகத் தன் தவக் காரியத்தில் இருக்கவேண்டும் என்பதை அடுத்த குறளில் சொல்லுகின்ருர் :—

தவம்செய்வார் தங்கருமம் செய்வார்மற்று அல்லார்
அவம்செய்வார் ஆசையுள் பட்டு

இதன் பொருள் : தவம் செய்யப் புகுந்த துறவிகள் தம் முடைய தவக் காரியத்தையே செய்யவேண்டும். அப்படித் தம்முடைய தவக் காரியத்திலேயே நில்லாமல் வேறு காரியங்களில் புகுந்துவிடுகிறவர்கள் ஆசைகளில் சிக்கிக் கொண்டவர்களாகித் தம்முடைய துறவு நிலைக்குக் கேடு செய்பவர்கள் ஆகிவிடுவார்கள்—என்பது.

இதன் கருத்து : தவம் செய்யும் துறவி தனக்கு யார் என்ன துன்பம் செய்தாலும் அல்லது நன்மை செய் தாலும் அதற்காக வெறுப்பு விருப்பு அடைந்துவிடாமல் தன் தவக் காரியத்திலேயே இருக்கவேண்டும். அப்படிக் கன்றி சாபங்கொடுக்கவும் வரங்கொடுக்கவும் புகுந்து விட்டால் அவன் விட்டுவிட்ட ஆசாபாசங்களில் மீண்டும் சிக்கிக் கொண்டவனுகித் துறவு நிலையைக் கெடுத்துக் கொண்டவனுகும்—என்பது.

இந்தக் குறளுக்கும் பரிமேலழகர் உரை குறி தவறிய தாகவே இருக்கின்றது. இதிலும் இல்லறமும் துறவறமும் தத்தமக்குரிய தனிமையை இழந்து தடுமாறுகின்றன. இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தரும் உரை என்ன வெனின் : தங்கருமம் செய்வாராவார் துறந்து தவத்தைச் செய்வார் ; அவரை ஒழிந்த பொருள் இன்பங்களைச் செய் வார் அவற்றின்கண் ஆசையாகிய வலையுட்பட்டுத் தமக்குக் கேடு செய்வார்—என்பது பதவுரை.

விசேட உரையாவது: அநித்தமாய் மூவகைத் துன்பத்ததாய் உயிரின் வேறாய உடற்கு வருத்தம் வருமென்று ஒழியாது தவத்தினைச் செய்ய, பிறப்புப் பிணி மூப்பு இறப்புக்களான் அநாதியாகத் துன்பமெய்தி வருகின்ற உயிர் ஞானம் பிறந்து வீடு பெறுமாகலின், தவம் செய்வாரைத் ' தங்கருமஞ் செய்வா ' ரென்றும், கணத்துள் அழிவதாகிய சிற்றின்பத்தின் பொருட்டுப் பல பிறவியும் துன்புறத்தக்க பாவம் செய்து கோடலின் அல்லாதாரை 'அவஞ்செய்வார்' என்றும் கூறினர்—என்பது.

இந்த உரை என்ன சொல்லுகின்றதென்றால்: மனிதராகப் பிறந்தவர்களுக்குள் துறவறம் பூண்டு தவம் செய்கிறவர்கள் தாம் செய்யவேண்டிய காரியத்தைச் செய்கிறவர்கள். அதுதான் அறம். அதைவிட்டுப் பொருள், இன்பம் என்ற மற்ற இரண்டிலும் ஈடுபட்டிருக்கிறவர்கள் ஆசையாகிய வலையில் சிக்கிக்கொண்டு தமக்குத் தாமே கேடு செய்து கொள்ளுகின்றவர்கள்—என்பது.

இது இல்லறத்தானுக்கு மிகவும் பயங்கரமான உரை. இதில் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள் பொருள், இன்பம் என்ற இரண்டிலும் ஈடுபட்டுள்ளவர்களெல்லாம் அவம் செய்கின்றவர்கள் என்றும், தவம் செய்கின்ற துறவிதான் அறம் செய்கின்றவனென்றும் சொல்லப்படுகிறது. அது திருக்குறளுக்குப் பொருந்துமா ? ' அறமெனப்பட்டதே இல்வாழ்க்கை ' என்ற வள்ளுவர் வாக்கை அழித்துவிட்டு அதற்கு நேர்மாறான 'அறமெனப் பட்டதே துறவறம் ' என்றுதானே இந்த உரை உறுதிப் படுத்துகிறது ? இங்குள்ள விசேட உரையிற் சொல்லப் படுகிற வேதாந்த விஷயங்களைப்பற்றி நாம் விவாதிக்க வில்லை. அவை ஆன்ம விசாரணையைப்பற்றிய ஞானமே. ஆனால், அவை இங்கே முற்றிலும் வேண்டாத விஷயங்கள். ' அறமெனப்பட்டது துறவறந்தான் ' என்று திருக்குறளின் அமைப்பையும் அடுக்கையும் அழித்து விடக்கூடிய கருத்தை உண்டாக்கியதற்குப் பக்கபலமாக இந்த வேதாந்த விஷயங்கள் இங்கே நுழைக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளுக்கு வெளியே அந்த வேதாந்த விஷயங்களுக்குப் பெருமை இருக்கலாம். ஆனால், திருக்

குறளில் அதுவும் இந்த இடத்தில் அவை மிகவும் அனர்த்தம் உண்டாக்குவனவாம்

தவசியானவன் தனக்கு யார் என்ன செய்தாலும் அதனால் சலனப்பட்டு சாபங் கொடுக்கவோ வரங் கொடுக்கவோ இறங்கிவிடாமல் 'உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை' என்ற தவக் காரியத்திலேயே இருக்கவேண்டும். இல்லாவிட்டால் தவத்திற்குக் கேடு விளைத்தவனாகிவிடுவான். சிறப்பாகத் துன்பங்களைச் சகித்துக்கொள்வதே தவம். எவ்வளவுக்கெவ்வளவு துன்பங்களைப் பொறுத்துக்கொள்ளுகிறானோ அவ்வளவுக்கவ்வளவு தவ வலிமை மிகுந்து ஞான ஒளி உண்டாகும் என்பதை அடுத்த குறளில் சொல்லுகின்றார்.

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு

இதன் பொருள்: பொன்னை நெருப்பிலிட்டுக் காய்ச்சக் காய்ச்ச அது மாசு நீங்கி மாற்றுயர்ந்து பிரகாசம் அதிகரிப்பதுபோலத் தவசியானவன் துன்பங்களைப் பொறுக்கப் பொறுக்க அவனுடைய மன மாசுகள் நீங்கி ஞான ஒளி அதிகரிக்கும்—என்பது.

இதற்குப் பரிமேலழகர் சொல்லுகின்ற உரையும் இதேதான்.

இப்படி எவ்வளவு துன்பங்கள் வந்தாலும் பொறுத்துக் கொண்டு பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் தன் கருமம் செய்கின்ற தவசி தவ வலிமையின் உச்சநிலை அடைவான். அந்த உச்ச நிலையாவது, அவனுக்குத் தன் உயிரைப்பற்றிய அச்சமும் தான் என்ற அகங்காரமும் இல்லாமற் போய்விடும். அவன் வணங்கத் தகுந்தவனாகிறான். இந்தக் கருத்தைச் சொல்லுவது அடுத்த குறள்.

தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாம் தொழும்

இதன் பொருள்: தன்னுடைய உயிர் பெரிது என்ற ஆசையும் தான் பெரியவன் என்ற அகங்காரமும் தன்னை விட்டொழியப் பெற்றவனை உலகிலுள்ள மக்களெல்லாம் தொழுவார்கள்—என்பது.

தன்னுயிரைப்பற்றிய ஆசையை விட்டவன் தான் தனக்கு எப்படிப்பட்ட துன்பம் யார் செய்தாலும், தன் உயிருக்கே அபாயம் வருவதாக இருந்தாலும் அதற்காகப் பிற உயிருக்குத் துன்பம் செய்யமாட்டான். அவன் பூரண அருளுடையவன் ஆகின்முன். ‘ தான் ’ என்ற அகங்காரம் அற்றுப்போனவன் ஆன்ம உணர்ச்சியும் ஞான ஒளியும் மிகுந்தவனுகிருன். அவனே, தவம் என்பதன் உயர்ந்த நிலையை அடைந்தவன். அவன் வணங்கத்தக்கவன்—என்பது கருத்து.

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தரும் உரையாவது : தன்னுயிரைத் தான் தனக்கு உரித்தாகப் பெற்றவனை அது பெருதனவாகிய மன்னுயிர்களெல்லாம் தொழும்—என்பது பதவுரை. இதற்கு விளக்கவுரை : தனக்குரித்தாதல் தவமாகிய தன் கருமஞ் செய்தல். அதனினுரங்கு பெறுதற்கு அரியது இன்மையின் ‘பெற்றுனை’ யென்ருர். ‘ அது பெருதன ’ என்றது ஆசையுட்பட்டு அவம் செய்யும் உயிர்களை. சாபமும் அருளும் ஆகிய இரண்டு ஆற்றலும் உடைமையின் ‘ தொழும் ’ என்ருர்—என்பது.

இந்த உரை என்ன சொல்லுகிறது என்ருல் : தன்னுயிரைத் தன் கருமமாகிய தவம் செய்வதற்கே உரியதாகக் கொண்டவனை, அப்படித் தம் கருமமாகிய தவம் செய்யாமல் பொருள், இன்பம் என்ற ஆசைகளிற் சிக்கிக் கொண்டிருக்கிற இல்லறத்தார்களெல்லாம் தொழுவார்கள். துறவு பூண்டு தவம் செய்கிற உயிரைக்காட்டிலும் பெறுதற்கரியது ஒன்றுமில்லை. இல்லறத்தார்களெல்லாம் எதற்காகத் தவசியைத் தொழுவார்கள் என்ருல் தவம் செய்கிறவனுக்கு சாபம் கொடுப்பது, வரம் கொடுப்பது என்ற இரண்டு வல்லமைகளும் இருப்பதால். வணங்காவிட்டால் சாபங் கொடுப்பானே என்ற அச்சத்தாலும் வணங்கினுல் வரங்கொடுப்பான் என்ற ஆசையினுலும்தான் வணங்குவார்கள்—என்றுதான் பரிமேலழகர் சொல்லுகிருர்.

இது சரிதானு ? ‘ தன்னுயிர் தானறப் பெற்ருனை ’ என்பதற்கு ‘ தவம் செய்வதற்கே தன் உயிரைப் பெற்றவனை ’ என்ருல், அவன் பிறக்கும்போதே தவசியாகப் பிறந்தவனு ? அப்படியானுல் ‘ இல்லறத்தின்கண் வழு

வாது ஒழுகி அறிவுடையராய்......' என்றதெல்லாம் இவனுக்கு இல்லையா? துறவியை மற்றவர்கள் தொழுவார்கள் என்றது அவனுடைய சாபத்துக்கு அஞ்சியும் அருளுக்கு ஆசைப்பட்டுந்தானு? அதுவானல் பரிமேலழகரே 'ஒன்ஞர்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணிற் றவத்தான் வரும் என்ற குறளுக்குச் சொன்ன விசேட உரையில், "முற்றத் துறந்தார்க்கு ஒன்ஞரும் உவந்தாரும் உண்மை கூடாமையின் தவத்திற்கு ஏற்றி உரைக்கப்பட்டது. 'எண்ணின்' என்றதனுன், அவர்க்கு அவை எண்ணுமை இயல்பென்பது பெற்ரும்" என்று சொன்னது என்னுவது?

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் சொல்லும் இந்த உரை சரியல்லவென்று, இதற்கு நான் மேலே சொல்லியுள்ள உரையை என் புதுஉரை புத்தகத்தில் எழுதியிருப்பதைக் கண்டித்து 'ஈழகேசரி'யில் எழுதிய முன் சொன்ன பண்டிதரவர்கள் எழுதியிருப்பதைப் பாருங்கள். இந்த அதிகாரத்தின் இரண்டாவது குறளுக்கு நான் சொன்ன உரையைக் கண்டித்த இவர் அதற்குப் பின் இதுவரையிலும் உள்ள மற்றக் குறள்களுக்கு நான் செய்துள்ள உரைகளைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் மீண்டும் இந்தக் குறளில் என்னைக் கண்டிக்கிருர். இவர் எழுதியிருப்பது என்னவெனில் :

'தன்னுயிர் தானறப் பெற்ருனை' என்பதற்குக் கவிஞர் 'தன்னுயிர் பெரியது என்ற எண்ணமும் விடுபட்ட மனமுடையவன்' என்கிருர். பரிமேலழகரோ, 'தன்னுயிரைத் தனக்கு உரித்தாகப் பெற்றவன்' என்கிருர். எல்லா உயிரையும் தன்னுயிர்போலப் பாவித்து எவ்வுயிர்க்கும் அன்பாயிருக்கும் தன்மையுடையவர், தாமே பெரியவர் என்ற அகங்காரங் கொள்ளச் சிறிதும் இடமில்லை. ஆகவே, பிரகிருதி சம்பந்தமாகப் புருடனை யடைந்திருக்கும் அவிச்சை நீங்கப்பெற்ற தூயவனே தன்னுயிர் தானறப் பெற்ருன் என்ற வகையில் கருத்துக்கொள்ளும் பரிமேலழகர் உரை சிறப்புடைத்து'—என்று எழுதுகிருர்.

பரிமேலழகர் சொல்வதற்கும் இந்தப் பண்டிதர் எழுதியிருப்பதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா என்று

பாருங்கள். பண்டிதர் சொல்லுவதையா பரிமேலழகர் சொல்லுகிருர் ? பரிமேலழகர் 'தன்னுயிரைத் தவம் செய் வதற்கு உரித்தாகப் பெற்றவனை' என்கிருர். பண்டிதரோ 'பிரகிருதி சம்பந்தமாகப் புருடனை யடைந்திருக்கும் அவிச்சை நீங்கப்பெற்ற தூயவனே தன்னுயிர் தானறப் பெற்ருன்' என்கிருர். இந்த இரண்டும் ஒன்றுதானு ? பண்டிதர் சொல்லுவதைச் சிறிது எளிய நடையில் பெயர்த் தெழுதினல் 'மாயை சம்பந்தமாக ஆன்மாவை அடைந் திருக்கும் அறியாமை நீங்கப்பெற்ற தூயவனே தன்னுயிர் தானறப் பெற்ருன்' என்பது விளங்குகிறது. இதில் மாயை சம்பந்தமாக ஆன்மாவை அடைந்திருக்கும் அறியாமை நீங்கப் பெற்றவன் தூயவன்தான். அதை யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனல் அவன் 'தன்னுயிர் தானறப்பெற்றவன்' என்பது எப்படி? 'தன்னுயிர்தானறப் பெற்றவன்' என்ற சொற்ருெடருக்குப் பதவுரையா அல்லது பொழிப்புரையா 'மாயை சம்பந்தமாக ஆன்மாவை அடைந் திருக்கும் அறியாமை நீங்கப்பெற்ற தூயவன்' என்பது? இது பொருந்தாதிருப்பதை அறிந்துதான் பண்டிதரவர்கள் 'என்ற வகையில் கருத்துக்கொள்ளும் பரிமேலழகர் உரை சிறப்புடைத்து' என்று, 'என்ற வகையில்' என்பதைச் சேர்த்துக்கொண்டிருக்கிருர். பின்னும் இந்தக் குறளில் சொல்லப்படுகிற தவசி மாயை சம்பந்தமாக ஆன்மாவை அடைந்திருந்த அறியாமை நீங்கப்பெற்றவனு ? இவன் துறவறம் பூண்டு துறவறத்தின் விரதங்களில் ஒன்ருகிய தவத்தில் இருக்கிறவன். இவன் விரதங்களை முடியத் தெரிந்துகொண்டு ஞானம் உதித்து, 'நிலையாமை' உணர்ந்து மனத் 'துறவு' சித்தித்து, 'மெய்யுணர்தல்' உணரும்போதல்லவா அவிச்சை நீங்கத் தொடங்கும் ? இந்த அவிச்சை சீவன் முத்தராகும் வரையிலும் தொடரும் என்று பரிமேலழகரே தம் உரைகளிற் சொல்லுகிருரே ! அப்படியிருக்கத் தவசியாக இருக்கும்போதே 'புருடனை அடைந்திருக்கும் அவிச்சை நீங்கப்பெற்ற தூயவன்' ஆகிவிட்டது எப்படி ? தவஞ் செய்தவர்களெல்லாம் அவிச் சையும் அகங்காரமும் நீங்கிவிட்டவர்களா ? வெறும் தவ வலிமையினல் மட்டும் அவிச்சையும் அகங்காரமும் நீங்கி விடா என்று சாஸ்திரங்களும் புராணங்களும் சாதிக்கின்

றனவே! வேறு எந்த சாஸ்திரத்திலும் தேடவேண்டாம். இதே துறவறப் பகுதியின் ஞானம் என்ற பிரிவின் மூன்ருவது அதிகாரமாகிய 'மெய்யுணர்தல்' என்பதன் கடைசி குறளாகிய,

> காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
> நாமம் கெடக்கெடும் நோய்

என்ற குறளுக்குப் பரிமேலழகர் தருகின்ற விசேடவுரையில் அந்த சாஸதிரத்தின் சாரத்தையெல்லாம் சுருக்கமாகச் சொல்லுகிருர்.

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தரும் உரையும் அதன் விளக்கமும் என்னவென்ருல் :

உரை : ஞான யோகங்களின் முதிர்ச்சியுடையார்க்கு விழைவு, வெறுப்பு, அவிச்சை என்னும் இக்குற்றங்கள் மூன்றனுடைய பெயருங்கூடக் கெடுதலான் அவற்றின் காரியமாகிய வினைப்பயன்கள் உளவாகா—என்பது.

விளக்கவுரை : அநாதியாய அவிச்சையும், அதுபற்றி யான் என மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கிது வேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கட் செல்லும் ஆசையும், அதுபற்றி அதன் மறுதலைக்கண் செல்லுங் கோபமும் என வடநூலார் குற்றம் ஐந்தெனருர் இவர், அவற்றுள் அகங்காரம் அவிச்சைக்கண்ணும் அவாவுதல் ஆசைக்கண்ணும் அடங்குதலான் 'மூன்று' என்ருர். காரணமாகிய அக்குற்றங்களைக் கெடுத்தார் காரியமாகிய இருவினைகளைச் செய்யாமையின் அவர்க்கு வரக்கடவ துன்பங்களும் இல்லையென்பது இதனுற் கூறப் பட்டது—என்பது.

இவற்றின் கருத்து : ஞானம் முதிர்ந்து விருப்பு, வெறுப்பு, அவிச்சை என்ற முக்குற்றங்களும் அறவே நீங்கி விட்டால் மெய்யுணர்வு உண்டாகும் என்பது.

மெய்யுணர்வு தோன்றிய பின்புங்கூட முத்தி பெறுகிற வரைக்கும் அவிச்சை இருந்துகொண்டேயிருக்கும் என்று பரிமேலழகரே சொல்லுகின்ருர். துறவறத்தின் கடைசி அதிகாரம் 'அவாவறுத்தல்.' இந்த அதிகாரத்துக்கு முன்னுரையாகப் பரிமேலழகர் சொல்லுவது :

"முன்னும் பின்னும் வினைத்தொடர்பு அறுத்தார்க்கு நடுவு நின்ற உடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களும் நின்றமையின், வேதனைபற்றி ஒரோவழித் துறக்கப் பட்ட புலன்கண்மேல் பழைய பயிற்சி வயத்தான் நினைவு செல்லும் அன்றே? அந்நினைவும் அவிச்சையெனப் பிறவிக்கு வித்தாமாகலின், அதனை இடைவிடாது மெய்ப் பொருள் உணர்வான் அறுத்தல், என்பது அவா வறுத்தல்" என்கிறார்,

இதில் மெய்யுணர்வு பெற்ற பின்னும் அவா அறுகிற வரை அவிச்சை இருந்துகொண்டேயிருக்கும் என்பது மிகவும் தெளிவாகச் சொல்லப்படுகிறது. அப்படியிருக்கப் பண்டிதர் எழுதியபடி துறவியானவன் ஞானம் முதிர் வதற்காகத் தவம் செய்யும்போதே 'அவிச்சை நீங்கப் பெற்ற தூயவன்' ஆகிவிட்டதெப்படி?

இன்னும் இப்பண்டிதர் மற்றொரு மிகவும் தவருன கருத்தைச் சொல்லி என்னைக் கண்டிக்கிறார். 'நான் தன் னுயிர் தான் அறப்பெற்றானை' என்பதற்கு 'தன்னுயிர் பெரிது என்ற ஆசையும் தான் பெரியவன் என்ற அகங் காரத்தையும் அறவே விட்டொழித்தவனை' என்று பொருள் சொல்வதைக் கண்டித்துப் பண்டிதரவர்கள் 'எல்லா உயிரையும் தன்னுயிர் போலப் பாவித்து எவ் வுயிர்க்கும் அன்பாயிருக்கும் தன்மையுடையார். தாமே பெரியவர் என்ற அகங்காரங் கொள்ளச் சிறிதும் இட மில்லை' என்கிறார்.

இதில் தவம் செய்தவனுக்கு அகங்காரம் இருக்க இடமில்லை என்கிறார் பண்டிதர். தவம் செய்துவிட்டத னாலேயே அகங்காரம் அற்றவனாகிவிட முடியாது என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன என்பதற்கு ஆதாரம் மேலே காட்டிய பரிமேலழகரின் விளக்க உரையேபோதும். இனிப் புராணங்களில் இதற்குள்ள பல ஆதாரங்களில் இரண்டொன்றை மட்டும் பண்டிதருக்கு நினைப்பூட்டுவோம்

விசுவாமித்திர முனிவரைக் காட்டிலும் தவம் செய்த வர்கள் யாருமில்லை: அவர் திரிசங்கு என்ற மன்னனை மனித உடலோடுசொர்க்கத்துக்கு அனுப்பினர் தம்முடைய

தவவலிமையினுல். தேவர்கள் அதை ஆட்சேபித்து அந்தத் திரிசங்குவை சொர்க்கத்தில் நுழையக்கூடா தென்று தலைகீழாகத் தள்ளிவிட்டார்கள். அதனுல் கடுங் கோபங்கொண்ட விசுவாமித்திரர் வேறு சொர்க்கத்தை சிருஷ்டிக்க ஆரம்பித்தார் என்று புராணம் சொல்லு கின்றது. இது 'தானே பெரியவன்' என்ற அகங்கார மல்லாமல் வேறென்ன ?

அதே விசுவாமித்திரர் வசிஷ்டருடன் போட்டி போட்டுக்கொண்டு அரிச்சந்திரனைப் பொய்யனுக்கிவிடுவ தாகச் சபதங்கூறி, அரிச்சந்திரனையும் அவன் மனைவி சந்திரமதியையும் அவர்களுடைய மகன் லோகதாசனையும் படாதபாடு படுத்தினுர் என்று புராணம் புகல்கின்றது. இது வெறும் அகங்காரமன்றி வேறென்ன ?

அதே விசுவாமித்திர முனிவர் தம்முடைய யாகத் தைக் காத்துச் சுபாகு, தாடகை, மாரீசன் முதலிய அரக் கர்களை அடக்க வேண்டுமென்று இராமனைக் கூட்டிக் கொண்டு போகத் தசரத மன்னனிடம் வந்தார். இராமனைக் கேட்டார். தசரதன் மகனைப் பிரியத் தயங்கினுன். மக னுக்குப் பதிலாகத் தானே வந்து யாகத்தைக் காப்பதாகத் தசரதன் கூறினுன்.

என்றனன் என்றலும் முனிவோடெழுந்தனன்
மண் படைத்த முனி : இறுதிக்காலம்
அன்றென ஆமென இமையோர் அயிர்த்தனர் ;
மேல் வெயில் கரந்தது : அங்குமிங்கும்
நின்றனவும் திரிந்தன : மீநிவந்த கொழுங்கடைப்
புருவம் நெற்றி முற்றச்
சென்றன ; வந்தனநகையும் ; சிவந்தனகண் ;
இருண்டனபோய்த் திசைகளெல்லாம்

என்று கம்பன் பாடுகின்றபடி விசுவாமித்திரர் கடுங்கோபங் கொண்டார். இந்தக் கோபம் அகங்காரத்தால் வருவதன்றி வேறென்ன ? ஆகையால் தவம் செய்து தபோபலம் பெற்றுப் பிறருக்கும் சாபமோ வரமோ தரக்கூடிய சக்தி பெற்றுவிட்டதனுல் மட்டும் அகங்காரம் நீங்கிவிட்டவனுகி விடமுடியாது என்பது நூல்களின் தீர்ப்பு. தவத்தோடு ஞானமும் கூடவே முதிர்ந்து வீடுபெறும் குறிக்கோள்

பிசகாதிருந்தால் அதுதான் தபோபலத்தின் உச்சம். சாப வரங்கள் கொடுக்கும் தவவலிமை தவ முயற்சியால் வரக் கூடிய வெறும் விஞ்ஞான சக்தியே. அது மட்டும் தவத்தின் நோக்கமல்ல. சித்துக்கள் செய்யக்கூடிய வல்லமை தவப்பயனின் கீழ்ப்படியேயல்லாமல் அதுவே தவத்தின் தலையாய பயன் அல்ல' சாபவரங்களில் இறங்காத தலைப்பட்ட தவத்தின் பயன் எதுவென்றால் :

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு

என்ற அடுத்த குறள் சொல்லுகிறது. இதன் பொருள் : தவ வலிமையின் உச்சத்தை அடைந்தவர்க்கு எமனைச் சுடக்கூடிய தன்மையும் சித்திக்கும்—என்பது.

அதாவது, தவ முயற்சிகளால் உடலை வசப்படுத்தி, ஆன்ம உணர்ச்சிபெற்றுத் தவத்தில் உச்சத்தை அடைகிற தவசிக்கு எமன் வருவதாகச் சொல்லப்படுகிற நிலைமை இருக்காது. எல்லா மனிதருக்கும் எமன் வருவதாகச் சொல்லப்படுகிற தருணம் உண்டு. அதுதான் உடலை விட்டு உயிர் பிரிகின்ற தருணம். அந்தத் தருணம் 'ஐயும் தொடர்ந்து, விழியும் சொறுகி, அறிவு அழிந்து, மெய்யும் பொய்யாகும்போது' என்று சொன்னதிலுள்ள 'போது' தான் அந்தத் தருணம். அந்த நிலைமையைக் கடக்கக் கூடியவர்கள் மிக மிகவும் அபூர்வம். அந்த நிலைமையில் உடலும் உயிரும் அடைகின்ற துன்பங்களைத்தான் 'மரணவஸ்தை' என்பது. இந்த மரணவஸ்தையும் அதற்குக் காரணமாகிய மரண பயமும் சேர்ந்த உருவகம்தான் எமன் என்பது. கூற்றம் என்பது மரணமல்ல. மரண காலத்தில் ஒவ்வொரு உயிருக்கும் உண்டாகிற மரண அவஸ்தைகளைத் தான் 'கூற்றம்' அல்லது 'எமன்' என்ற சொல்லால் குறிப்பது. தவ வலிமையில் தலைசிறந்த மிகச் சிலருக்குத் தான் இந்த மரண அவஸ்தைகள் இருக்கமாட்டா. அவர்களுடைய ஐம்புலஉணர்ச்சிகளும் அறிவும் மரணகாலத்தில் மற்ற எல்லாருக்கும் போலல்லாமல், மங்காமல் இருக்கும். இதுதான் 'கூற்றம் குதித்தல்' என்பதற்கு கொளளத் தகுந்த பொருள். பரிமேலழகருடைய பதவுரையில் 'கூற்றம் குதித்தலும்' என்பதற்குக் 'கூற்றம் குதித்

தலும்' என்று அதே சொற்களை அர்த்தம்போல் சொல்லி விட்டார். விசேட உரையிலும் விளக்கவில்லை.

பரிமேலழகருக்கு முன்னால் திருக்குறளுக்கு உரை செய்தவர்கள் 'கூற்றம் குதித்தலும் கைகூடும்' என்பதற்கு 'மரணமில்லாமல் இருக்கவும் முடியும்' என்ற கருத்துண்டாக்கும்படியாக உரை செய்து, அதற்குச் சிரஞ்சீவிகள் என்று சொல்லப்படுகிற மார்க்கண்டேயரையும் நந்திகேசரையும் உதாரணங்களாகக் காட்டியிருக்கிறார்கள். ஆனால், பரிமேலழகரோ முதலில் அந்தக் கருத்தை மறுத்துவிட்டுப் பிறகு ஒத்துக்கொள்வதுபோல் உரை செய்திருக்கிறார்.

இதற்குப் பரிமேலழகர் உரை: கூற்றத்தைக் கடத்தலும் உண்டாவதாகும், தவத்தான் வரும் ஆற்றலைத் தலைப்பட்டார்க்கு—என்பது பதவுரை.

இதற்கு விசேட உரை: சிறப்பும்மை அது கூடாமை விளக்கிற்று; 'மன்னுயிரெல்லாந் தொழு'தலேயன்றி இதுவும் கைகூடும் என எச்சவும்மையாக உரைப்பினும் அமையும். 'ஆற்றல்' சாப வரங்கள்—என்பது.

இங்குள்ள பதவுரை, விசேட உரை ஆகிய இரண்டையும் சேர்த்துப் பார்த்தால் பரிமேலழகர் என்ன சொல்லுகிறார் என்றால்: சாபங்கொடுக்கவும் வரங்கொடுக்கவும் ஆற்றல் மிகுந்த தவசிகளுக்கு, அவர்களை மற்றவர்களெல்லாம் வணங்கக்கூடிய பெருமை இருப்பதுமட்டுமல்லாமல், அவர்கள் மரணமில்லாமலும் இருக்கலாம்—என்பது. இது சந்தேக விபரீதங்களுக்கு இடமுள்ள உரை. மரணமில்லாமல் இருக்க முடியுமா முடியாதா என்பதைப்பற்றி நிச்சயமாகச் சொல்லவில்லை. அத்துடன் 'நோற்றலின் ஆற்றல்' என்பதற்கு 'சாபவரங்கள் கொடுக்கக்கூடிய சக்தி' என்பதும் சரியல்ல. திருவள்ளுவர் கருதுகின்ற 'ஆற்றல்' அதுவல்ல. மரணமில்லாமல் இருக்கவும் முடியும் என்பதும் திருவள்ளுவர் கருத்தாக இருக்க முடியாது. அப்படி அவர் கருதியிருந்தால் இந்தத் தவசிக்கே 'நிலையாமை' என்ற அதிகாரத்திலுள்ள ஞானத்தைச் சொல்லியிருக்கமாட்டார். அந்த அதிகாரம்,

பிறந்த உயிர்கள் இறந்தே தீரவேண்டும் என்பதைத்தான் சொல்லுகிறது. மேலே செல்வோம்.

தன்னுயிரே பெரிது என்ற எண்ணமும் தானே பெரியவன் என்ற அகங்காரமும் அறப்பெற்றவனுகிய தவசி எல்லாராலும் வணங்கத்தக்கவனுகிருன் என்பதுமட்டு மின்றி, அவனுடைய தவம் பூரணத்தன்மை அடைந்தால் அவன் எமவாதனை என்கிற மரணுவஸ்தைகளில்லாமல் இச்சாமாத்திரத்தில் உடலை விட்டுவிடக்கூடிய சித்தியும் அடையலாம்.

'கூற்றங் குதித்தலும் கைகூடும்' என்ற குறள்தான் துறவறப் பகுதிக்கே ஜீவநாடி போன்றது. இந்தக் குறள் துறவறத்தால் அடைய விரும்பும் பயனை இங்கே சுட்டிக் காட்டுகிறது. 'தவம்' என்ற ஒன்றைமட்டும் துறவி யானவன் சரியாகச் செய்து அத்தவத்தால் வளரும் தபோ பலத்தைச் சாபமிடுவதிலும் வரங்கொடுப்பதிலும் அல்லது வேறுவித சித்து விளையாட்டுகளிலும் செலவிடாமல் தன் தவக் காரியத்தையே தொடர்ந்து செய்தால், மற்ற விரதங் களும் எளிதாகி, ஞான முதிர்ந்து, ஐம்புலன்களின் உணர்ச்சிகளும் அறிவும் மரணுவஸ்தையால் மங்கிப் போகாமல் இச்சாமாத்திரத்தில் உடலைவிட்டு உயிர் வீடு பெறலாம்—என்ற இத்தனையும் அடங்கியது இந்தக் குறள். இந்தக் குறளிலுள்ள 'நோற்றலின் ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு' என்பதை இலேசாக எண்ணிவிடக்கூடாது. இதன் கருத்து 'தவ வலிமையின் பரிபூரணத்தைப் பெற்ற வர்க்கு' என்பதுதான். பரிமேலழகர் சொல்லுவதுபோல 'சாபவரங்கள் கொடுக்கும் தன்மையில் தலைப்பட்டவர்க்கு' என்பதல்ல. நோற்றலின் ஆற்றல் பரிபூரணமடைந்து விட்டவனுடைய ஆன்மா, மரணுவஸ்தை என்பதே இல் லாமல் இச்சாமாத்திரத்தில் உடலைவிட்டு விடுதலை பெற்று விட முடியும் என்பதுதான் இந்தக் குறளின் கருத்து. நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவராகத் தவ வலிமையின் உச்சத்தை அடைந்தவர்க்குத்தான் இது கைகூடும். தவ வலிமை மிகுதியாக உடையவர்கள் என்ருலும் போதாது.

அப்படி மரணுவஸ்தையே இல்லாமல் இச்சா மாத் திரத்துல் உடலைவிட்ட துறவிகளைக் கண்டதில்லையே!

துறவிகளும் மரணவஸ்தைகள் வந்துதானே மறைகிறார்கள் என்றால், துறவு பூண்டிருந்தாலும் உண்மையாகத் தவம் செய்கின்றவர்கள் சிலர்தாம். பெரும்பாலும் துறவிகள் உண்மையான தவம் செய்யாதவர்களே. பெரும்பாலும் துறவிகள் வேடத்தால் மட்டும் துறந்தவர்களாகக் காணப் படுகிறார்களேயன்றித் தவம் செய்யும் துறவிகளல்ல. உண்மையாகவே தவம்செய்யும்துறவிகளிலும்கூட 'நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்கள்' என்று சொல்லும்படித் தவ வலிமையின் பரிபூரணத்தை அடைகிறவர்கள் மிகவும் அரிது. இதை அடுத்த குறளில் சொல்லுகிறார்.

இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்

இதன் பொருள் : (கூற்றங் குதித்தலும் கைகூடியவராக மரணவஸ்தை யில்லாமல் உடலை விட்டவர்கள்) பலர் இல்லாததற்குக் காரணம், சரியானபடி தவம் புரியும் துறவிகள் சிலரே. பெரும்பாலும் துறவிகள் தவம் செய்யாதவர்கள்—என்பது.

பரிமேலழகர் உரைக்குப் பழுது சொல்லிவிடலாமா என்று கோபம் கொண்டுவிடாமல் இதுவரைக்கும் சொல்லி வந்துள்ள நியாயங்களைப் பாரபட்சமில்லாமல் சீர்தூக்கினால் இந்தக் குறளுக்கு இந்த உரைதான் பொருத்தம் என்பதைக் காணலாம்.

இதற்குப் பரிமேலழகர் தருகின்ற உரை: உலகத்துச் செல்வர்கள் சிலராக நல்கூர்வார் பலராதற்குக் காரணம் யாதெனின்; அது தவம் செய்வார் சிலராக அது செய்யாதார் பலராதல்—என்பது பதவுரை.

இதற்கு விசேட உரை : செல்வம் நல்குரவு என்பன ஈண்டு அறிவினது உண்மை இன்மைகளையும் குறித்து நின்றன ; என்னை ? "நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை—பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்" என்றாராதலின். 'நோற்பார் சிலர்' எனக் காரணங் கூறினமை யான் காரியம் வருவித்துரைக்கப்பட்டது. தவஞ் செய்யாதார்க்கு இம்மை யின்பமும் இல்லையென இதனால் அவரது தாழ்வு கூறப்பட்டது—என்பது.

இது என்ன சொல்லுகிறதென்றால்: உலகத்தில் பணக்காரர்கள் சிலராகவும் ஏழைகள் பலராகவும் இருப்பதற்குக் காரணம் தவம் செய்கிறவர்கள் சிலராகவும் தவம் செய்யாதவர்கள் பலராகவும் இருப்பதுதான். செல்வன் என்பது அறிவுடையவன் என்பதைக் குறிக்கும். ஏழை என்பது அறிவு இல்லாதவன் என்பதைக் குறிக்கும். நுட்பமான அறிவு இல்லாதிருப்பதுதான் தரித்திரம் என்றும் அந்த அறிவு இருப்பதுதான் மிகப் பெரிய செல்வம் என்றும் 'நாலடியார்' என்ற நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் தவம் செய்யாதவர்களுக்கு இப்பிறப்பில் இன்பமும் இல்லை. இதனால் தவம் செய்யாதவர்களுடைய வாழ்க்கை தவம் செய்கிறவர்களுடைய வாழ்க்கையினும் தாழ்ந்தது என்று சொல்லப்பட்டது—என்பதே.

இது திருக்குறளின் நோக்கத்துக்குப் பொருந்துமா? மீண்டும் இங்கே இல்லறத்தைப் பழிப்பதாகிறது. போகட்டும், இது துறவறத்தின் நோக்கத்துக்காவது பொருந்துமா? துறவு மேற்கொண்டு தவம் செய்வது மறு பிறப்பில் பணக்காரனாகப் பிறக்கவேண்டும் என்பதா? இந்த உரை பரிமேலழகர் துறவறத்துக்குச் சொன்ன இலக்கணப்படியே 'இல்லறத்தின்கண் வழுவாதொழுகி அறிவுடையராய்ப் பிறப்பினை யஞ்சி வீடுபேற்றின் பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம்' என்றதை அழித்துவிடக் கூடியதல்லவா?

மேலும், செல்வம் என்பது அறிவுடைமை என்றும் வறுமை என்பது அறிவில்லாமை என்றும் இங்கே சொல்லுவது எதற்கு? 'அறிவுடைமை' என்பதற்குப் பொருள் 'தவம்' என்பதா? 'அறிவில்லாமை' என்பதற்குப் பொருள் 'தவம் செய்யாமை' என்பதா? 'நுண்ணுணர் வின்மை வறுமை; அஃதுடைமை பண்ணைப் பணைத்த பெருஞ்செல்வம்' என்று நாலடியார் சொல்லுவது பண மில்லாததையும் பணம் மிகுந்திருப்பதையும் குறிப்பதா? துறவறத்தில் தவம் செய்வது மறுபிறப்பில் இம்மை இன்பங்களுக்காக என்று பொருள் சொல்ல நேர்ந்து, இந்தச் செல்வம், வறுமை என்பனவற்றைச் சேர்த்துக் குழப்பவேண்டியதாகிவிட்டது. நான் சொல்லும் உரை

சரியல்லவென்று சொன்னாலும் இதிலுள்ளபடி துறவியானவன் தவம் செய்வதன் நோக்கம் மறுமை இன்பங்களைக் கருதியது என்பது எண்ணத்தகாதது. துறவு பூண்டு தவம் செய்கிறவன் ஒரு ஜன்மத்திலேயே வீடுபெறுவானோ ஒன்பது ஜன்மத்தில் வீடுபெறுவானோ அல்லது வீடு பெறாமலேயே பிறந்துகொண்டிருப்பானோ அதை யாராலும் சொல்ல முடியாது. ஆனால், துறவு மேற்கொண்டு தவம் செய்வது வீடு பெறுவது என்ற ஒன்றைத்தான் கருதியது என்பதை எவரும் மறுக்க முடியாது'. வீடு பெறுவதற்காகவே 'தவம்' செய்வது என்னவென்பதைப்பற்றிச் சொல்லுகின்ற இந்த அதிகாரத்தில் மறுபிறப்பு, செல்வமும் இன்பமும் உள்ளதாக இருக்கவேண்டுமென்ற எண்ணத்தைப் புகுத்துவது தவறல்லவா ?

இப்படியாக, இந்த அதிகாரத்துக்குப் பரிமேலழகர் செய்துள்ள உரை பல இடங்களில், திருவள்ளுவர் மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிற சொற்களுக்கு முற்றிலும் விரோதமான கருத்துக்களைப் புகுத்தி இல்லறத்தின் பெருமையைக் குறைப்பதாகவும் துறவறத்தின் நோக்கத்தைக் குலைப்பதாகவும் அமைந்திருக்கிறது. விவாதத்துக்கே இடமில்லாத சத்தியங்களில் அமைக்கப்பட்டிருக்கிற குறள்களுக்கு வெறும் சம்பிரதாயங்களைப் புகுத்திப் பொருள் சொல்லப்பட்டிருக்கிறது. திருவள்ளுவர் சொல்லியிருப்பதைச் சொல்லாமல் உரைகள் மற்றவர்கள் சொல்லியிருப்பதைச் சொல்லுகின்றன. அப்படிச் சொல்லப்பட்டிருப்பது இந்த ஒரு அதிகாரத்தில் மட்டுமல்ல, பல அதிகாரங்களில். இந்த அதிகாரத்திற்குச் சொல்லப்பட்டுள்ள உரைகள் சத்திய ஞான நூல்களுக்கு விரோதமானவைகளாக இருப்பதைப் படித்தறிந்த பலரும் எளிதாகப் பார்க்க முடியும் என்றே இதை ஒரு எடுத்துக்காட்டாக 'திருக்குறள் புதுஉரை'யின் முன்னுரையிற் சொல்லப்பட்டது. அதனாலேயே இந்த அதிகாரத்தின் உரையை ஆராய்ந்தெழுதியதாக 'ஈழகேசரி'யில் எழுதிய பண்டிதரவர்கள் சொல்லுகிறார். இந்தப் பண்டிதர் சொல்லும் முறையிலேயே வேறு சிலரும் என்னுடன் விவாதித்தார்கள். அதனால் இந்தப் பண்டிதர் சொல்லுகிற விஷயங்களுக்குச்

சமாதானம் சொன்னால் அது மற்றவர்களுக்கும் அமையும் என்றே இவரைக் குறிப்பிட்டு எழுத நேர்ந்தது. இந்த 'தவம்' என்ற அதிகாரத்தின் கடைசிக் குறளின் உரையைப்பற்றி இந்தப் பண்டிதர் என்னைக் கண்டிக்கிறார். இந்த அதிகாரத்தின் மூன்று குறள்களில்தான் இவர் என் உரையைப்பற்றிப் பேசியிருக்கிறார். கடைசியாகப் பண்டிதரவர்கள் எழுதுவது:

"'இலர் பலராகிய காரணம்' என்ற குறளுக்குப் பரிமேலழகர் உரையைக் கவிஞர் மறுக்கிறார். 'இலர் பலர்' என்பதற்குக் கவிஞர், தவம் 9-வது குறளிற் கூறிய 'கூற்றங்குதித்தவர் பலர் இல்லாமைக்கு காரணம்' என்று பொருள் செய்கிறார். பரிமேலழகரோ தவஞ்செய்யாதவருக்கு மறுமையின் பயனேயன்றி இம்மை யின்பமும் இல்லையெனத் தவத்தின் முடிந்த பயனைக் கூறுகின்றார். தவம் என்ற அதிகாரத்துக்குத் தாம் எழுதிய உரையே திருப்தியானதெனக் கவிஞர் முன்னுரையிற் கூறுவதனாலேயே பரிமேலழகர் உரை பொருத்தம்பற்றி எழுதலானேம். கவிஞரோ முன்னுள்ள குறளோடு அடுத்துவரும் குறளின் தொடர்பைக் காட்டிச் செல்லும் இயல்பினர். பரிமேலழகரோ குறளின் தொகுப்பைக் காட்டி அத்தொகுப்பு வள்ளுவருடைய எவ்வெந் நோக்கத்தைக் குறிக்கிறதெனக் காட்டுகிறார். வள்ளுவர் கருத்துக்கள் எல்லாம் மனக் கருத்தையும் அளவையும் காலத்தையும் கடந்து நிற்கும் இயல்பின. ஆகவே, 'வள்ளுவர் திருவுள்ளத்தை எவருமே முற்றமுடியக் கண்டறிந்து விட்டார்' எனக் கூற முடியாது"—என்பது.

இதில் பண்டிதரவர்கள், 'பரிமேலழகரோ தவஞ் செய்யாதவருக்கு மறுமையின் பயனேயன்றி இம்மை இன்பமும் இல்லையெனத் தவத்தின் முடிந்த பயனைக் கூறுகின்றார்' என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. இங்கே 'மறுமையின் பயன்' என்பது என்ன? 'இம்மை யின்பம்' என்பது என்ன? மறுமை என்பது மறுபிறப்பு அல்லது

மரணத்துக்குப் பின்னுள்ள ஒரு நிலை. 'தவத்தின் முடிந்த' மறுமைப் பயன் மறுபிறவி என்பது பண்டிதர் கருத்தானால் அது தவறு. ஏனென்றால் மறுபடியும் பிறக்கத் தவம் செய்ய வேண்டியதில்லை. ஒவ்வொரு உயிர்க்கும் மறு பிறப்பு முயற்சியில்லாமல் தானாகவே வரும். அப்படிக்கின்றி 'தவத்தின் முடிந்த' மறுமைப் பயன் 'பிறவாமை' என்பது பண்டிதரின் கருத்தானால் பிறப்பே இல்லாமற் போன பிறகு செல்வமும் வறுமையும் ஏது? பரிமேலழகர் தவம் செய்யாதவர்கள்தாம் ஏழைகளாகப் பிறந்தவர்கள் என்றுதானே சொல்லுகிறார். அதுவுமன்றிப் பரிமேலழகர் சொல்லுவது போல தேவனாகப் பிறப்பது தவத்தின் 'முடிந்த பயனாகப்' பண்டிதர் கருதுவதானால் அப்படி மறுபிறப்பில் தேவனாவதற்கு இல்லறமே போதும் என்றுதான் பரிமேலழகர் சொல்லிவிட்டார். ஆதலால் அதுவும் 'தவத்தின் முடிந்த பயன்' ஆகாது. அதனால் 'தவத்தின் முடிந்த மறுமைப் பயன்' என்று பண்டிதர் சொல்லுவது எதனை என்று விளங்கவில்லை. ஆனால், பரிமேலழகர் உரைதான் பொருத்தமானது என்று பண்டிதர் சொல்லுவதால், பண்டிதரும் 'தவம் செய்வதன் பயன் பணக்காரனாகப் பிறப்பதுதான்' என்று கொண்டதாகத்தான் அனுமானித்துக் கொள்ள வேண்டும். 'மறுமையின் பயன்' இதுவானால் இனி பண்டிதர் சொல்லுகின்ற 'இம்மை யின்பம்' என்னவென்று பார்ப்போம். 'தவஞ் செய்யாதவருக்கு இம்மையின்பமும் இல்லை' என்கிறார். 'இம்மை யின்பம்' என்பதற்கு இந்தப் பிறப்பில் மனைவி மக்களோடு சுகமான வாழ்க்கை நடத்துவது என்பதுதான் அர்த்தம். 'தவம் செய்யாதவருக்கு இம்மை யின்பம் இல்லை' யென்பதற்குப் 'போன பிறப்பில் தவம் செய்யாதவருக்கு இந்தப் பிறப்பில் மனைவி மக்களோடு சுகமாக வாழ்கின்ற இன்பம் கிடைக்காது' என்பது பண்டிதரின் கருத்தானால், இதற்கு முன்னால் 'மறுமையின் பயன்' என்பதற்குச் சொன்ன நியாயங்களே இதற்கும் பொருந்தும். ஏனென்றால் இந்த ஜன்மம், போன ஜன்மத்துக்கு, 'மறுமை'தானே? ஆகவே ஒருவன் இந்தப் பிறப்பில் செல்வமுடையவனாக மனைவி மக்களோடு வாழும் இம்மையின்பத்தை அனுபவிக்க

அவன் போன பிறப்பில் தவம் செய்தவனாக இருக்க வேண்டும். அதேபோல் அடுத்த பிறப்பில் இன்பமனுப விக்க இப்பிறப்பில் தவம் செய்யவேண்டும். அதற்கடுத்த பிறப்பில் இன்பம் அடைய விரும்பினாலும் அப்படியே. எனவே, ஒவ்வொரு பிறப்பிலும் தவம் செய்வதால் அவனடையும் பயன் அடுத்த பிறப்பில் பணக்காரனாகப் பிறந்து சுகமாக வாழும் இன்பந்தான். இதுதானா தவத்தால் அடையும் பயன்? இதற்குத்தானா உண்டி சுருக்கி, வெயிலில் நின்று, மழையில் நனைந்து, பனியில் நடுங்கித் துன்பம் பொறுத்துப் பிற உயிர்களை ஓம்பும் தவத்தைச் செய்தது? ஜன்மங்கள் தோறும் மனைவி மக்களோடு இம்மையின்பத்தை அனுபவித்துக்கொண்டேயிருந்தால் 'பிறப்பினை யஞ்சி வீடு பேற்றின் பொருட்டுத்' துறவறம் மேற்கொண்டது என்னாவது? துறவு பூண்டு தவம் செய்யாமல் இல்லறத்தைச் சரியாக நடத்தினாலே பரிமேலழகர் சொல்லுகிறபடி இந்திரலோகத்தில் ஒரு தேவனாகப் பிறந்து தேவப்பெண்ணை மணந்துகொண்டு இங்கே சொல்லப்பட்ட இம்மையின்பத்தைவிட மிக மேலான போகங்களை அனுபவிக்கலாமே!

ஆதலால், 'தவம்' என்ற அதிகாரத்துக்குப் பரிமேலழகர் தந்துள்ள உரை மிகவும் தவறானது என்று திருக்குறளே காட்டுகின்றது. தலைசிறந்த மெய்ஞ்ஞான நூலாகிய பகவத்கீதை மெய்ப்பிக்கின்றது. புராணங்களும் இதிகாசங்களும் போதிக்கின்றன.

மேலும் இத்தப் பண்டிதரவர்கள், 'வள்ளுவர் கருத்துக்கள் எல்லாம் மனக்கருத்தையும் அளவையும் காலத்தையும் கடந்து நிற்கும் இயல்பின. ஆகவே, வள்ளுவர் திருவுள்ளத்தை எவருமே முற்ற முடியக் கண்டறிந்துவிட்டார் எனக் கூற முடியாது' என்கிறார். இப்படிச் சொல்வது திருக்குறளைப் பயனற்றதாக்கிவிடக் கூடியது. இது திருக்குறளுக்கு யார் எப்படி வேண்டுமானாலும் உரை சொல்லலாம் என்பதற்குத்தான் உதவியாகும். வள்ளுவரின் திருவுள்ளத்தை முற்ற முடியக் கண்டறிய முடியாத இடங்கள் திருக்குறளில் இருக்கலாம். அவைகளையும் திருக்குறளை ஒட்டியே ஆராய்ந்து பார்த்தால் வள்ளுவரின் திருவுள்ளம்

புலப்படாமற் போகாது. எப்படியானாலும் வள்ளுவருடைய திருவுள்ளத்தை முற்ற முடியக் கண்டறிய முடியாத இடங்கள் மிகமிகவும் சொற்பம்தான். அப்படிப்பட்ட இடங்கள் இருப்பதாகவே கொண்டாலும் அவற்றைப்பற்றி நாம் சொல்லப்புகவில்லை. வள்ளுவருடைய திருவுள்ளத்தை ஆதாரபூர்வமாக அவர் சொற்களைக்கொண்டே கண்டறியக் கூடிய விஷயங்களைப்பற்றி மட்டும்தான் சொல்லப் புகுந்தது. வள்ளுவருடைய திருவுள்ளத்தை எளிதிற் கண்டறியக்கூடிய சில இடங்களை எடுத்துக் காட்டுவோம்.

1. 'அறன் வலியுறுத்தல்' என்ற அதிகாரத்தின் முதற்குறள்,

> சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
> ஆக்கம் எவனோ உயிர்க்கு

என்பதிலுள்ள, 'சிறப்பு' என்ற சொல்லுக்கு 'வீடுபேறு' என்ற பொருளும் 'செல்வம்' என்ற சொல்லுக்கு 'தேவலோகம்' என்ற பொருளும் வள்ளுவருடைய திருவுள்ளம் எண்ணிய பொருள்கள் அல்லவென்பது கண்டறிய முடியாத விஷயமா ?

2. 'மக்கட்பேறு' என்ற அதிகாரத்தின் பெயர் 'புதல்வரைப் பெறுதல்' என்று வேண்டுமென்றே மாற்றப் பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தின் பத்துக் குறள்களிலும் 'புதல்வர்' என்ற பதமே இல்லை. 'மக்கள்' என்ற பதந்தான் இருக்கிறது. ஆகையினால் 'புதல்வரைப் பெறுதல்' என்ற பெயர் வள்ளுவரின் திருவுள்ளத்தைச் சேர்ந்தது அல்லவென்பது கண்டறிய முடியாத விஷயமா?

3. இந்த 'மக்கட்பேறு' என்ற அதிகாரத்தின் முதற்குறள்,

> பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
> மக்கட்பேறு அல்ல பிற

என்பதற்குப் பொருள் சொல்லும் பரிமேலழகர், 'அறிவறிந்த மக்கள் என்பது ஆண்மக்களைத்தான் குறிக்கும் பெண் மக்களைக் குறிக்காது' என்று சொல்லுவது வள்ளுவரின் திருவுள்ளத்தைச் சேர்ந்தது அல்லவென்பது கண்டறிய முடியாத விஷயமா ?

4. இதே அதிகாரத்துக்கு முன்னுரை சொல்லும் முறையில் பரிமேலழகர் 'இருபிறப்பாளர் மூவரானும் இயல்பாக இறுக்கப்படூஉங் கடன் மூன்றனுள், முனிவர் கடன் கேள்வியானும், தேவர் கடன் வேள்வியானும், தென் புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானும் அல்லது இறுக்கப்படாமையின் அக்கடனிறுத்தற் பொருட்டு நன் மக்களைப் பெறுதல்'—என்கிறார். இது, 'நன்மக்கள்' என்பது தென்புலத்தாருக்குத் திவசம் செய்யத் தகுதி யுடையவர்கள் ஆண் மக்கள்தாம் பெண்மக்களல்ல என்ற கருத்தைப் பின்வரும் குறளில் புகுத்திக்கொள்ளவென்றே பரிமேலழகர் சொல்லுவதன்றி இது வள்ளுவரின் திரு வுள்ளமாக இருக்கவே முடியாது என்பது கண்டறிய முடியாத விஷயமா ?

மேலும் இதில் 'புதல்வரைப் பெறும்' பயன் இரு பிறப்பாளராகிய பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர் ஆகிய மூவருக்குமட்டுந்தான் சொல்லப்பட்டிருக்கிறது. சூத்திரன் என்ற நான்காவது வருணத்தானுக்கு 'புதல்வரைப் பெறும்' பயன் ஒன்றுமில்லையா ? திருவள்ளுவர் எந்த இடத்திலும் பிறப்பினால் மட்டும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற கருத்தைச் சொல்லவில்லை. அவர்,

> பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்

என்றும்,

> மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
> கீழல்லார் கீழல் லவர்

என்றும்தான் சொல்லுகிறார். அவர் 'புதல்வரைப் பெறும் பயன்' இருபிறப்பாளருக்கு மட்டுந்தான் என்று சொல்லு வாரா ? அப்படிச் சொல்லுவது வள்ளுவரின் திருவுள்ளம் ஆகாது என்பதைக் கண்டறிய முடியாதா ?

5. 'வினைசெயல்வகை' என்ற அதிகாரத்தின் மூன்றாவது குறளில் 'ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே' என்பதற்கு 'வலியனாக இருக்கும்போதெல்லாம் போர் செய்து பகைவனை வென்றுவிடுவது நல்லது' என்று

பொருள் சொல்லுவது முற்றிலும் தவறு. 'வினை' என்பதற்குப் 'போர்' என்ற பொருள் வள்ளுவரின் திருவுள்ளம் எண்ணியது அல்லவென்பது கண்டறிய முடியாத விஷயமா ?

6 'கள்ளுண்ணாமை' என்னும் அதிகாரத்தின் முதற்குறள்,

> உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
> கள்காதல் கொண்டுஒழுகு வார்

என்பதற்குப் பரிமேலழகர் 'கள்ளின்மேற் காதல் செய்து ஒழுகும் அரசர் எஞ்ஞான்றும் பகைவரான் அஞ்சப்படார்; ஒளியையும் இழப்பர்' என்று பொருள் சொல்லுகிறார். இந்தக் குறளில் அரசன் என்ற சொல்லைப் புகுத்தப் பதமில்லை ; இது அரசனுக்கென்று சொன்னதல்ல. பொதுவாக எல்லா மனிதருக்காகவும் சொன்னது. இதில் அரசன் என்ற பதத்தைக் கூட்டிப் பொருள் செய்வதால் மற்றவர்கள் கள் குடிக்கலாம் அரசன் குடிக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருப்பதாகக் கொள்ள இடமளிக்கின்றது. இந்த அதிகாரம் முழுவதிலும் 'அரசன்' என்ற சொல்லைக் கூட்டிக்கொள்ள இடமில்லை. ஆகையினால் இப்படிப் பொருள் கொள்வது வள்ளுவரின் திருவுள்ளமல்ல என்று கண்டறிவது முடியாத காரியமா ?

இதைப்போலவே 'சூது' என்ற அதிகாரத்திலும் 'அரசன்' சூதாடக்கூடாது என்று பொருள் சொல்லப்பட்டிருப்பது வள்ளுவருடைய திருவுள்ளம் அல்லவென்பதை அறிவது அசாத்தியமானதா ?

'உழவு' என்ற அதிகாரம் நிலத்தில் உழுது பயிரிட்டு உணவுப் பொருள்களை உண்டாக்கும் தொழிலைப்பற்றிச் சொல்லுவது. இதில் 'உழுவார்' என்ற சொல்லைத் திருவள்ளுவர் உழுது பயிரிடுவதில் உடலுழைப்புச் செய்கின்றவர்களை மட்டுந்தான் குறிக்கிறார். ஆனால், இந்த அதிகாரத்துக்கு முன்னுரையாகப் பரிமேலழகர், இந்த உழவு 'சிறுபான்மை வணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கும் உரித்தாய உழுதற்றொழில். செய்விக்குங் கால் ஏனையோர்க்கும் உரித்து' என்கிறார்.

இந்த அதிகாரத்தின் முதற்குறள்,

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனல்
உழந்தும் உழவே தலை

இதன் கருத்து: எப்படியெல்லாம் பார்த்தாலும் ஏர்த் தொழிலால்தான் உலகத்தார் உயிர் வாழ முடியும். அதனல் பாடுள்ளதானுலும் உழவுத் தொழில்தான் தலை சிறந்த தொழில்—என்பது. ஏனென்ருல்,

உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்ருது
எழுவாரை யெல்லாம் பொறுத்து

இதன் கருத்து: உழவுத் தொழில் செய்கிறவர்கள்தாம் அந்தத் தொழிலைச் செய்யாமலும் சமுதாயத்தின் மேல் நிலையிலுள்ள மற்ற எல்லா மக்களையும் தாங்கிக்கொண்டிருக்கிறவர்கள்—என்பது. அதுமட்டுமல்ல,

உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுஉண்டு பின்செல் பவர்

இதன் கருத்து: உழவுத் தொழில் செய்கிறவர்கள்தாம் சொந்தச் சாப்பாடு சாப்பிடுகிறவர்கள். மற்றவர்களெல்லாரும் பிறருடைய தயவால் ஜீவிப்பவர்கள்—என்பது. அதனல்,

பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்

இதன் கருத்து: உழவுத் தொழில் செய்கிறவர்கள் மற்றுள்ள பல தொழில்களைச் செய்கிற எல்லாரையும் தம்முடைய ஆதரவைத் தேடிவரச் செய்கிறவர்கள்—என்பது. அதனல் உழுதொழிலைச் செய்கிறவர்கள்,

இரவார் இரப்பார்க்குஒன்று ஈவார் கரவாது
கைசெய்துஊண் மாலை யவர்

இதன் கருத்து: சொந்த உடலுழைப்பால் பாடுபட்டுச் சோறு உண்ணும் உழவுத் தொழிலாளர் பிறரிடத்தில் கையேந்த வேண்டியவர்களல்ல. தம்மிடத்தில் கையேந்துகின்ற பிறருக்கு இல்லையென்ஞமல் சிறிதேனும் கொடுப்பவர்—என்பது. உழவாளி இல்லாவிட்டால்,

உழவினர் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை

இதன் கருத்து: உழவாளியின் உழைப்பு இல்லாவிட்டால், உலக ஆசைகளையெல்லாம் விட்டுவிட்டோம் என்கிற துறவிகளும் இருக்க முடியாது—என்பது.

இந்தக் குறள்களில் சொல்லப்படுகின்ற சிறப்புகளெல்லாம் உழவுத் தொழில் செய்கின்ற உழைப்பாளிகளுக்கே உரியன. வாணிபர்க்கோ, அரசனுக்கோ, அந்தணருக்கோ, அல்லது உழவுத் தொழிலை 'செய்விக்கும் ஏனையோர்க்கோ' இதில் ஒரு சிறிதும் பங்கில்லை. திருவள்ளுவர் எந்தக் காலத்துக்கும் பொருந்தக்கூடிய சத்தியங்களை மட்டுந்தான் சொல்லுகிறார். காலத்துக்கேற்றபடி மாறிவிடக்கூடிய சம்பிரதாயங்களையெல்லாம் விலக்கியே திருக்குறளை இயற்றியிருக்கிறார். விளைநிலத்துக்குச் சொந்தக்காரராக இருப்பதைப்பற்றிய விஷயம் அடிக்கடி மாறக்கூடியது. முன் காலத்திலிருந்த முறைகளெல்லாம் மாறி இப்போது நில உடைமைக்கு வரம்பு ஏற்படுத்த வேண்டுமென்று அதற்கான சட்டங்களைப்பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. இந்த விஷயத்தில் மிகவும் தீவிரம் பேசுகின்றவர்கள நிலம் உழுகின்ற உழைப்பாளிக்குத்தான் சொந்தமாக வேண்டுமேயல்லாமல் நிலத்தில் பாடுபடாத மிராசுதாரர்களுக்குச் சொந்தமாக இருக்கக்கூடாது என்று வாதிக்கிறார்கள். காலத்தின் சூழ்நிலைக்குத் தக்கபடி இதில எது வேண்டுமானாலும் அமுலுக்கு வரலாம். அல்லது இப்போது சொல்ல முடியாத முற்றிலும் வேறான ஒரு ஏற்பாடும் வரலாம். இந்த விஷயங்கள் எப்படியெல்லாம் மாறினாலும் உழுகின்ற உழைப்பின் அவசியமும் அறன் சிறப்பும் மாறக்கூடியனவல்ல. அந்த உழைப்பின் சிறப்பைப்பற்றி மட்டுந்தான் இந்த அதிகாரம் சொல்லுவது என்ற வள்ளுவரின் திருவுள்ளம் தெளிவாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட இடங்களிற்கூடவா வள்ளுவரின் திருவுள்ளத்தைக் கண்டறிய முடியாது ?

## குறள்களுக்குள் உள்ள தொடர்பு

திருக்குறளில் உள்ள ஒவ்வொரு அதிகாரமும் அந்த அதிகாரத்தின் பெயர் எந்த விஷயத்தைக் குறிக்கிறதோ அதைப்பற்றி மட்டுந்தான் பேசுகின்றது. அதிகாரத்தின்

பெயருக்கு என்ன பொருளோ அந்தப் பொருளுக்கு உரிய எல்லைக்குள் நின்றுதான் அந்த அதிகாரம் சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அதிகாரத்திலும் அதன் முதற் குறள் அந்த அதிகாரம் எதைப்பற்றிச் சொல்லுவது என்றதைச் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறது. மற்ற ஒன்பது குறள்களும் அந்த முதற் குறளில் சொல்லப்பட்ட பொருளின் இலக்கணங்களை வெவ்வேறு கோணங்களில் நின்று விளக்குவன. ஆகவே, அங்குள்ள பத்துக் குறள்களும் சேர்ந்து அந்த அதிகாரத்தின் பெயர் குறிபிடுகிற பொருளைப்பற்றிய ஒரு கட்டுரை. வசன நடையில் ஒரு கட்டுரை எழுதினல் அதில் ஒரு கருத்து முடிந்து இன்னெரு கருத்தைக் கூட்டும்போது இடையிடையே 'ஆகையினல்,' 'ஆனல்,' 'ஏனென்றல்' என்பனபோன்ற சொற்களைக் கூட்டிக்கொண்டுதான் எழுதுகிறேம். மிகவும் விரிவான கருத்துக்களை மிகவும் குறைவான பதங்களுக்குள் அடக்கியிருக்கும் குறட்பாக்களில் இந்த இடைச்சொற்கள் விடுபட்டிருக்கின்றன. அதனல் இடத்துக்கு ஏற்றபடி இடைச் சொற்களைக் கூட்டிக்கொண்டால்தான் கட்டுரை விளங்கும். அப்படி இடையே கூட்டிக்கொள்ளவேண்டியது ஒரே சொல்லாகவும் இருக்கலாம், அல்லது பல சொற்களடங்கிய வாக்கியமாகவோ வாக்கியங்களாகவோ இருக்கவும் நேரலாம். அதனல் முதலில் ஒரு அதிகாரம் எதைப்பற்றிச் சொல்லுகிறது என்பதை மனதில் வைத்துக்கொண்டு அதன்படி உரை காணவேண்டும். அதன் பிறகு ஒரு குறளுக்கு முன்னுள்ள குறள் என்ன சொல்லுகிறது, பின்னுள்ள குறள்கள் என்ன சொல்லுகின்றன என்பனவற்றையும் ஆய்ந்தால்தான் சரியான பொருள் கிடைக்கும்.

அதிகாரத்தின் பெயர் குறிப்பிடுகிற பொருளை மறந்து விடுவதனல் உரை தவறிப் போவதற்கு ஒரு உதாரணம் பார்ப்போம் :

'கண்ணேட்டம்' என்ற அதிகாரம் பிறருக்கு தாட்சணியம் காட்டுவது என்பதைப்பற்றிச் சொல்லுவது. 'கண்ணேட்டம்' என்ற சொல்லுக்கு 'தாட்சணியம் காட்டுவது' என்பதைத் தவிர வேறு பதப் பொருள் சொல்ல முடியாது. தாட்சணியம் காட்டுவது என்றல் ஒருவன்

தனக்கு விருப்பமில்லாத ஒரு காரியத்தையோ அல்லது தான் செய்யத் தகாத காரியத்தையோ பிறருக்காகச் செய்துவிடுவது. குறிப்பாக, ஒருவன் ஒரு காரியத்தைச் செய்ய மறந்துவிடக்கூடிய நியாயமும் வல்லமையும் உடையவனாக இருந்தும் அதைப் பிறருக்காகச் செய்கின்றபோது தான் அது தாட்சணியம் என்ற கண்ணோட்டம் ஆகும். அப்படிக்கன்றி ஒருவன் தனக்கு விருப்பமில்லாத காரியத்தைத் தனக்குத் துன்பம் செய்துவிடக்கூடிய தன்னிலும் பலமுடையவனுக்காகச் செய்தால் அது கண்ணோட்டமாகாது. அது அச்சத்தால் செய்ததேயாகும். இந்த அதிகாரத்தின் ஒன்பதாவது குறள்,

> ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்
> பொறுத்தாற்றும் பண்பே தலை

என்பது. இதன் பொருள் : தண்டித்து ஆற்றலைக் காட்ட வேண்டியவர்களிடத்தும் தாட்சணியம் காட்டிப் பொறுத்துக்கொள்ளும் குணமே தலைசிறந்த தாட்சணியத் தன்மை என்பது. அதாவது தன்னுடைய ஆற்றலிலும் குறைந்தவனாகத் தன்னால் தண்டிக்கப்படவேண்டிய நிலையிலுள்ளவனுக்கும் தாட்சணியம் காட்டித் தண்டிக்காமல் பொறுத்துக் கொள்ளும் குணம்தான் தலையாய கண்ணோட்டம்—என்பது. ஏன் இது தலையாய கண்ணோட்டம் என்றால், கண்ணோட்டம் காட்டுவது பெரும்பாலும் தன்னுடன் பழகியுள்ளவர்களாகத் தனக்குச் சமானமான மனிதருக்குத் தான். சிறுபான்மை தன்னிலும் தாழ்ந்தவர்களுக்கும் உண்டு, ஆனால், தான் தண்டிக்கவேண்டிய நியாயமுள்ள ஒருவனுக்கும்கூட தாட்சணியம் காட்டுவது தலைசிறந்த கண்ணோட்ட குணம் எனப்பட்டது. இதுதான் இந்தக் குறளுக்கு நல்ல பொருள்.

ஆனால், இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தரும் உரையாவது : 'தம்மை ஒறுக்கும் இயல்புடையாரிடத்தும் கண்ணோட்டம் உடையராய்க் குற்றத்தைப் பொறுக்கும் இயல்பே அரசர்க்குத் தலையாய இயல்பானது'—என்பது.

இந்த உரையில் 'ஒறுத்தல்' என்ற சொல்லுக்கு 'ஒறுத்தல்' என்ற சொல்லையே அர்த்தமாகச் சொல்லிவிட்டார். 'ஒறுத்தல்' என்ற சொல்லுக்குத் திருக்

குறளில் 'தண்டித்தல்' என்ற ஒரே அர்த்தம்தான் உண்டு. அதன்படி இந்த உரை என்ன சொல்லுகிற தென்றால், 'தம்மை தண்டிக்கும் இயல்புடையாரிடத்தும் கண்ணோட்டம் உடையராய்க் குற்றத்தைப் பொறுக்கும் இயல்பே அரசர்க்குத் தலையாய இயல்பாவது' என்பது. இதுவானால் தம்மைத் தண்டிக்கும் வல்லமையுள்ளவர்கள் தம்மினும் வலியாராகிறார்கள். தம்மினும் வலியார் தம்மைத் தண்டிப்பதைப் பொறுத்துக்கொள்வது அவருக்குத் தாட்சணியம் காட்டுவதாகுமா? அது அச்சத்தால் பொறுத்துக் கொள்வதுதான். அது அரசனுக்குத் தலையாய இயல்பாகுமா? மானங்கெட்ட இயல்பல்லவா ஆகும்?

இங்குள்ள 'ஒறுத்தாற்றும் பண்பினார்' என்பது 'தம்மை ஒறுக்கும் பண்பினார்' என்பதைக் குறிப்பதல்ல. 'தாம் ஒறுக்கவேண்டிய பண்பினார்' என்பதையே குறிப்பது. 'கண்ணோட்டம்' (அதாவது 'தாட்சணியம் காட்டுதல்')என்ற அதிகாரத்தின் பெயரை ஒட்டிப் பொருள் சொன்னால் தம்மைத் தண்டிக்கக் கூடியவருடைய செயலைப் பொறுத்துக்கொள்வது 'கண்ணோட்டம்' என்பதாகாது. அதனால் ஒவ்வொரு குறளுக்கும் அது சொல்லப்பட்டிருக்கிற அதிகாரத்தின் பெயர் எதைப்பற்றியதாக இருக்கிறதோ அதற்கு ஒத்தபடி பொருள் செய்யவேண்டும்.

குறள்களுக்குள் தொடர்பு; ஒரு குறளுக்குப் பொருள் நாடும்பொழுது அந்தக் குறளுக்கு முன்னும் பின்னுமுள்ள குறள்களிலுள்ள கருத்துக்களையும் கவனித்தால்தான் திருவள்ளுவர் கருதிய பொருள் எது என்பதைக்காணலாம். இல்லாவிட்டால் ஒவ்வொரு குறளும் தனித்தனியாகத் துண்டிக்கப்பட்டு அதிகாரத்தின் நோக்கம் சிதைந்து போகும். இதற்கு இந்தக் கட்டுரையில் 'தவம்' என்ற அதிகாரத்திலுள்ள குறள்களின் தொடர்ச்சியைக் காட்டியிருப்பதே போதுமான உதாரணம்.

ஒரு குறளுக்கு அடுத்தாற்போல் அதற்கு முன்னாலும் பின்னாலும் இருக்கிற குறள்களைக் கவனிக்க வேண்டும் என்பது மட்டுமன்றி, அந்தக் குறளுக்குப் பின்னாலோ முன்னாலோ, பல குறள்களைத் தாண்டியும் பார்க்க வேண்டிய அகத்தியம் ஏற்படலாம். சில இடங்களில் ஒரு

குறளுக்கு வெகுதூரத்திலுள்ள வேறு குறள்களைக் கொண்டு அதன் பொருளை நிச்சயிக்க வேண்டும்.

பொதுவாக ஒரு குறளுக்கு உரை செய்யும்போது அந்த உரை திருக்குறளின் பண்புகளுக்குப் பொருந்துமா என்பதைக் கவனிக்கவேண்டும். கூர்ந்து பார்த்தால் எந்த உரை பொருந்தும் எது பொருந்தாது என்பதைத் தீர்மானிக்கத் திருக்குறளே வழிக்காட்டும்.

திருக்குறளின் பண்புகளுக்குப் பொருந்தாது என்று தீர்மானிக்கத் தகுந்த உரை சொல்லப்பட்டிருப்பதற்கு ஒரு உதாரணம் பார்ப்போம்.

ஒரு அரசன் முறைதவருமல் ஆட்சி புரிய வேண்டிய அறிவுகளைப் புகட்டுவதற்கென்று 'செங்கோன்மை', 'கொடுங்கோன்மை', 'வெருவந்த செய்யாமை' என்று மூன்று அதிகாரங்கள் சொல்லப்பட்டுள்ளன, இந்த மூன்று அதிகாரங்களும் அரசனுக்கென்றே சொல்லப்படுவன. அவற்றுள் 'செங்கோன்மை' என்பது எந்தப் பக்கமும் சாயாமல் செங்குத்தாக, நேர்மை கோணுமல் நடத்தப்படும் ஆட்சி. அதாவது நடுநிலைமை தவறிப் பாரபட்சம் காட்டி விடாமல் தீர விசாரித்து நீதி செலுத்துவது. அத்துடன் பயிர்களுக்கு மழை எப்படியோ அப்படி அரசன் குடிமக்களுக்குக் கருணைபொழிந்து அரசு புரியவேண்டும். தன்னுடைய விருப்பத்தின்படியே எதையும் செய்துவிடாமல் குடிமக்களுடைய விருப்பத்தையும் தழுவி ஆட்சி நடத்த வேண்டும். ஆனல் குடிகளைக் காப்பதற்காகக் குற்றவாளிகளைத் தண்டிக்கவும் வேண்டும்—இது செங்கோன்மை.

'கொடுங்கோன்மை' என்பது குடிமக்களைத் தழுவி நடக்காமல், எதேச்சாதிகாரமாக, விசாரிக்காமல் தண்டிப்பதும், நினைத்தபடியெல்லாம் புது வரிகளைப்போட்டுப் பயமுறுத்தி வசூலிப்பதும், மழையில்லாத பயிர்களைப்போல் அரசனுடைய அன்பில்லாது குடிகள் வாடும்படி செய்வதும் முதலிய குற்றங்களுடையது. இந்தக் குற்றங்களை நீக்கி அரசு நடத்தவேண்டும் என்பது இவ்வதிகாரம்.

'வெருவந்த செய்யாமை' என்பது குடிமக்கள் அஞ்சி நடுங்கும்படியான எதையும் செய்துவிடக்கூடாது என்பது. தக்கபடி ஆராய்ந்து விசாரிக்காமல் தண்டனை விதிப்பதும்.

குறைகளைச் சொல்லிக்கொள்ளத் தன்னிடம் வர விரும்பும் குடிகளைப் பார்க்க மறுப்பதும், தப்பித் தவறி அவர்களைப் பார்த்தாலும் அவர்கள் நடுங்கும்படியாகக் கடுத்தமுகங் காட்டுவதும், கடுஞ்சொற்கள் பேசுவதும், அளவுக்கு மீறித் தண்டனை விதிப்பதும் முதலிய பயங்கரமான செயல்கள் அந்த அரசனை அழித்துவிடும் என்று எச்சரிப்பது. இந்த அதிகாரத்தின் நோக்கம் மிகவும் குறிப்பாகத் தெரிவிப்பது என்னவென்றால், தன்னுடைய ஆட்சிக்கு அழிவு வந்து விடாதபடி செங்கோல் நடத்த விரும்புகின்ற ஒரு அரசன் முன்னே ' செங்கோன்மை ' என்ற அதிகாரத்தில்,

குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்

என்றபடி தன்னுடைய குடிமக்களைப் பாதுகாப்பதற்காகக குற்றம் செய்கிறவர்களைத் தண்டிக்கவேண்டிய தன் கடமையைச் செய்யும்போது அளவுக்கு மீறி மிகவும் கடுமையான தண்டனைகளை விதித்துக் குடிகள் நடுங்கும் படி செய்துவிடக்கூடாது என்ற எச்சரிக்கைதான். இந்த அதிகாரத்தின் நோக்கம் இதுதான் என்பதற்கு இதிலுள்ள சில குறள்களை இப்போதே பார்த்துவிட்டால் திருக் குறளுக்குப் பொருந்தாத உரை எது என்பது எளிதில் விளங்கும். இந்த அதிகாரத்தின் முதற்குறள்,

தக்காங்கு நாடித் தலைசெல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து

என்பது. இதன் பொருள் பரிமேலழகர் உரையின்படியே: ஒருவன் ஒரு குற்றம் செய்தால் அதைத் தகுந்த முறையில் விசாரித்து அவன் மறுபடியும் அந்தக் குற்றத்தைச் செய்யா திருப்பதற்குப் போதுமான அந்த அளவில் தண்டிப்பவன் தான் அரசனாவான்—என்பது. இதில் மறுபடியும் அவன் அந்தக் குற்றத்தைச் செய்யாதிருக்கப் போதுமான அளவுக் குத்தான் தண்டிக்கவேண்டும் என்று சொல்லப்படுவது மிகவும் குறிப்பிடத்தகுந்தது. இதுதான் ' வெருவந்த செய்யாமை ' என்பதன் இலக்கணமாக முதலிற் சொல்லப் பட்டிருக்கிறது. இதற்கடுத்த குறள்,

கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்

இதன் பொருள்: தம்முடைய அரசாட்சி நீண்டகாலம் வலிமையுள்ளதாக நடக்கவேண்டுமென்று விரும்புகின்ற அரசர்கள் ஒரு குற்றவாளியைத் தண்டிக்கும்போது பலமாக ஓங்கினாலும் இலேசாக அடிக்கவேண்டும்—என்பது. அதாவது கடுமையாகக் கண்டித்தாலும் இலேசாகத் தண்டிக்கவேண்டும்—என்பது. அடுத்த குறள்:

வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.

இதன் பொருள்: பயங்கரமான தண்டனை விதிக்கின்ற கடுங்கோலனாகிய அரசன் நிச்சயமாக விரைவில் கெட்டுப் போவான்—என்பது. அடுத்த குறள்:

இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்.

இதன் பொருள்: 'அரசன் பொல்லாதவன்' என்று குடிகளால் சொல்லப்படும் பழிச்சொல்லுக்கு ஆளான அரசனுடைய ஆட்சிக்காலம் குறுகிவிடும். அவன் விரைவில் அரசை இழந்துவிடுவான்—என்பது. அடுத்த குறள்:

அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேய்கண் டன்னது உடைத்து.

இதன் பொருள்: குறைகளைச் சொல்லிக் கொள்ளக் குடிகளால் காணக் கிடைக்காதவனாகவும், கண்டாலும் கடுகடுத்த முகம் காட்டுகின்ற அரசன் பேய்க்குச் சமானமானவன்—என்பது. இதற்கடுத்த குறள்:

கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும்.

இதன் பொருள்: கடுகடுத்த சொல்லுடையவனாகவும் தாட்சணிய குணம் இல்லாதவனாகவும் இருக்கிற அரசன், அவன் எவ்வளவு வல்லமையுள்ளவனானாலும் விருத்தியடைய மாட்டான். திடீரென்று கெட்டுப் போவான்—என்பது. ஏனென்றால்,

கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்.

இதன் பொருள்: கடூரமான சொற்களைப் பேசுவதும் அளவுக்கு மீறிய தண்டனை விதிப்பதும் ஒரு அரசனுடைய

வெற்றி வல்லமையைத் தேய்த்து ஒடித்துவிடக்கூடிய ஆயுதங்கள். அடுத்த குறள்.:

இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறின் சிறுகும் திரு.

இதன் பொருள் : அரசன் ஒருவனைத் தண்டிக்கவேண்டிய சமயத்தில் குற்றத்தின் இனத்தையும் அதைச் செய்து விட்டவனுடைய இனத்தையும் ஆய்ந்து அந்த இனத்துக்குத் தக்கபடி தண்டிக்காமல் தனக்கு வந்துவிட்ட கோபம் போகிற போக்கின்படி அளவுக்குமீறித் தண்டித்து விட்டால் அவனுடைய அரசுச் செல்வம் அவனைவிட்டு நீங்கிவிடும்—என்பது. அடுத்த குறள்,

செருவந்த போழ்தில் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்.

இதன் பொருள் : பயங்கரமான தண்டனைகளை விதிப்பதால் வரக்கூடிய தீமைகளைப்பற்றி எச்சரிக்கை கொள்ளாத அரசன் குடிகளுடைய பிணக்கத்தினால் விரைவில் கெட்டுப் போவான்—என்பது. கடைசிக் குறள் :

கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை.

இதன் பொருள் : அரசாட்சி நடத்தத் தெரியாதவர்களால் நடத்தப்படுகிற கடூரமான ஆட்சியைக் காட்டிலும் பூமிக்குப் பாரமான வேதனை வேறொன்றும் இல்லை. அதாவது அளவுக்கு மீறிய பயங்கரமான தண்டனைகளை விதிக்கும் அரசாங்கத்தைப்போல் மக்களுக்குத் துன்பந் தரக்கூடியது வேறொன்றுமில்லை—என்பதாம்.

ஆதலால் இந்த அதிகாரம் முழுவதும் செங்கோல் நடத்தவேண்டிய அரசன் எதைச் செய்யக்கூடாது என்பதை மிகவும் தெளிவாகச் சொல்லுகின்றது. மிகவும் முதன்மையாக குற்றம் செய்தவனைத் தண்டிக்கும் நோக்கம் மறுபடியும் அவன் அக்குற்றத்தைச் செய்யாதிருக்கும்படி அவனைத் திருத்துவதற்காகத்தான் இருக்கவேண்டும் என்றும் அதற்காகத் தண்டனைகளும் இலேசானவைகளாக இருக்கவேண்டும் என்றும் சொல்லப்படடது. அதுதான் செங்கோன்மைக்கு அழகு என்பதை இவ்வளவு விரிவாகவும் தெளிவாகவும் சொல்லப்பட்டிருக்க, இதற்கு ஒரு

சிறிதும் பொருந்தாமல் இதற்கு முற்றிலும் விரோதமான கருத்துக்களை 'செங்கோன்மை'க்கு உரையாகச் சொல்லப் பட்டிருக்கிறது ; எப்படியெனில் :

> கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
> களைகட் டதனொடு நேர்.

என்பது 'செங்கோன்மை' என்ற அதிகாரத்தின் கடைசிக் குறள். இதைப் பதம் பிரித்தால்—கொலையின் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ் களைகட்டதனோடு நேர்—என்ருகிறது. பதங்கள் உள்பட இதற்குப் பொருள் : 'கொலை செய்யும் கொடியவர்களை வேந்தன் தண்டிப்பது பயிர்களிலிருந்து களையை அப்புறப்படுத்துவதற்குச் சமானம்'—என்பதுதான். இதிலுள்ள 'ஒறுத்தல்' என்ற சொல்லுக்கு 'தண்டிப்பது' என்று கொள்ளாமல் 'கொன்றுவிடுவது' என்றே பொருள் கொண்டாலும் இங்குள்ளபடி பதங்களுக்குப் பொருள் 'கொலை செய்யும் கொடியவர்களை வேந்தன் கொன்றுவிடுவது பயிர்களிலிருந்து களைகளைப் பிடுங்குவதற்குச் சமானம்' என்றுதான் ஆகும்.

ஆனல், இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் சொல்லும் உரையைப் பாருங்கள் :

பதவுரை : வேந்து கொடியாரைக் கொலையின் ஒறுத்தல் = அரசன் கொடியவர்களைக் கொலையா னொறுத்துத் தக்கோரைக் காத்தல் ; பைங்கூழ் களை கட்டதனொடு நேர் = உழவன் களையைக் களைந்து பைங்கூழைக் காத்த தனோடு ஒக்கும்.

விளக்கவுரை : கொடியவரென்றது தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவியிற் கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறை கொள்வார், பிறனில் விழைவாரென்று இவர் முதலாயினரை. இவரை வடநூலார் அததாயிகளென்பர். இப்பெற்றியாரைக் கண்ணோடிக் கொல்லாவழிப் புற் களைக்கு அஞ்சாநின்ற பைங்கூழ்போன்று நலிவு பல வெய்தி உலகு இடர்ப்படுதலின், கோறலும் அரசற்குச் சாதி தருமம் என்பதாயிற்று. இவை யிரண்டு பாட்டானும் செங்கோல் செலுத்தும் வெண்குடை வேந்தற்குத் தீயார்

மாட்டு மூவகை ஒறுப்பும் ஒழியற்பால அல்லவென்பது கூறப்பட்டது.

இந்தப் பதவுரையும் விளக்கவுரையும் என்ன சொல்லு கின்றனவென்ருல் : அரசனானவன் நெருப்பு வைக்கிற வர்கள், விஷம் வைக்கிறவர்கள், ஆயுதத்தால் கொலை செய்கிறவர்கள், திருடுகிறவர்கள், வழிபறிக்கிறவர்கள், கொள்ளையடிப்பவர்கள், இன்னொருவனுடைய மனைவியின் மேல் ஆசை கொண்டவர்கள் ஆகிய இவர்களையெல்லாம் கொன்றுவிடவேண்டும். அப்படிச் செய்வது பயிர்களி லிருந்து களைகளைக் களைந்து பயிரைக் காப்பதுபோல் கொடியவர்களைக் கொன்று நல்லவர்களைக் காப்பதாகும். இக்கொடியவர்களை 'அததாயிகள்' என்று வடநூலார் சொல்லுவர். இவர்களுக்கு தாட்சணியம் காட்டாமல் கொன்றுவிடுவதே செங்கோல் செலுத்தும் வெண்குடை வேந்தனுக்கு அரச தர்மமாகும்—என்பதே.

செங்கோல் செலுத்தும் வெண்குடை வேந்தனுக்கு வள்ளுவர் சொன்ன அரசதருமம் இதுவா? எது அரச தருமமான செங்கோல் அல்லவென்று வள்ளுவர் சொல்லு கிருரோ அதுவல்லவா இது! இதுவா செங்கோன்மை? கொலைக் குற்றம் செய்யாதவர்களையும் கொன்றுவிடுவது செங்கோன்மையாகுமா? மேலே சொல்லப்பட்ட 'அத தாயிகள்' என்ற கொடியாருள் 'கருவியிற் கொல்வார்' என்பவர்கள் தாம் நேரடியாகக் கொலைக் குற்றம் செய்த வர்கள். தீ வைத்தவர்கள் நேரடியான கொலைக் குற்ற வாளிகள் ஆகமாட்டார்கள். விஷம் வைத்தவர்களும்கூட அந்த விஷம் மரணமுண்டாக்காமலிருந்தால் கொலை செய்ய முயன்றவர்களேயாவார்களன்றிக் கொலை செய்துவிட்ட வர்களாக மாட்டார்கள். வீட்டுக்கு நெருப்பு வைப்பவர் களும் விஷம் வைக்கிறவர்களும் கொலையை எண்ணித் தான் செய்கிறவர்கள் என்று அவர்களையும் கொலைக் குற்றத்துக்கு உள்ளாக்கிவிட்டாலும் வழிபறித்தவர்கள், கொள்ளையடித்தவர்கள், திருடுகிறவர்கள், பிறன் மனைவி மேல் ஆசை கொண்டவர்கள் என்ற இந்த நான்கு பிரிவின ரையும்கூடக் கொன்றுவிட வேண்டுமென்பது எந்த நீதியைச் சேர்ந்தது. வழி பறிப்பதிலும் கொள்ளையடிப் பதிலும்கூடக் கொலைகள் நேரலாம் என்ற காரணத்தைக்

கொண்டு அவர்களையும் கொன்றுவிட வேண்டுமென்றாலும் திருடினவர்களையும் பிறன் மனைவிமேல் ஆசை கொண்டுவிட்டவர்களையும்கூடக் கொன்றுவிடுவதுதான் செங்கோன்மை என்பது எப்படியாகும்?

திருக்குறளில் செங்கோன்மைக்குச் சொல்லியுள்ள முதற் குறளின்படி,

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை

நன்றாக ஆராய்ந்து தாட்சணியம் காட்டாமலும் நடு நிலைமை தவறாமலும் விசாரணை நடத்தி மந்திரிகளுடன் ஆலோசித்து நீதி நூல்களையும் கருதி நியாயம் வழங்குவதே செங்கோல் முறையாகும்—என்பதனால் ஒவ்வொரு குற்றத்தையும் தனித்தனியே ஆராய்ந்து விசாரித்தறிந்த பின்பல்லவா தண்டிக்கவேண்டும்? அதுவல்லவா செங்கோன்மை?

கொலை செய்துவிட்டவனையும்கூட அக்கொலையைப் பற்றித் தீர விசாரிக்கிறபோது அவன் கொலைத் தண்டனைக்கு உரியவனல்ல என்று தீர்மானிக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் உண்டு. அப்படியிருக்கப் பிறனுடைய மனைவியின்மேல் ஆசை கொண்டுவிட்ட ஒருவனைத் தாட்சணியமே காட்டாமல் கொன்றுதான் விடவேண்டும் என்பது எப்படி செங்கோன்மையாகும்? பிறனில் விழைவான் என்பது பிறன் மனைவிமீது ஆசை கொண்ட மனக் குற்றத்தைக் குறிப்பதாக இருக்க முடியாது. ஏனெனில் அந்த ஆசையைப் பிறர் அறிய முடியாது. அதனால் அதைக் கண்டுபிடித்துத் தண்டிக்க முடியாது. ஆதலால் இங்கே 'பிறனில் விழைவார்' என்றது பிறனுடைய மனைவியுடன் காமத் தொடர்புகள் செய்துவிட்டவர்களைத்தாம் குறிக்கும். அப்படியானால் தன் கணவனைவிட்டு வேறொருவன் தன்னுடன் காம இன்பத்தை அனுபவிக்க இடங்கொடுத்த அந்தப் பெண்ணை என்ன செய்வது? அவளுக்கு என்ன தண்டனை? அவளுக்குத் தண்டனையே இல்லாமல் இவனுக்கு மட்டும் மரண தண்டனை விதிப்பது எப்படி 'ஓர்ந்து கண்ணோடாது இறை புரிந்து யார்மாட்டும் தேர்ந்து செய்'வதான செங்கோன்மையாகும்?

இந்த உரையில் 'கொடியார்' என்று சொல்லப்பட்டுள்ள எல்லோருமே தாம் செய்த குற்றத்திற்காக வருந்தித் திருந்தக்கூடியவர்கள். மற்றவர்களை விட்டுவிட்டு 'பிறன் மனைவிழைந்தவ'னைப்பற்றி மட்டும் பேசுவோம். இவன் காமக் கொடுமையினால் ஒரு பெண்ணுடன் அக்குற்றத்தை செய்துவிட்டவன். அவனைக் 'கடிதோச்சி மெல்ல எறிந்தால்' அவன் திருந்திவிடத் தக்கவன். அவனைக் கொல்லாது விட்டுவிட்டால் அவன் ஊரிலுள்ள மற்றவர் மனைவிகளையும் கெடுத்துவிடுவான் என்று சொல்ல முடியாது. இவனைத் தண்டிக்கும்போது,

> தக்காங்கு நாடித் தலைசெல்லா வண்ணத்தால்
> ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து

என்றபடி மறுபடியும் அவன் அக்குற்றத்தைச் செய்யாதிருக்கவேண்டிய அளவுக்குத்தானே தண்டிக்கவேண்டும்?

இதைப்போலவே பசியின் கொடுமையினால் திருடிவிட்ட ஒருவனையும் திருத்தவேண்டிய நோக்கத்துடன் ஒத்த அளவில் தண்டிக்கிறவன்தான் வேந்தனாவான். இவர்களைக் கொன்றுவிடத்தான் வேண்டும் என்பது திருக்குறளின் பண்புகளுக்கு ஒரு சிறிதும் ஒவ்வாது. இந்த உரையை அடியோடு மாற்றவேண்டியது அவசியமல்லவா ?

அததாயிகள் என்று சொல்லப்பட்ட இந்த ஏழு பேரையும் கொன்றுவிடத்தான் வேண்டுமென்று வட நூல்களில் சொல்லியிருக்கலாம். அந்த வட நூல்களை நாம் குறைகூறப் புகவில்லை. வட நூல்களில் இது சொல்லப்பட்டுள்ள சமய சந்தர்ப்பங்களைப் பற்றியோ சமுதாயச் சூழ்நிலைகளைப்பற்றியோ ஆராயப் புகுவதும் இங்கே அவசியமல்ல. நாம் சொல்லுவதெல்லாம் இந்த உரையிலுள்ள கருத்துக்கள் திருவள்ளுவர் எண்ணியவல்ல. திருக்குறளிலுள்ள மற்றக் குறள்களும் இந்தக் குறளிலுள்ள பதங்களும் இந்த உரைக்கு இடந்தரவில்லை. அதுமட்டுமின்றி இந்த உரைக்கு நேர்மாறான கருத்துக்களையே காட்டுகின்றன.

பரிமேலழகர் இப்படி உரை செய்துவிட்டதற்குக் காரணம் அவர் வேறொரு நூலிலுள்ள கருத்துக்களைத்

திருக்குறளில் புகுத்திவிட்டதுதான். அதற்குப் பொருந்தும் படிக்கென்று 'கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத் தல்' என்பதிலுள்ள பதங்களை 'வேந்து கொடியாரைக் கொலையின் ஒறுத்தல்' என்று இடம் மாற்றி அடுக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. அப்படிக் கொண்டும், 'கொடியாரை' என்ற சொல்லுக்கு, அதற்குச் சொந்த மல்லாத 'அததாயிகள்' என்ற அர்த்தத்தைக் கூட்டிக் கொண்டு, 'அததாயிகள்' யாவர் என்று வட நூல்களிற் சொல்லப்பட்டதையும் சொல்லவேண்டியதாகி விட்டது. மற்ற எந்தக் குற்றத்துக்கும் அதற்கென்று ஒரு அதிகாரம் வகுக்காத வள்ளுவர் 'பிறனில் விழையாமை', 'கள்ளாமை' என்ற இரண்டு அதிகாரங்களில் பிறன் மனைவியிடம் காமம் அனுபவிப்பதையும் திருடுவதையும் கண்டிக்கிறார். இந்த இரண்டு அதிகாரங்களிலுமுள்ள குறள்களைப் பார்த்தால் இந்த இரண்டு குற்றங்களும் கொலைத் தண்டனைக்குரிய குற்றங்களாகத் திருவள்ளுவர் கருதியிருக்க முடியாது என்பதைக் காட்டும். இதில் திருடுவதைத் துறவிகளும் கூடச் செய்துவிடக்கூடிய சாதாரணக் குற்றமாகத் துறவறப் பகுதியில் வைத்திருக்கிறார்.

கொலை செய்தவர்களைக்கூடக் கொன்றுவிடத்தான் வேண்டும் என்று சொல்லக் கூசுவதுபோலக் 'கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல்' என்று கருணை தோன்றச் சொல்லுகிறார். 'ஒறுத்தல்' என்ற பதத்தை திருவள்ளுவர் 'தண்டித்தல்' என்ற பொருளில்தான் பலவிடங்களிலும் பிரயோகித்திருக்கிறார். பரிமேலழகரும் 'ஒறுத்தல்' என்ப தற்குத் தண்டித்தல் என்ற பொருளைத்தான் கொண்டார். ஆனால், மேற்சொன்ன வடநூல் கருத்தைக் கூட்டுவதற் காகக் 'கொலையின் ஒறுத்தல்' என்று மாற்றியடுக்கிக் கொண்டுவிட்டார்.

எது எப்படியிருந்தாலும் திருடிவிட்டவனையும் பிறன் மனைவியுடன் காமத் தொடர்பு கொண்டு விட்டவனையும் கொன்றுவிடுவதுதான் அரச தர்மம் என்பதை யார் எந்த நூலில் சொல்லியிருந்தாலும் திருவள்ளுவர் திருக்குறளில் சொல்லவில்லையென்பது நிச்சயமாகத் தெரிகிறது.

" இந்த 'அததாயிகள்' என்பவர்களைப் பற்றியும் அவர்களைக் கொன்றுவிடுவதுதான் அரசதர்மம் என்பதைப்

பற்றியும் சொல்லப்பட்டிருப்பது ஒரு வடமொழி நூலில் என்பதற்காக நாம் இங்கே வடமொழியின் சிறப்பைக் குறைத்துக் கூறுவதாகக் கொண்டுவிடக் கூடாது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுல் எழுதப்பட்ட அந்த வடமொழி அரசநீதி அப்போதிருந்த ஒரு , குறிப்பிட்ட சமூக சூழ்நிலைக்குப் பயன்படக்கூடிய சட்டமாக இருந்திருக் கலாம். அது எக்காலத்துக்கும் உதவக்கூடிய சத்திய ஞானமல்ல. எந்த சட்டதிட்ட சம்பிரதாயத்தையும் திருக் குறள் சொல்லுவதில்லை. வடமொழியிலுள்ள மெய்யறிவு களையெல்லாம் பண்டைய தமிழறிஞர்கள் தமதாகவே கருதிப் போற்றி வந்திருக்கிருர்கள்.

இதற்கு ஒரு வெகு நல்ல உதாரணம் மகாத்மா காந்தி யவர்களின் வாழ்க்கையால் காணலாம். காந்தியடிகள் சொன்ன ஒவ்வொரு சொல்லுக்கும் அவர் எழுதிய ஒவ்வொரு நியாயத்துக்கும் அவர் செய்த ஒவ்வொரு செயலுக்கும் நேரான போதனைகளைப் புகட்டுகிற ஒரு நூல் திருக்குறள்தான். காந்தியடிகளின் வாழ்க்கையை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது திருக்குறள். மகாத்மாவின் வாழ்க்கைக்கு அடிப்படையான கொள்கைகள் அஹிம்சை, சத்தியம் என்ற இரண்டுந்தான். மனிதப் பண்பின் உச்சநிலை இந்த இரண்டும் சேர்ந்த நற்குணம் தான் என்பதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்ட திருக்குறளில் :

ஒன்ருக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று

என்ற குறள் சொல்லுகிறது. இதன் பொருள் : மனிதனுக்கு மிகச் சிறந்த—அதற்குமேல் சிறந்தது இல்லை யெனத்தக்க—நல்ல குணம் கொல்லாமை (அஹிம்சை) ; அதற்கடுத்த நல்ல குணம் பொய்யாமை (சத்தியம்)— என்பது.

இந்தக் குறளின் அடிப்படையில்தான் திருக்குறள் முழுதும் அமைக்கப்பட்டிருக்கிறது. காந்தியடிகள் 'சத்தி யாக்ரஹம்' என்ற பேரால் சாத்வீக முறையில் அரசாங்கத் தையும் எதிர்த்துப் போராடி, உலக நலத்துக்கான நல்ல காரியத்தைச் சாதித்ததையே சுட்டிக் காட்டுவதுபோல

'வினைத்திட்பம்' என்ற அதிகாரம் அமைக்கப்பட்டிருப்பது ஒரு அற்புதம். அந்த அதிகாரத்திலுள்ள குறள்களை அங்குள்ளபடி கவனித்தால் அது காந்தீய முறையைத் தான் சொல்லுகிறது என்பதை மறுக்க முடியாது. அந்த 'வினைத்திட்பம்' என்ற அதிகாரம் என்ன சொல்லுகிறது என்று பாருங்கள். இதற்கு முந்தின அதிகாரம் 'வினைத் தூய்மை' என்பது. அது, ஒவ்வொருவனும் அவன் செய்ய நினைக்கும் காரியம் குற்றமற்றதா என்பதை ஆராய்ந்து தீர்மானித்துக்கொள்ள வேண்டும். தூய காரியந்தான் என்று நிச்சயித்துக் கொண்டபின் அதைச் செய்து முடிப்பதில் என்ன இடையூறு வந்தாலும் தளர்ந்து விடாமல் துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு காரியத்தைச் செய்து முடிக்க மனவுறுதி கொள்ளவேண்டும். அது தான் 'வினைத்திட்பம்' என்பது. இந்த அதிகாரத்தின் முதற் குறள் :

> வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
> மற்றைய வெல்லாம் பிற.

இதன் கருத்து : காரியத்தில் உறுதி என்பது மனவுறுதி தான். மற்றதெல்லாம் வேறு—என்பது. (இங்கே காரியம் என்பது தூய காரியம் மட்டுந்தான்).

அடுத்த குறள் :

> ஊறுஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
> ஆறுஎன்பர் ஆய்ந்தவர் கோள்.

இதன் கருத்து : (அந்த மன உறுதி என்னவென்றால்) நீ பிறருக்குத் துன்பம் செய்வதை விலக்கவேண்டும். உனக்குத் துன்பம் வந்தால் அதனால் பின்வாங்கிவிடக் கூடாது. இந்த இரண்டும் சேர்ந்ததுதான் ஆராய்ந்தறிந்த மேலோர் 'வினைத் திட்பம்' என்று சொல்லும் கொள்கை. (இது சத்யாக்ரகி தனக்குத் துன்பம் செய்கிறவருக்கும் திருப்பித் துன்பம் செய்யக்கூடாது என்று காந்தியடிகள் சொன்னது போன்றது) அடுத்த குறள் :

> கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை கிடைக்கொட்கின்
> எற்றா விழுமம் தரும்.

இதன் கருத்து : மேற்கொண்ட காரியத்தைச் செய்து முடிக்கிற வரையிலும் மனவுறுதியில் தளராதிருப்பதுதான்

திட்பம். ஒரு நல்ல காரியத்தை உறுதியோடு ஆரம்பித்து விட்டபின் அது முடிவதற்குள் இடையில் மன உறுதி மாறிவிட்டால் அது நீங்காத வருத்தமுண்டாக்கும். அடுத்த குறள் :

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

இதன் கருத்து : காரியத்தைச் செய்துவிடுவேன் என்று சொல்லுவது யார்க்கும் சுலபந்தான். ஆனால், சொன்ன படியே செய்து முடிப்பது எல்லாராலும் முடியாது. (இடையறாத வினைத் திட்பம் உள்ளவர்களால்தான் முடியும்)—என்பது. அடுத்த குறள் :

வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்.

இதன் கருத்து: ஒரு அரசன் செய்கின்ற துன்பங்களுக்கும் தளர்ந்து விடாமல், தாம் மேற்கொண்ட நல்ல காரியத்தை முடித்து வெற்றி பெற்ற சிறப்புடையவர்கள் உண்டு. அவர்களுடைய வினைத் திட்பம் போற்றத் தக்கது—என்பது.

(இத்தக் குறள் மிகவும் முக்கியமானது. இதை 'வேந்தன் கண்ஊறு எய்தி, வீறு எய்தி மாண்டார் வினைத் திட்பம் உள்ளப்படும்'—என்ற முறையில் பொருள் கொள்ளவேண்டும். 'வேந்தன் கண்ஊறு எய்தி' என்பதற்கு 'அரசனிடத்தில் பரிசுகள் பெற்று' என்று பரிமேலழகர் உரை செய்தது சரியல்ல. 'ஊறு' என்ற பதத்துக்குத் 'துன்பம்' என்பதுதான் பொருள். 'பரிசு' என்ற பொருள் அந்தச் சொல்லுக்கு ஒருபோதும் பொருந்தாது. 'வீறு' என்பதற்கு 'வெற்றி' என்பது பொருள். பரிமேலழகர் இந்தக் குறளுக்கு 'அரசனிடத்தில் சன்மான வரிசைகள் பெறுகிற சிறப்புகளுடைய மந்திரியின் வினைத் திட்பம் நன்கு மதிக்கப்படும்' என்று உரை செய்திருப்பது அதிகாரத்தின் நோக்கத்துக்கும் இந்தக் குறளிலுள்ள பதங்களுக்கும் ஒரு சிறிதும் பொருந்தாது). அடுத்த குறள்:

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

இதன் கருத்து : நல்ல காரியத்தை எண்ணியவர்கள் மன உறுதியுள்ளவர்களாக இருந்தால் எண்ணியதை எண்ணிய படி அடைவார்கள்—என்பது.

(அடுத்த குறள், அப்படிப்பட்ட திண்ணிய வினைத் திட்பமுடையவர்கள் உருவத்தில் சிறியவர்களாகவும் கண்ணுக்குக் கவர்ச்சியற்றவர்களாகவும் இருக்கலாம் என்று காந்தியடிகளின் வடிவத்தைப் போன்ற உருவத்தை வரைந்து காட்டுகிறது). அந்தக் குறள் :

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி யன்னா ருடைத்து.

இதன் கருத்து : உருளுகின்ற பெருந்தேரை அது கவிழ்ந்து விடாமல் காக்கின்ற கடையாணியைப் போல, உலக நலம் என்ற பெருந்தேரைக் காக்கும் வினைத்திட்ப முடையவர்கள் உருவத்தில் மிகச் சிறியவர்களாகவும் அழகு இல்லாதவர்களாகவும் இருக்கலாம். அவர்களுடைய உருவத்தைக் கண்டு அலட்சியம் செய்துவிடக் கூடாது— என்பது. அடுத்த குறள் :

கலங்காது கண்ட வினைக்கண் முளங்காது
தூக்கம் கடிந்து செயல்.

இதன் கருத்து : சந்தேகத்துக்கு இடமில்லாமல் நல்ல காரியம் என்று தெளிந்து மேற்கொண்ட காரியத்தில் சோர்வடைந்து விடாமல் தூக்கத்தையும் விலக்கிச் செய்ய வேண்டும். அடுத்த குறள் :

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.

இதன் கருத்து : துன்பமடைய நேர்ந்தாலும் அஞ்சி விடாமல் நன்மையுண்டாகும் காரியத்தை வைராக்கியத் தோடு செய்யவேண்டும். கடைசிக் குறள் :

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு.

இதன் கருத்து : வேறு என்ன வல்லமையுள்ளவர்களாக இருந்தாலும் நல்ல காரியத்தைச் செய்து முடிக்கும் மன வலிமை இல்லாதவர்களை உலகம் மதிக்காது.

மேலே காட்டிய குறள்களின் போதனை என்ன வென்றால் : மனிதனுக்கு மிகச் சிறந்த நல்ல குணம்

அஹிம்சை. அதற்கடுத்தது சத்தியம். செய்யப் போகிற காரியம் எதுவானாலும் அது குற்றமற்றதா என்று ஆராய வேண்டும். குற்றமற்றது என்று தெளிந்தபின் அதை விடாப்பிடியாகச் செய்து முடிக்கும் மன உறுதியை மேற்கொள்ளவேண்டும். அந்த மன உறுதி எப்படியிருக்க வேண்டுமென்ருல் தான் பிறருக்குத் துன்பம் செய்யா மலும் தனக்குத் துன்பம் வந்தால் தளர்ந்துவிடாத தாகவும் இருக்கவேண்டும். தான் மேற்கொண்ட நல்ல காரியத்தை முடிப்பதில் ஒரு அரசனுடைய எதிர்ப்புக்கு ஆளாகிவிட்டாலும் அந்த அரசன் தனக்குச் செய்யக்கூடிய துன்பங்களுக்கும் அஞ்சிவிடாமல் காரியத்தில் உறுதியாக இருக்கவேண்டும். அப்படியிருந்தால் எண்ணிய நல்ல காரியத்தை எண்ணியபடியே முடிக்க முடியும். அப்படி ஒரு அரசனையும் எதிர்த்து நல்ல காரியத்தை எண்ணியபடியே முடிக்கக்கூடிய பெரியவர்கள் பெரிய தேருக்குச் சிறிய கடையாணியைப் போல் உருவத்தில் சிறியவர்களாகவும் பார்வைக்குக் கவர்ச்சியில்லாதவர்களாகவும் இருக்கலாம். அதனுல் அவர்களை உருவத்தைக்கொண்டு அலட்சியம் செய்துவிடக்கூடாது. தூய காரியமென்றும் நன்மை பயக்கும் காரியமென்றும் தெளிந்து மேற்கொண்ட காரியத்தைச் செய்து முடிப்பதில் என்ன துன்பம் வந்தாலும் தளர்ந்துவிடாமல் தூக்கத்தையும் விலக்கிவிட்டு இடை யருது உழைப்பவர்களே வினைத்திட்பமுடையார். அவர் களைத்தான் உலகம் போற்றும்—என்பதே.

இது காந்தியடிகளின் கொள்கைகளையும் அவருடைய செயல் முறையையும் அவருடைய உருவத்தையுமே காட்டுவதாக இருக்கவில்லையா ?

காந்தியடிகள் திருக்குறளைப் படித்துவிட்டுத் தம் முடைய கொள்கைகளை வகுத்துக்கொண்டவரல்ல. அவர் தென்னுப்பிரிக்காவில் சத்தியாக்கிரகம் தொடங்கியபோது அவருக்குத் தமிழ் என்னவென்பதே தெரியாது. அங்கே யிருந்த தமிழர்கள் அவருடன் மிகவும் உண்மையாக ஒத்துழைத்ததனுல் அவருக்குத் தமிழர்களிடத்தில் ஒரு தனிப்பட்ட பாசம் வளர்ந்தது. அதனுல் அவர் இந்தியா வுக்கு வந்தபின் தமிழைக் கற்றுக்கொள்ள விரும்பி,

நன்ருகப் படிக்கவும் சிரமத்தோடு எழுதவும் தெரிந்து கொண்டார். அதனுல் அவருடைய வாழ்க்கைக்கு அடிப் படையான கொள்கைகளுக்கு வேண்டிய அறிவுகளை அவருக்குப் புகட்டியது தமிழ் மொழியாக இருக்க முடியாது. அவர் கற்றறிந்த மொழிகள் வடமொழி சம்பந்தமுள்ள குஜராத்தியும் இங்கிலீஷ்ும்தான். அவருக்கு அஹிம்சை, சத்தியம் என்பனவற்றைப் பற்றிய தத்துவங்களைப் புகட்டியது வடமொழி ஞானமாகத்தான் இருந்திருக்க முடியும்.

காந்தியடிகள் பிறப்பதற்கு இரண்டாயிரம் ஆண்டு களுக்கும் முன்னுலேயே அவர் வாழ்ந்து காட்டிய சாந்த சத்திய சன்மார்க்கத்தையும் அவருடைய செயல் முறை யாகிய சத்தியாக்ரக வினைத்திட்டத்தையும் அவருடைய உருவத்தையும் அப்படியே காட்டுவதுபோல் திருக்குறளில் அமைந்திருப்பது எப்படி ?

எப்படியென்ருல் வடமொழியோ, தென்மொழியோ, பிறமொழியோ எந்த மொழியின மூலமாகவோ இமயம் தொட்டுக் குமரி முனையையும் கடந்து, இலங்கையின் தெ சோடி வரையிலும்கூட இந்திய நாட்டில் இரண்டயிர ஆண்டுகளுக்கும் முன்னுலும் பரவியிருந்த நல்லறிவு சாந்த சத்திய சன்மார்க்கம்தான்.

அதனுல் சரித்திரத்திற்கு எட்டாத காலத்திலிருந்து இந்திய நாட்டில் வளர்ந்து வந்திருக்கிற மெய்யறிவின் வடிவமே திருக்குறள். அரசியல் முறையிலும், காந்தியடி களின் போதனைகளைப் பின்பற்றி ஸ்ரீ ஜவஹர்லால் நேரு இன்று நடத்திவரும் பகைமையற்ற அரசுமுறைதான் திருக்குறள் போதிப்பது. அப்படிப்பட்ட திருக்குறளுக்கு உரை செய்தவர்கள், திருக்குறள் விலக்கவேண்டுமென்றே சொல்லுகிற போரை, அது இல்லாத குறள்களில் புகுத்தி உரை செய்துவிட்டதால் திருக்குறளின் ஒப்பற்ற சிறப்பும் அதன் பயனும் மிகவும் குறைந்துவிடுகிறது. எனவே, திருக்குறளுக்குப் புது உரை மிகவும் அவசியந் தான் என்பதை அறிஞர்கள் அங்கீகரிப்பார்களென்றே நம்புகின்ருேம்.

14382
O31:135:9
...ERSITY EXTENSION LIBR...
22 FEB 1961